வாசகர்களுக்கு இனிய நத்தார் மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்கள்

2017 HAPPY NEW YEAR

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்

ஆண்டு சஞ்சிகை : விச்சு – 03

14.01.2017 - 15.01.2018



தைத்திருநாள் வாழ்த்துக்கள்



சீனடி சிலம்படி

பொங்கல் விழா 2016





"எழுகதமிழ்" தமிழின எழுச்சியின் தேவை

–ஓர் அரசியல் பார்வை–



உயர் குருதி அமுக்கம்

வைத்தியகலாநிதி க.பேரானந்தராஜா



சைவப்புலவர் சு.செல்லத்துரை

அவர்களுடன் ஓர் நேர்காணல்



இலங்கையில்

தகவல் அறியும் உரிமைச் சட்டம்

வி.கு.வி.ஞானதயாளன்

விலை 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– வெளியீடு : இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளவாலை வருத்தப்படாத வாலிபர்
சங்கத்தின் வெளியீடான

நேத்திரம்

வீச்சு : 3 14.01.2017

தலைமைக்காரியாலயம்
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்
சித்திரமேழிச் சந்தி,
இளவாலை



தொலைபேசி : 0750416493, 0750416476
0773992478

இணையம் : WWW.ivvsangam.com

முகநூல் : WWW.Facebook.com/ivvsangam



நூலாசிரியர் திரு.கு.லக்ஷன்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

காப்பாளர் திரு.சி.ரிஷாந்தன்
பொருளாளர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

ஆலோசகர் திரு.நா.சுகந்தன்
செயலாளர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

அட்டைப்படம் திரு.ந.கிரிஷாந்
தலைவர்
(இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்)

மலர்குழு திரு.சி.சுமணன்
திரு.நி.கஜானன்
திரு.மு.நிறஞ்சன்
செ.அன்ரன்

அச்சுப்பதிப்பு : வைரஸ் பிறிண்டேரஸ்
இணுவில்

விலை : 100/=

நேத்திரத்தின் அடுத்த வீச்சு : 14.01.2018


## நேத்திர வீச்சினுள் .....


இளவாலை வருத்தப்படாத
வாலிபர் சங்கத்தின்
பயணச் சுவடுகள்
தொகுப்பு III
பக்கம் -11

பாரம்பரிய மருத்துவத்தில்
சூரிய நமஸ்காரத்தின் மகிமை
K.kirupakaran
பக்கம் -26

கலைத்தூது மரிய சேவியர் அடிகளார்
தே.லக்ஸ்மன்
பக்கம் -36

போதைப்பொருளும் யாழ்ப்பாணமும்
ரா.தனுசா
பக்கம் -61

சிந்தித்து செயற்படுவோம் - நாடகம்
எழுத்து : செபஸ்தி றொபின்சன்
பக்கம் -71



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் உள்ளத்திலிருந்து....



எல்லாம் வல்லா இறைவனை முதல் நினைவு கூர்ந்து சமூக பொறுப்புமிக ஒரு அமைப்பாக ஒரு சங்கமாக 3 வருடங்கள் நாம் மக்களோடு மக்களாக பயணித்திருக்கின்றோம். உயர்த்தும் கரங்கள் உதவித்திட்டம், அரும்பு கல்வி உயர்திட்டம், பண்டிகை, விழாக்கள், இரத்ததான முகாம் என தேவைகள் இங்கு நிரப்பு படாமலோ நிவர்த்தி செய்ய படாமலோ இருப்பது கண்டறியப்பட்டு எம் பயணம் முன்னெடுக்கக்ப்பட்டுகொண்டு வருகின்றது. அந்தவகையில் எமது கிராமத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு அங்கமாக எம்சிரா மாணவ மாணவர்களினது ' அறிவு ஆற்றல்களையும் கலைஞர்களையும் கலைத்துவத்தன்மையும் வெளிக்கொணர வேண்டியதும், எமது தலையாய கடமையே இளவாலை என்றும் கிராம வரையறையை உள்ளடக்கியதாக எமது கிராமத்தில் வாழ்ந்த வாழ்ந்து கொண்டிருக்கின்றார்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்ற ஆக்கங்களினைப் தொடுப்பதாக இந்த வருடமும் 3வது ஆண்டு சஞ்சிகையாக வெளியிடப்படும் "வானலையூர் வலிபரின்" நேத்திரம் வெளிவருவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன். இந்த வகையில் இந்த சஞ்சிகை முழு உருப்பெற ஆக்கங்கள் வழங்கியவர்கள். தொகுத்தாலர்கள், மலர்குழுக்கும் இளவாலை வருத்தப்படாத வாலிபச் சங்கத்தின் தலைவர் என்ற வகையில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்து கொள்கின்றேன்.

ந.கிரிஷாந்
தலைவர்
இளவாலை வருத்தப்படாத வலிபர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியரின் பேனா முனையிலிருந்து.....



தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாளில் பொங்கள் சுவையுடன் இன்னொரு சுவையாக வானலயூரின் வாலிபரின் நேத்திரம் என்னும் சஞ்சிகையினை மூன்றாவது தடவையாக வெளியிடுவதற்கு நூலாசிரியர் என்ற வகையில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

எங்களுடைய வருத்தப்படாத வாலிபர் சங்கமானது தனது 3ம் ஆண்டை சிறப்பான முறையில் முடிவு செய்து 4ம் ஆண்டைநோக்கி தனது பயணத்தை தொடரும் இவ் வேளையில் வானலையூரின் பெருமைகளையும் வாலையூரின் கலைஞர்களையும் வெளிக்கொணரும் முகமாக எங்களுடைய நேத்திரம் சஞ்சிகையினை வெளியிட்டு வருகின்றோம்.

இவ் சஞ்சிகையானது சிறுவர்கள் ஆக்கம் முதல் பெரியவர்கள் ஆக்கம் வரை உள்ளடக்கப்பட்டுள்ளது. அத்துடன் எமக்கு வாழ்க்கைக்கு தேவையான பல விடையங்களுடனும் பகிர்ந்து கொள்ளக் கூடிய விதத்தில் இவ் சஞ்சிகை உருவாக்கம் பெற்றுள்ளது.

இணையமயமாகி கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பத்திரிகையை வாசிக்க நேரத்தினை ஒதுக்க முடியாமல் எமது வாழ்க்கையினை நகர்த்தி வரும் நேரத்தில் ஒருமுறையாவது எமது ஊரின் பெருமையினை எடுத்தியம்பும் முகமாக வெளிவரும் இவ் சஞ்சிகையினை வாசிப்பதன் மூலம் எம் ஊரின் சிறப்புக்களையும் கலைஞர்களையும் நாம் அறியக்கூடியதாக இருப்பதுடனும் அவர்களை ஊக்கக் கூடிய விதத்திலும் செயற்பாடுகளை நகர்த்தி எமது ஊரினை வளமான முறையில் ஓர் வினைதிறன் உடைய ஓர் ஊராக மாற்றுவதற்கு இச் சஞ்சிகை ஓர் உந்துகோலாக இருக்கும் எனவும் நம்புகின்றேன்.

அத்துடன் இச் சஞ்சிகையானது சிறுவர்கள் கூட வாசிக்க கூடியவிதத்தில் புதிர்களும், நகைசுவையும் நிறைந்த விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே எல்லோருடைய மனதினையும் திருப்திப்படுத்தும் முகமாக இவ் சஞ்சிகை அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

இனிவர இருக்கும் அடுத்த நேத்திரத்திரத்தின் பார்வை வீச்சு இன்னும் சிறப்பாக அமையும் எனவும் அதற்கு ஊர் மக்களின் பங்களிப்பும் சங்க உறுப்பினர்களும் பங்களிப்பும் முற்றாக கிடைக்கவேண்டும் என்றும். இச் சஞ்சிகையில் உள்ள தவறுகளை சுட்டிக்காட்டவேண்டும் எனவும் சஞ்சிகையினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்பாக வெளியிட எல்லாம் வல்ல இறைவனின் அருளும் கைகூட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.


அத்துடன் இச் சஞ்சிகையினை வெளியிட பூரண ஒத்துழைப்பை தந்த சங்க உறுப்பினர்களிற்கும் நன்றி கூறி இச் சஞ்சிகையினை வெளியிட என்னை நூலாசிரியராக நியமித்த எம் சங்கத்திற்கு நன்றி கூறி இவ் வாலிபரின் நேத்திரத்தின் 3ம் பார்வை வீச்சை வெளியிடுவதால் மகிழ்வடைகின்றேன்.

கு.லக்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் குருதி அமுக்கம் (hypertension)



சாதாரணமான ஒருவரின் குருதியமுக்கத்தின் அளவு 120/80 ஆகும்.குருதியமுக்கம் இரு எண் பெறுமானத்தில் குறிப்பிடப்படுகின்றது. மேல் உள்ள எண் பெறுமானம் (systolic)அதாவது குருதிக் குழாய்களில் உள்ள அமுக்கமே இதயம் சுருங்கும் போதும் கீழ் உள்ள எண் பெறுமானம் (Diastolic) அதாவது குருதிக் குழாய்களில் உள்ள அமுக்கம் இருதயம் தளர்ச்சியடையும் போதும் ஆகம். உயர் குருதியமுக்கம் என்றால் ஒருவரின் இரத்தநாடிகளில் உள்ள குருதியமுக்கம் 140/90 என்ற பெறுமானத்திலும் அதிகமாவதாகும்.எனவேஒவ்வொருவரும் குறிப்பாக 40 வயதிற்கு மேல் உள்ளவர்கள் தங்கள் குருதியமுக்கதை வருடத்தில் ஒரு தடவையாவது அளந்து குறித்து வைத்திருக்க வேண்டும். குருதியமுக்கம் 140/90 மேல் இருப்பின் வைத்தியரிடம் சென்று மேலதிக சோதனைகள் அவற்றிக்குரிய மருந்துகள் பற்றி கலந்தாலோசித்து ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் வைத்தியரிடம் ஒழுங்காகச் சென்று பரிசோதிக்க வேண்டும்.

குருதியமுக்கம் கட்டுப்பாட்டில் வைத்திருக்காவிடின் பல பாதகமான விளைவுகள் ஏற்பட்டு சடுதியான மரணங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது .எனவே குருதியமுக்கம் ஏன் ஏற்படுகின்றது. அதை எவ்வாறு கட்டுப்படுத்துவது அதைக் கட்டுப்படுத்தாவிடில் ஏற்படும் பாரதூரமான விளைவுகளைப் பற்றி நாங்கள் அனைவரும் அறிந்து கொள்வதுடன் அவற்றை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். இதையே நான் இக் கட்டுரையில் கேள்வி பதில் வடிவில் உங்களுக்கு கூற விரும்புகிறேன்.

01. How common is high blood pressure? எவ்வளவு பேர்கள் உயர்குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்?

    எமது நாட்டில் 20-25% மான மக்கள் உயர்குருதியமுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என தரவுகள் கூறுகின்றன.

01. உயர் குருதியமுக்கம் எப்படி யானவர்களுக்கு ஏற்பட வாய்ப்பு அதிகம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ♣ அதிகூடிய நிறையுடையவர்கள் பொதுவாக ஆண்களில் உடல் திணிவு எண்25இற்குமேலும் (BMI>25)பெண்களில் BMI >23 உடையவர்களுக்கு
- ♣ அதிக உப்புச்சேர்த்த உணவு உட்கொள்வோர்கள் .
- ♣ போதுமான அளவு காய்கறிகளஇ பழங்கள் உடகொள்ளாதவர்கள்.
- ♣ போதுமான அளவு உடற்பயிற்சி செய்யாதவர்கள்.
- ♣ அதிகளவு கொழுப்பு உணவு அருந்துபவர்கள்.
- ♣ அதிகளவு கோப்பி அல்லது மதுபானம் உட்கொள்பவர்கள்.

02. யார், யார் தங்களது குருதியமுக்கத்தை அளக்க வேண்டியவர்கள்?

- ♣ வயது வந்தவர்கள் (40 வயதிற்கு மேற்பட்டவர்கள்)
- ♣ சலரோகம் உள்ளவர்கள்.
- ♣ பரம்பரையில் உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள்(30 வயதிற்கு மேல்)
- ♣ அதிக உடல் பருமன் உடையவர்கள்
- ♣ புகைப்பிடிப்பவர்கள்.
- ♣ மதுபானம் அருந்துபவர்கள்.
- ♣ உடற்பயிற்சி செய்தாவர்கள்.

03. உயர் குருதியமுக்கத்திற்கான அறிகுறிகள் இல்லாது விடத்து இதனால் என்ன பிரச்சினைகள் ஏற்படும்?

சாதாரணமாக குருதியமுக்கம் உள்ளவர்களுக்கு குணம் குறிகள் பொதுவாக ஆரம்ப நிலையில் தெரிவதில்லை.ஆனால் குருதியமுக்கத்தை நாம் மேலே கூறியவாறு உள்ளவர்களுக்கு அளந்து பார்க்காமல் இருப்பின் அவர்களுக்கு சடுதியாக பல பாதகமான விளைவுகள் ஏற்படுகின்றது.

அவையாவன

- ♣ மாரடைப்பு (Aeart attack)/Angina)
- ♣ பாரிச வாதம் (stroke)
- ♣ சிறுநீரகங்கள் பழுதடைதல்
- ♣ இதயம் பலவீனமாதல் (Heart failure)
- ♣ கால்களுக்கு செல்லும் இரத்த நாடிகள் தடிப்படைந்து நடக்கும் போது கால்களில் நோ ஏற்படல் (Intermittent claudication)

எனவே நாங்கள் எங்கள் குருதியமுக்கத்தை 35-40 வயதின் பின் குறைந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடம் ஒரு தடவையாவது அளக்க வேண்டும். குருதியமுக்கம் 140/90 மேல் வரும் போது 'உங்களுடைய வைத்தியரிடம் சென்று அதற்கான சிகிச்சைகளைப் பெற வேண்டும்.சிகிச்சையின் பின் உங்கள் குருதி அமுக்கம் 140/90 குறைவாக வந்த பின்னும் தொடர்ந்து உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி குறிப்பிட்ட கால இடைவெளிகளில் உங்கள் மருந்துகள் குறித்தும், குருதிப்பரிசோதனைகள் ஒழுங்காக செய்தும, மருந்துகளை பாவிக்கும் அளவு பற்றியும் அறிந்து நடக்க வேண்டும்.ஒரு போதும் எங்கள் குருதியமுக்கம் (நோமல்), றைந்து விட்டது என்று மருந்துகளையோ உணவுக்கட்டுப்பாட்டுக்களையோ உடல் பயிற்சிகளையோ நிறுத்தக் கூடாது. இதனால் பல பின்விளைவுகளுக்கு ஆளாகநேரிடும்.

05. Risk factors for cardio vascular diseases

குருதியமுக்கம், இருதய வருத்தம், குருதிக்குழாய்களில் ஏற்படும் தடைகள் (Athero sclerosis) போன்றவற்றுக்கான அபாயகரமான காரணிகள் எவை என்று பார்ப்போம்.

Life stule risk factors that can be prevented or changed

வாழ்க்கை முறையில் ஏற்படும் பயங்கரமான காரணிகள்.

- ♣ புகைத்தல் (smoking)
- ♣ உடற்பயிற்சியின்மை (lack of physical activity sedentry life style)
- ♣ உடல் பருமன் அதிகரிப்பு (obesity)
- ♣ Unhealthy diet (உப்பு, இனிப்பு, கொழுப்பு கூடிய உணவுகள்)
- ♣ மதுபானம் (alcohol)

06. Treatable or partly tretable rick factors

(சிகிச்சை அளிக்கக் கூடிய பாதகமான காரணிகள்)

- ♣ High blood pressure
  (உயர் குருதியமுக்கம்)
- ♣ High cholesterol blood level
  (குருதியில் கொலஸ்ரோலின் அளவு அதிகரித்தல்.)
- ♣ Diabeties
  (நீரிழிவு /சலரோகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Kidney diseases that affect kindey function**

01. Fixed risk factors –one's that you can not alter

*(மாற்றம் செய்ய முடியாத பாதகமான காரணிகள்)*

- பரம்பரையில் காணப்படும் நோய்கள்
- சலரோகம் hypertension heart attack போன்றன தாய,தகப்பன் அல்லது மாமா, மாமிக்கு இருப்பின் பிள்ளைகளுக்கு இந்நோய்கள் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம்.எனவே இவர்கள் குறைந்த வயதில் இருந்தே 30-35 இருந்து தங்கள் குருதியமுக்கத்தை அளத்தல் வேண்டும்.
- Being male- *(ஆண்களாக இருத்தல்)*
- An early menopause in woman *(குறைந்த வயதில் மாதவிடாய் தடைப்படல்)*
- Age- *வயது அதிகரித்தல்.*
- Ethnicgroup- *ஆசியாவில் பிறந்தவர்கள்.*

06.Do I need any further test?

*எனக்கு உயர்குருதியமுக்கம் இருப்பின் வேறு என்ன பரிசோதனைகள் தேவை?*

- Urine test to check protein or blood in urine
- A blood test to check that your kidneys are working fine and to check your cholesterol level and glucose level
- A heart –tracing called an eledctro cardio gram (ecg)

The purpose of the examination and test test is to

- Rule out or diagnose a secondary cause of high blood pressure such as kideny disease
- To check to see if the high blood pressure has affected the heart
- To check for other risk factors such as a high cholesterol level or diabetic

07) How can blood pressure be lowered?

*(எனது உயர்குருதியமுக்கத்தை எவ்வாறு குறைக்கலாம்.)*

இரண்டு முறைகளில் குருதியமுக்கதை குறைக்கலாம்.

- வாழ்க்கை முறையில் மாற்றத்தை கொண்டு வருதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மருந்துகள் பாவிப்பதன் மூலம்
- வாழ்க்கை முறையில் செயல்படுத்தக் கூடிய முறைகள் பற்றி பார்ப்போம்

01. உங்கள் நிறையை உங்கள் உயரத்திற்கு ஏற்றவாறு வைத்தல் உதாரணமாக உங்கள் உயரம் 160Cm எனின் அதில் இருந்து 100ஐ கழப்பதன் மூலம் உங்கள் நிறை 60 kg-5kg ஆக இருத்தல் நன்று அல்லது **BMI** 23-25 க்குள் இருத்தல் நன்று.

02. ஒழுங்கான தேகப்பயிற்சி

குறைந்தது 30 நிமிடங்கள் கிழமையில் 5 நாட்கள் அல்லது 60 நிமிடங்கள் குறைந்தது 3 நாட்கள் செய்யலாம்.

உதாரணம்

- விரைவாக நடத்தல்
- நீந்துதல்
- விளையாடுதல்
- சைக்கிள் ஓடதல்

3. Eat a healthydiet

(உடலுக்கு உகந்த உணவு வகைகளை உண்ணல்)

- At least five portions of varirety of fruit and vegetable per day.

  ஒரு நாளைக்கு குறைந்தது 250gram மரக்கறிகளும் 150 gram பழவகைகளும் ஒருவர் தமது உணவில் சேர்த்தல் நன்று.
- கோதுமை மா, அரிசி மா, உணவுவகைகளை தவிர்த்து ஆட்டா மா, குரக்கன் மா, கடலைவகைள்இதானிய வகைகள், உழுந்து என்பவற்றில் உணவுகளை தயாரித்து அருந்துதல் நன்று.
- கொழுப்பு உணவுகளை தவிர்த்தல்.
- 2-3 portion of fish per week
- If you eat meat it is best to eat lean meat
- நல்லெண்ணை, சூரியகாந்தி எண்ணெய்களை பாவித்தல் (பொரிப்பதை தவிர்த்து வதக்கி உணவுகளை ஆக்கி உண்ணல்)
- உப்பின் அளவை குறைந்தளவு குறைத்தல்.

**Note** - (உப்பு அதிகமாக உணவல் சேர்வதால் உயர் குருதி அமுக்கத்தை குறைப்பது கடினம்.)

- கோப்பி, தேநீர் அருந்துவதை குறைத்தல்.
- மதுபானம், சிகரட் பாவனைகளை முற்றாக தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.Treatment with meditioin

மருந்துகள் மூலம் குருதியமுக்கத்தை கட்டுப்படுத்துதல் ஒருவருடைய குருதியமுக்கம் வாழ்க்கை முறைகளில் மாற்றத்தின் பின்னரும் அதிகமாக இருப்பின் (>140/90) மருந்து வகைகள் பாவிக்க வேண்டி வரும் உங்கள் வைத்தியரின் ஆலோசனைப்படி மருந்துகளை ஒழுங்காக எடுக்க வேண்டும்.

8.What is the target blood pressuer to aim for?

உங்கள் குருதியமுக்கத்தை எவ்வளவுக்கு குறைவாக வைத்தல் வேண்டும்?

சாதாரணமாக உயர்குருதியமுக்கம் உள்ளவர்கள் தங்கள் குருதியமுக்க அளவை 140/90 குறைவாகவும் சலரோகம் உள்ளவர்கள் 130/85 குறைவாகவும் சீறுநீரக பாதிப்புள்ளவர்கள் 120/80 குறைவாகவும் வைத்திருப்பது நன்று.(வைத்திய ஆலோசனையைப் பெறவும்)

9. How long is meditation needed for?

எவ்வளவு காலம் மருந்துகள் எடுக்க வேண்டும்?

அநேகமாக உங்கள் வாழ்க்கை காலம் முழுவதும் நீங்கள் மருந்துகள் உணவுக்கட்டுப்பாடுகள் அப்பியாசங்கள் செய்தல் வேண்டும்.

உங்கள் வைத்தியரின் ஆலாசனைப்படி நடக்கவும் இவற்றுடன் நாங்கள் முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டியது என்னவென்றால் மன அழுத்தத்தை குறைத்தல் வேண்டும்.இதங்காக கோயிலுக்கு குடும்பமாக போதல், தியானம் செய்தல், நல்ல பொழுது போக்குகளில் ஈடுபடுதல், மனதை அமைதியாகவும் இறைசிந்தனையுடனும் நல்ல எண்ணஙடகளுடனும் வாழப்பழகுவோமானால் உயர்குருதியமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்து பாதகமான பக்க விளைவுகளில் இருந்து விடுபட்டு நலமாக வாழ முடியும்.

Dr.t.பேரானந்தராசா
பொது வைத்திய நிபுணர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை வருத்தப்பாடாத வாலிபர் சங்கத்தின் பயண சுவடுகள் ஒரு தொகுப்பு

ஊடகக்குழு
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம்

நகைச்சுவை சங்கமென ஆரம்பித்து இன்று சமூகசேவைகள்,கல்விசெயரிட்டங்கள் ,சமூக செயற்திட்டங்கள், பொருளாதார நலிவடைந்த, போரால் பாதிக்கபட்ட உறவுகளுக்கான வாழ்வாதார உதவிகள், விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் என பலதரபட்ட சமூக/கலாசார முன்னேற்ற செயற்பாடுகளில் தடம் பதித்து இளைஞர்களின் முன் உதாரணிகளாகவும், இன அக்கறையுடையவர்களாகவும் செயற்பட்டுக்கொண்டு எமது மூன்றாவது ஆண்டினை இன்றுடன் பூர்த்தி செய்வதில் பெருமைகொள்கின்றோம். இச்சங்கத்தில் உறுப்பினராக இருக்கும் ஒவ்வொருவருக்கும் இந்த பெருமை சேரும் என்பதில் ஐயமில்லை! இதற்கு ஒத்துளைத்த நலன்விரும்பிகள், ஆதரவாளர்கள், கிராமத்தவர்கள் என அனைவருக்கும் இச்சந்தர்பத்தில் நன்றி கூறி நிற்கின்றோம்.

27/11/2015 தொடக்கம் 28/10/2016 வரையான காலபகுதிக்க்குரிய அறிக்கை வருமாறு

**சங்க நிர்வாகம்**

ஆண்டு தோறும் எமது சங்கத்தின் நிர்வாகம் புதிதாக சங்க உறுப்பினர்களால் தெரிவு செய்யபடுகின்றது. கடந்த 27.11.2015 அன்றையதினம் தெரிவு செய்யபட்டதற்கு அமைய நடப்பாண்டு நிர்வாமாக

| | | |
|---|---|---|
| தலைவர் | : | நடராஜா கிரிஷாந் |
| செயலாளர் | : | நாகேந்திரன் சுகந்தன் |
| பொருளாளர் | : | சிவபாலசுந்தரம் ரிஷாந்தன் |
| உபதலைவர் | : | முருகையா நிறஞ்சன் |
| உபசெயலாளர் | : | மங்களேஸ்வரன் மரியநாயகம் |
| அமைப்பாளர் | : | இராசநாயகம் ஸ்ரீகுமரன் |

ஆகியோர் செயற்பட்ட வண்ணம் உள்ளனர் ,மேலும் மொத்தமாக 40 சங்க உறுப்பினர்களும், 6 ஆலோசனைக்குழு உறுப்பினர்களும், 5 சிரேஷ்ட உறுப்பினர்களுமாக இயங்கிவருகிறது சங்கம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க உறுப்பினர்களுக்கு சிலபடியான கட்டுகோப்புகளும் விதிமுறைகளும் விதிக்கபட்டள்ளது, அவற்றை மீறுவோர் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படும்!

- ♣ சங்க உறுப்பினர்கள் மதுபாவனை புகைத்தல் என்பவற்றை நிறுத்த வேண்டும் அல்லது முற்றாக குறைக்க வேண்டும்
- ♣ சங்கத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலான எந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபட கூடாது
- ♣ தமது பிறந்த தினங்களின் போது வீண் ஆடம்பர செலவுகளை குறைத்து பொருளாதார குறைவான மாணவர்களுக்கு கற்றல் உபகரணம் வழங்கல் முதலான பயனுள்ள உதவித்திட்டங்கள், முன்னெடுக்க வேண்டும்!!

## செயற்திட்டங்களும் சேவைகளும்

எமது இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கமானது பலதுறைகளிலும் தனது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது அந்தவகையில்

1. உயர்த்தும் கரங்கள் திட்டம் – ஸ்ரீகுமரன் தலைமயில் இயங்கிவரும் இந்த செயற்திட்டத்தின் மூலமாக உள்நாடு யுத்தத்தினாலும், இயற்கையாலும் பாதிக்கபட்டு பொருளாதார நலிவுடன் இருக்கும் குடும்பங்களுக்கு அவர்களின் குடும்ப நிலைமையை உயர்த்தி வைக்க எம்மால் இயன்ற நிதிவளங்களை பெற்று உதவிகளை மேற்கொள்கின்றோம்.

தினம் தோறும் எமக்கு ஏராளமான உதவி வேண்டுகோள்களும் விண்ணப்பங்களும் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து கிடைக்கின்றது, அவற்றை சேகரித்து அவற்றின் தேவையின் தன்மையயிம் அவசரத்தையும் அறிந்து தர படுத்தி உண்மை நிலவரங்களை உறுதி செய்து உதவிகளை வழங்குகிறது இந்த உயர்த்தும் கரங்கள் செயற்குழு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடப்பாண்டில் "உயர்த்தும் கரங்கள்" செயர்த்திட்டத்தின் வழங்கப்பட்ட உதவிகள்

**வாழ்வாதார உதவிகள் :**

1. வெள்ளாங்குளம் பகுதியில் வசித்துவரும் போரினால் கண் பார்வை இழந்த முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்தை நேரில் சந்தித்து,அவரின் குடும்பத்தின் நலிவான பொருளாதார நிலமையை உறுதி செய்து அவரின் குடும்பத்தின் வாழ்வாதரத்திற்கு கோழிகளை வளர்பதற்காக ரூபா 15000/= பணத்தையும் அவரின் பிள்ளைகட்கு ஒருதொகுதி கற்றல் உபகரணங்களையும்,பாடசாலை காலணிகளையும் வழங்கியது.

2. போரில் கையை இழந்து, தொழில் எதுவும் செய்யமுடியாது வாழ்ந்துவருவதுடன், அங்கவூனமான குழந்தையுடன் நலிவான குடும்ப பொருளாதராத்துடன் கிளிநொச்சி தேவிபுரம் பகுதியில் வாழ்ந்து வரும் முன்னாள் போராளியின் குடும்பத்தின் பிள்ளைகளிற்கு கற்றல் உபகரணங்களும் அவர்கள் சுயதொழில் முயற்சியாக கோழி வளர்பதற்கென ரூபா 15000/= பணமும் வழங்கப்பட்டது!

3. கிளிநொச்சி மூங்கிலாறு பகுதியில் 3 பிள்ளைகளுடன் இரு கண்களின் பார்வையும் முற்றாக இழந்த நிலையில், தொழில்கள் எதுவும் செய்யமுடியாது வாழ்கைசெலவுக்காக ஏங்கி நிற்கும் முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்திற்கு உதவ யாழ் இந்துக்கல்லூரியின் 2009 உயர்தர பிரிவு நண்பர்கள் முன்வந்தனர்! இதன்படி இவர்கள் இணைந்து ரூபா 28000/= பணத்தை வழங்கினர், மிகுதி பணத்தில் ரூபா 15000/= இனை புலம்பெயர்ந்து வாழ்ந்து வரும் முகநூல் அன்பர் ஒருவர் வழங்கினார், மிகுதி ரூபா 7000/= இனை எமது சங்க சேமிப்பில் இருந்து பெற்று ரூபா 50000/= பெறுமதியான 7 போத்தல் பால் வழங்க கூடிய பசுமாட்டையும் கன்றையும் வழங்கினோம்!

இந்த சந்தர்பத்தில் இந்துக்கல்லூரியின் 2009 உயர்தர பிரிவு நண்பர்களுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கினறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. போரினால் இரு கண்களின் பார்வையையும் முற்றாக இழந்து கிளிநொச்சி உடையார்கட்டு பகுதியில் 3 பிள்ளைகளுடன் வாழ்ந்து வரும் முன்னாள் போராளி ஒரவரின் குடும்பத்திற்கு எமது சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்" திட்டத்தின் கீழ் துவிசக்கரவண்டி வழங்கபட்டது!

5. முல்லைத்தீவு பகுதியில் தந்தையை போரில் இழந்து அன்றாட வாழ்க்கைசெலவுக்காகபோராடும் முன்னாள் போராளி ஒருவரின் குடும்பத்துக்கு, பிள்ளைகள் பாடசாலை செல்வதற்காகவும், அன்றாட தேவைகளை பூர்த்தி செய்வதர்க்காகவும் எமது சங்கத்தின் "உயர்த்தும்கரங்கள்" திட்டத்தின் கீழ் துவிசக்கர வண்டி வழங்கபட்டது!

இதனை எமது சங்கத்தின்"உயர்த்தும் கரங்கள்" விசேட செயற்குழு உறுப்பினர்கள் நேரில் சென்று குடும்ப நிலவரத்தை உறுதி செய்து துவிசக்கர வண்டியை வழங்கிவைத்தனர்

6. யாழ்.மருதங்கேணி பகுதியில் குடிசை ஒன்று முற்றாக தீவிபத்துக்கு இலக்காகி, வீட்டு உபகரணங்கள் மற்றும் அனைத்து பொருட்களும் முற்றாக தீக்கிரையாகியுள்ள நிலையில் குறித்த இடத்துக்கு உடனடியாக சென்று அவர்களின் நிலமையை உறுதிசெய்து, அவர்களின் தேவையை கேட்டறிந்து உடனடியாக அவர்களுக்கான அன்றாட தேவைக்கான பொருட்கள், சமயல் பாத்திரங்கள், அத்தியாவசிய வீட்டு உபகரணங்கள் அனைத்தையும் வழங்கினர்!

7. கொக்குவில் பகுதியில் முன்னாள் பெண்போராளி ஒருவர் விசேட தேவையுடைய மகளுடன் கணவனை போரில் இழந்து மிகவும் நலிவான பொருளாதார நிலமையுடன் அன்றாட செலவுகளுக்காக போரடும் அவலநிலமைக்கு உள்ளாகி,வாழ்வாதார உதவி கோரியிருந்தார், அவற்றிற்கு உதவியாக ரூபா 65000/= பெறுமதியான பசுமாடு வழங்கபட்டது!!!

8. முல்லைத்தீவு பகுதியில் வசித்து வரும் , முன்னாள் போராளியாக சிறையில் இருக்கும் தந்தையையும், போரில் கால் அங்வூனமான தாயையும் கொண்ட பொருளாதார நலிவான குடும்பம் ஒன்றுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளபடுத்தும் வகையில் தையில் ரூபா 40000/= பெறுமதியான தையல் இயந்திரம் கடந்தவாரம் வழங்கிவைக்கப்பட்டது!

இதற்கான நிதியை பெயர்குறிப்பிட விரும்பாத சித்தன்கேணிபகுதியை சேர்ந்த நலன்விரும்பியொருவர் வழங்கியிருந்தார்!

**கற்றல் உபகரணங்கள் வழங்கல்**

1. குழந்தை ஒன்றின் பிறந்தநாளை முன்னிட்டு பெற்றோரால் வழங்கபட்ட 2500/= ரூபா நிதியில் மீளகுடியமர்த்தப்பட்ட பிரதேசமான வயாவிளான் மற்றும் யாழின் வேறு சில பகுதிகளையும் சேர்ந்த தாய்/தந்தையரை இழந்த பொருளாதார நலிவடைந்த குடும்பங்களை சேர்ந்த 11 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு எமது சங்கத்தின் "உயர்த்தும் கரங்கள்"

   செயற்திட்டத்தின் கீழ் ஒவொரு பிள்ளைகட்கும் தலா 2500/= ரூபா பெறுமதியான கற்றல்உபகரணங்கள், பாடசாலை காலணிகள் வழங்கப்பட்டன.

2. பொங்கல் தினத்துக்கு மறுதினத்தில் முல்லைத்தீவு குமிழ முனைபகுதியில் போரினால் மாற்றுதிறனாளிகளாக்கபட்ட தம்பி தங்கையருடன் இணைந்து பொங்கல் விழாவினையும் அவர்களுக்கு கற்றல் கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வையும் ஒழுங்கு செய்தோம்.

   இதனை ஒழுங்கு செய்வதில் கரைத்துரைப்பற்று சமூக மேம்பாட்டு அமைப்பான நிதர்சனம் அமைப்பினர் உதவினர். இதன்போது பொங்கல் நிகழ்வும் அதனை தொடர்ந்து மாற்று திறனாளி சிறுவர்களின் கலைநிகழ்வும் அதனை தொடர்ந்து இருபாலையை சேர்ந்த மண்ணின் மைந்தர் ஒருவர் வழங்கிய ரூபா 25000/= நிதி நன்கொடையில் இருந்து சங்கத்தின் "உயர்த்தும்கரங்கள்" திட்டத்தின் கீழ் 20 சிறார்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கபட்டது

3. நீர்வேலி கிராமத்தில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் நீர்வேலி மற்றும் அதனை அண்டிய கிராமங்களில் வசித்துவரும் பொருளாதார நலிவடைந்த குடும்பங்களை சேர்ந்த 35 மாணவர்களுக்கு எமது சங்கத்தின் "உயர்தும் கரங்கள்" திட்டத்தின் கீழ் கற்றல் உபகரணங்கள் (31.01.2015) அன்று சிவசக்தி சனசமூக நிலயத்தில் வைத்து வழங்கப்பட்டது!

4. முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் தந்தையை இழந்து தீவிபத்தில் தாயை இழந்து வாழும் 3 பிள்ளைகளுக்கு கல்விக்கான மாதாந்த கொடுப்பனவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியினையும் ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களையும் நேரில் சென்று சங்க உறுப்பினர்கள் வழங்கினர்



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது

5. அமரர் இக்னேசம்மா அவர்களின் 4ம் ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு , அவர்களின் உறவினர்களால் வழங்கபட்ட நிதியில் இருந்து முல்லைத்தீவு பிரதேசத்திலுள்ள அன்பு இல்லத்தில் தாய் அல்லது தந்தை இழந்து வாழ்கின்ற சிறுவர்களுக்கு ஒருநாளுக்கான உணவுக்கான நிதியினை சங்க உறுப்பினர்கள் நேரில் சென்று வழங்கினர்

6. முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தாய் அல்லது தந்தையை இழந்த வாழும் நான்கு குடும்பங்களை சேர்ந்த பிள்ளைகளுக்கு கல்விக்கான ஒரு தொகுதி கற்றல் உபகரணங்கள் நேரில் சென்று சங்க உறுப்பினர்கள் வழங்கினர்

7. புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் அன்பர் ஒருவர் வழங்கிய ரூபா 25000/= பணத்தில் இருந்து இதுவரை எந்த உதவிகளையும் பெற்றிராத கிளிநொச்சி சோலைநிலா கிராமத்தை சேரந்த 10 மாணவர்களை தெரிவு செய்து கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலை காலணிகள் என்பவற்றை வழங்கினோம்.

8. அரியாலையில் சிலகாலங்களுக்கு முன் மீள்குடியேற்றம் இடம்பெற்ற பகுதிகளில் வசித்து வரும் தாய் அல்லது தந்தையை இழந்து, தேவையுடைய நிலையில் கல்விக்காக ஏங்கி நிற்கும் 25 பிள்ளைகளை தெரிவு செய்து அவர்களுக்கு கல்வி கற்பதற்கான உபகரணங்கள், பாடசாலை புத்தக பைகள் "உயர்த்தும் கரங்கள்" திட்டத்தின் கீழ் வழங்கபட்டன.

தொடர்ந்தும் இவர்களின் கல்வி நிலை அவதானிக்க படுவதுடன், இவர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6 மாதகாலத்திற்கு ஒரு முறை சந்திப்பை ஏற்படுத்தி அவர்களின் கல்வித்தேவைகள், அடைவுமட்டங்கள் என்பவற்றை அறிந்து தொடர்ந்தும் உதவிகளை வழங்கவுள்ளோம்! இதற்கான நிதியினையும் யாழ் இந்து கல்லூரியின்2009 உயர்தர பிரிவு நண்பர்கள் வழகியிருந்தனர்.

9. அச்செழு வளர்மதி முன்பள்ளியில் இருந்து விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு இணைவாக அங்கே கற்கும் தேவையுடைய, பாடசாலை புகுமுக மாணவர்கள் 40 பேரை தெரிவு செய்து அவர்களின் குடும்ப பொருளாதார நிலமையை கிராஉத்தியோகத்தர் மூலமாக உறுதி செய்து அவர்களுக்கான சிறுவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டது!

இந்ந செயற்திட்டத்திற்கான நிதியினை வழங்க முன்வந்தார் சங்கத்தின் நலன் விரும்பியான திரு.சீலன் அவர்கள்.இவாரல் ஒவ்வொரு பிறந்ந தினத்தின்போதும் இத்தகய உன்னதபணி சங்கத்தின் மூலமாக முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடதக்கது!

10. மீள் குடியேற்ற பகுதியான வளலாய் பகுதியை சேர்ந்த தாய் தந்தையரை இழந்த 40 மாணவர்களுக்கு ரூபா 48,000/= பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கபட்டன.இதற்கான நிதியை சிங்கபூரை சேர்ந்த பொறியலாளர் ஒருவர் வழங்கினார்.

## ஏனைய உதவித்திட்டங்கள்

**சிறுநீரக நோயாளி ஒருவரின் சத்திரசிகிச்சைக்கு ரூபா 15000/= நிதிஉதவி வழங்கப்பட்டது!**

வலிகாமம் வடக்கு மீள குடியமர்த்த பட்ட பகுதிகளில் உள்ள 10 பாலர் பாடசாலைகள் இணைந்து 11.06.2016 வெள்ளிக்கிழமை விளையாட்டுப்போட்டியினை நடாத்தினர் அதற்க்கு எமது சங்கத்தினால் ஒரு தொகுதி பரிசில் பொதிகள் சங்கத்தால் வழங்கப்பட்டது

அன்பர் ஒருவர் வழங்கிய நிதியில் சுன்னாகம் நாகேஸ்வரி மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் பொருளாதார நலிவான குடும்பத்தை சேர்ந்த கண்பார்வை குறைந்த மாணவர் ஒருவருக்கு 4500/= பெறுமதியான மூக்குகண்ணாடி வழங்கபட்டது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாதந்த உதவிகள்**

எமது இளவாலை கிராமத்தை சேர்ந்த அன்பரொருவர் தனதையை இழந்த, கற்றலில் ஆர்வமுள்ள மாணவி ஒருவரை தேர்வு செய்து மாதாந்த உதவிகளை எமது சங்கத்தின் எமது இளாவலை கிராமத்தை சேரந்த பெயர்குறிப்பிட விரும்பாத அன்பரொருவர்மூலமாக, பொருளாதார நலிவானகுடும்பங்களை சேரந்த 5 மாணவர்கள் தேர்வு செய்யபட்டு வங்கி கணக்கு ஆரம்பிக்க பட்டு மாதாந்த உதவிதிட்டம் வழங்கபட்டு வருகின்றது. மாதாந்தம் அவர்களின் வங்கி கணக்கில் ரூபா 500/= வைப்பிலபடுகிறது

போரால் பாதிக்கபட்ட யாழ்பல்கலை கழகத்தை சேர்ந்த மாணவி ஒருவருக்கும், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை சிறந்த மாணவர் ஒருவருக்கும் எமது சங்கத்தின் மூலமாக கௌரிநாத் எனும் அன்பர் ஒருவர் மாதாந்தம் ரூபா 25000/= இணை வைப்பிலட்டு பல்கலை கல்விக்கு உதவுகிறார்

**வெள்ள நிவாரண பணி**

மேமாதத்தில் ஏற்பட்டு ஓய்ந்த கனமழை காரணமாக கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு உட்பட நாட்டின் பல பாகங்களிலும் வெள்ள பெருக்கு ஏற்பட்டது தாங்கள் அனைவரும் அறிந்ததே!

அந்தவகையில் எமது இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கமும், கந்தரோடை இளைஞர் கழகமும் யாழ்மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து யாழ் குடா நாடு எங்கிலும் உலர்உணவு பொதிகள் சேகரித்து கிளிநொச்சி முரசு மூட்டை பகுதியை சேர்ந்த 100குடும்பங்களுக்கு உலர்உணவு பொதிகளையும் 50 குடும்பங்களுக்கு படுக்கை பாய்கள், தலகணிகள் என்பவற்றையும் மற்றும் சுதந்திர புரம் பகுதியை சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உடைகள், உலர் உணவு பொருட்கள் பாய்கள் தலகணைகள் என்பவற்றையும் நேரில் சென்று வழங்கினோம்!

**2. அரும்பு கல்வி செயர்த்திட்டம்**

எமது இளவாலை கிராமத்தையும் அயல் கிராமங்களையும் சேர்ந்த தரம் 5 மற்றும் க.பொ.த சாதாரண தர பரீட்சைகளுக்கு தோற்ற உள்ள மாணவர்களுக்கு விசேட பயிற்சி பரீட்சைகளையும் நடாத்தி முன்னணி ஆசிரியர்களை கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசேட கருத்தரங்குகளையும் நடாத்துகின்றோம்! பின்னர் பரீட்சைகளில் சிறப்பு புள்ளி பெற்ற மாணவர்களை தெரிவு செய்து எமது ஆண்டு விழாவில் அவர்களை கௌரவித்து ஊக்குவிக்கின்றோம்! இந்த செயற்திட்டத்துக்கு சங்க உறுப்பினர் ஜெயகாந்தன் அவர்கள் தலைவராக செயபட்டுகொண்டு வருகின்றார். இந்த செயதிட்டன்களின் பொழுது மாணவர்களை ஒழுங்கு செய்வதில் உதவிய அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும், மண்டபங்களை வழங்கி உதவும் அதிபர்களுக்கும் எமது நன்றிகளை கூறி நிற்கின்றோம்



**3. இரத்த தானமுகாம் -**

எமது இளவாலை வருத்தபடாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் 6 மாதங்களுக்கு ஒருமுறை இரத்த தானமுகாம் நட்டத்தபட்டு வருகின்றது இதுவரை மொத்தம் 7 இரத்த தானமுகாங்கள் நடாத்தபட்டுள்ளன இதில் மொத்தமாக சுமார் 350க்கும் அதிகமான குருதிக்கொடைகள் வழங்கபட்டுள்ளன, நடப்பாண்டில் 2 இரத்த தானமுகாங்கள் நடைபெற்று முடிந்துவிட்டன, அடுத்த இரத்த தானமுகாம் எதிர்வரும் 12.11.2016அன்று நடாத்த திட்டமிடபட்டுள்ளது.ஒவ்வொரு முறையும் அதற்கு முதல் முறையை காட்டிலும் அதிகமான குருதிகொடைகள் இலக்காக நிர்ணயிக்கப்படும்.

இந்த இரத்த தான முகாங்களிர்ற்கு வருகைதந்து குருதிகளை சேகரிக்கும் தெல்லிப்பளை ஆதர வைத்திய சாலையின் இரத்தவங்கியினருக்கு இந்த இடத்தில் நன்றிகளை கூறிநிற்கிறோம்.

**4. மருத்துவமுகாம் -**

எமது சங்கத்தின் ஏற்பாடில் ஆண்டு தோறும் இரண்டு அல்லது ஒரு மருத்துவ முகாங்கள் கிராமத்தில் நடாத்தப்படுவது வழமை ஆயினும் இம்முறை கிளிநொச்சி பகுதிகளில் மழை காரணமாக ஏற்பட்ட இயற்கை சீற்றத்தினால் கனடாஆர்மு நிறுவனம் ரூபா இரண்டு இலட்சத்து ஐம்பது ஆயிரம் நிதி அனுசரணையை பெற்று பரந்தன் சிவபுரம் பகுதியில் பாரியளவிலான மருத்துவமுகாம் ஒன்றை நடாத்தினோம். இந்த நிதியை பெற்று கொடுப்பதில் உதவிய எமது கிராமத்தவரும் தற்போது புலம்பெயர்ந்து வாழ்ந்து வருபவருமான வைத்திய நிபுணர் வரகுணன் அவர்களுக்கும் ஐஆர்மு கனடா அமைப்பினருக்கும், மருத்துவ முகாமை நடாத்த உதவிய இளவாலை பிரேதச வைத்திய சாலை வைத்தியர், மற்றும் மருத்துவ உதவியாளர்களுக்கும் ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் இதன் பொழுது வருகைதந்து உதவிய எனை மருத்துவர்களுக்கும் எமது நன்றிகளை இந்த சந்தர்பத்தில் கூறி நிற்கின்றோம்



**5. டெங்கு ஒழிப்பு செயற்திட்டம்**

ஆண்டுதோறும் மார்கழி கார்த்திகை மாதங்களில் அதிகளவான மழை காலமாக காணபடுவதனால் அதிகளவான டெங்கு நோய் மற்றும் மலேரியா நோய் ஏற்படுவதற்க்கான சந்தபங்கள் அதிகமாக காணபடுவதால் எமது சங்கத்தின் ஏற்பாட்டில் வீடுகள் தோறும் இருக்கும் டெங்கு மலேரியா பெருககூடிய நீர் தேங்க கூடிய பொருட்களை சேகரித்து பொதியிடுமாறு கிராமத்தவருக்கு அறிவித்தல் விடுத்து மறுநாள் வலிவடக்கு பிரதேச சபையின் குப்பை ஏற்றும் வாகனத்தை பெற்று அவற்றின் மூலமாக வீடுகள் தோறும் சென்று குறித்த பொதிகளை சேகரித்தும் மற்றும் பொது இடங்களில் உள்ள நீர் தேங்க கூடிய பொருட்களை சிதைத்து அல்லது சேகரித்து உரிய முறையில் அப்புற படுத்தி வருகின்றோம்! குப்பை ஏற்றும் வாகனத்தை மறுப்பின்றி வழங்கி வைக்கும் வலிவடக்கு பிரதேச சபையினருக்கு இந்த சந்தர்பத்தில் நன்றிகளை கூறி நிற்கின்றோம்

**வெள்ள நீர் வெளியேற்றல்...**

இளவாலை வசந்த புரம்பகுதியில் கன மழை காரணமாக வெள்ள நீர் வீடுகளுள் புகுந்திருக்கிறது. நீர் கடலுடன் இணைவதற்க்கான மதவுகள் சரியான முறையில் அமைந்து இருக்கமையும் அவை பராமரிக்கபடாமையுமே இதற்கான காரணம்.

எனவே குழந்தைகளுடன் கூடிய ஏராளமான குடியிருப்ப்புக்கள் அங்கே இருப்பதனால் உடனடியாக அந்த வெள்ள நீரை வெளியேற்ற வேண்டியமை காரணமாக எமது சங்கம் அந்த பகுதியில் விரைந்து செயற்பட்டது.

வாடகைக்கு பெறபட்ட அள்ளுவாளி இயந்திரம் (JCB) மூலமாக சுமார் 5 மணி நேர வேலை திட்டத்தின் பின்னர் குறித்த வெள்ள நீர் கடலுடன் சேர்க்கபட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் போது தேவைபட்ட மனித வலு வேலைகளுக்கு வசந்தபுர கிராம மக்கள் எங்களுடன் இணைந்துகொண்டனர்...

## 6.பண்டிகைகளும் விழாக்களும்

ஒளிவிழாவும் நேத்திரம் சஞ்சிகை வெளியிட்டுவிழாவும்

எமதுகிராமத்தின் பெருமைகளை எடுத்தியம்பும் வகையிலும், எமது கிராம எழுத்தாளர்கள்,கலைஞர்களுக்கு களம் அமைக்கும் வகையிலும் எமது சங்கத்தின் செயற்திட்டங்களை வெளிபடுத்தும் வகையிலும் ஆண்டுதோறும் எமது சங்கத்தினால் "வாலையூர் வாலிபர்களின் நேத்திரம்" எனும் சஞ்சிகை வெளியிடபட்டு வருகிறது. அத்துடன் மத சார்பின்றி எம்மதமும் சம்மதம் என இயங்கும் எமது சங்கம் கிறீஸ்தவர்களால் கொண்டாடப்படும் ஒளி விழாவினையும் ஆண்டுதோறும் சிறப்பாக கொண்டாடி வருகிறோம்.

கடந்த முறை இவ் நேத்திரம் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வையும் ஒளி விழாவையும் இணைத்து நடாத்தியிருந்தோம்

### பொங்கல் விழா

தமிழர்திருநாளாக கருதப்படும் தைதிருநாள் தனில் எமது சங்கத்தால் ஆண்டு தோறும் பொங்கல் விழா மிக விமர்சையாக கொண்டாடபடுகின்றது. இதன் பொழுது பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகள் என்பனவும்கிராமத்தில் இருக்கும் பாடசாலை மாணவர்கள் அறநெறி மாணவர்கள் மற்றும் ஏனைய பொது அமைப்பின் கலைநிகழ்வுகள் என்பன பெற பட்டு மிகசிறப்பாக நடாத்தபடுகிறது. நடப்பாண்டின் பொங்கல் விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் திரு. இ.இளங்கோவன் அவர்கள் கலந்துகொண்டார்.

### சித்திரை புத்தாண்டு விழா

இந்த ஆண்டு சித்திரை புத்தாண்டினை முற்றிலும் மாறுபாட்ட ஒரு ஆரோக்கியமான நிகழ்வாக நடாத்தி இருந்தோம்.

கைதடி முதியோர் இல்லத்தில் முதியவர்களுடன் கதைபேசி மகிழ்ந்து பரிசில் பொருட்களை வழங்கி, மதிய உணவு வழங்கி கலைநிகழ்வுகளை நடாத்தி அவர்களை மகிழ்வித்தோம். இதன்பொழுது இளவாலை எழுச்சியகத்தினர் எம்முடன் கரம்கோர்த்து இருந்தனர் அவர்களுக்கு இந்த இடத்தில் நன்றிகளை தெரிவித்து கொள்கினறோம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாட்டு வண்டில் சவாரி போட்டி**

எமது சங்கத்தின் 3வது மாட்டு வண்டி சவாரி போட்டி நீர்வேலி சவாரிவிடந்தையில் (19.06.2016)அன்று இடம்பெற்றது இதில்



கிளிநொச்சி, முல்லைத்தீவு மன்னார் என வெளி மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான மாட்டு வண்டிச் சோடிகள் போட்டியில் பங்கு கொண்டன!

இப்போட்டியில் பங்கு கொண்டு 1ம் இடம் பெற்ற நான்கு பிரிவுகளை சேர்ந்த வெற்றியாளர்களுக்கும் தங்கபதக்கம் பரிசாக வழங்கப்பட்டதுடன், ஏனைய வெற்றியாளர்களுக்கும் பெறுமதிவாய்ந்த பரிசில்கள் வழங்கப்பட்டன!

## நிதி சேகரிப்பு திட்டமும் "மண்ணின் மைந்தர்" செயற்திட்டமும்

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் இடம்பெற்ற வடமாகாணரீதியான உதைபந்தாட்டத்தில் எமது சங்கஉறுபினர்களால் வாகனபாதுகாப்பு நிலையம் நிறுவி சங்கத்தின் செயற்திட்டங்களுக்கான நிதி சேகரிக்கரித்தனர்! தொடர்ச்சியாக 1 மாத காலம் இடம்பெற்ற ஹென்றிசியன் உதைபந்தாட்ட தொடரில் எம்மை வாகன பாதுகாப்பு நிலையம் நடாத்த கல்லூரி சமூகமும், யங் ஹென்றிஸ் விளையாடு கழகம் அனுமதித்து எம்மை ஊக்குவித்து இருக்கின்றனர்! அந்த வகையில் எமது சேவை பயணம் சிறக்க எங்களை ஊக்குவித்து, இந்த வாகன பாதுகாப்பு நிலையத்துக்கு அனுமதி வழங்கிய ஹென்றியரசர் கல்லூரியின் நிர்வாகத்திற்கும் பழையமாணவர்களுக்கும், ஹென்றிஸ் விளையாடு கழகத்தினருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்!

எமது கிராமத்தை சேர்ந்து புலம்பெயர் நாடுகளில் வசித்துவரும் அன்பர்கள் எமது சங்கத்தின் சேவைகளை அறிந்து தாமாக பல நிதி நன்கொடைகளை வழங்கிய வண்ணம் உள்ளனர். அவர்களை மண்ணின் மைந்தர் என்ற கௌரவத்துடன் நாம் வரவேற்கின்றோம்!

விழாக்கள் மற்றும் பண்டிகைக்களுக்கு நாம் நிறுவங்களின் அனுசரணைகள் ,விளம்பரங்கள் என்பன மூலமாகவே நிதிகளை திரட்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமத்தில் இருக்கும் அன்பர்கள் பலரும் எமது விழாக்களுக்கும் கௌரவிப்பு நிகழ்வுகளுக்கும் உதவிகளை அதிகமாக மேற்கொள்கின்றனர்.

**விசேட செயற்திட்டங்கள்**

"துருனு சிரமசக்தி" வேலைத்திட்டத்தின் கீழான வேலைத்திட்ட பிரேரனைகளுக்கான நேர்முக தேர்வு இடம்பெற்று அதில் எமதுசங்கத்தின் பிரேரணையும் தெரிவுசெய்பட்டது குறிப்பிடதக்கது!

இந்நிலையில் வெளியாகிய முடிவுகளின் அடிப்படையில் எமது செயற்திட்ட பிரேரனை மிகச்சிறந்த செயற்திட்டமாக 1ம் இடத்தை பெற்றிருக்கிறது! 49 இளைஞர் கழகங்களிடையே எமது சங்கம் 1ம் இடம்பெற்றுள்ளது!

"துருனு சிரமசக்தி" வேலைத்திட்டத்தின் கீழ் எமது சங்கத்திற்கு கிராமத்திற்கு பயனுள்ள செயற்திட்டம் முன்னெடுக்க ரூபா 75000/= நிதிகிடைத்தது!

இளைஞர் விவகார அமைச்சின் "துருனு சிரமசக்தி வேலைத்திட்டம் ஆரம்பிக்கபட்டு , கிராமங்களுக்கு பயன் தரகூடிய செயற்திட்டங்களுக்கு ரூபா 75000/= நிதி வழங்கபடும், மேலும் 150,000/= அரசியல் பிரமுகர்களின் நிதி ஒதுக்கீட்டில் பெற்று ரூபா 225000/= பெறுமதியான செயற்திட்டத்தை கிராமத்தில் முன்னெடுக்கவேண்டும்!

அந்த வகையில் எமது சங்கமும் குறித்த செயற்திட்டத்துக்காக இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் வழங்கபடும் இலவச சத்துணவை சமையல் செய்வதற்கான சமயலறை கட்டம் அமைக்க வழங்கிய செயற்திட்ட பிரேரனையே சிறந்த பிரேரனையாக தெரிவுசெய்யபட்டுள்ளது! இதற்காக இளைஞர் விவாகார அமைச்சினால் 75000/= வழங்கபட்டுள்ளது ஏனைய நிதியை எமது சங்கம் திரட்டி கட்டடத்தை பூரணபடுத்துமாயின் ரூபா 10 இலட்சம் பரிசை தனாதாக்கும் சந்தர்பமும் கிடைக்கும்!

தற்பொழுது குறித்த கட்டட வேலை தீவிரமாக முன்னெடுக்க பட்டுவருகிறது. அடுத்த மாத இறுதிக்குள் குறித்த கட்டடம் நிறைவு பெற்று திறப்பு விழா இடம்பெறும்

எனவே இளவாலை மெய்கண்டான் பாடசாலை பழைய மாணவர்களே! நலன்விரும்பிகளே தங்கள் பாடசாலைக்கு அமைய இருக்கும் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயலறைகட்டடத்துக்கு தாங்களும் தங்களால் இயன்ற நிதியுதவி வழங்குமாறு கேட்டு கொள்கிறோம்!

பொது அமைப்புக்கள் , சிவில் சமூகங்கள், அரசியல் கட்சிகள் என்பன பலவும் இனைந்து "தமிழர்" என்ற ஒற்றுமையுடன் இனத்தின் அடிப்படை வேண்டுகோள்களை முன்வைத்து நடாத்திய எழுக தமிழ் பேரணிக்கும் சமூக பொறுப்புள்ள இளைஞர் அமைப்பாக நாமும் கரம்கோர்த்திருந்தோம்!

## வேண்டுகோள் ஒன்று ...

போதைப்பொருள் இடமாகவும் , இறக்குதளமாகவும் பத்திரிகைகளிலும் தொலைகாட்சிகளிலும் எமது கிராமம் அடையாள படுத்த படுவதென்பது எம் ஒவ்வொருவருக்கும் ,மற்றும் கிராமத்துக்கும் அவமானத்தை ஏற்படுத்தும் செயலாக கருதுகின்றோம்., இதில் ஊடகங்களின் தெளிவற்ற தன்மையை கண்டிப்பதோடு, எமது கிராமத்தவர்களும் இதில் விழிப்புணர்வாக இருக்கவேண்டும் என எதிர்பாத்து வேண்டுகின்றோம்! அத்துடன் எமது கலாசாரத்தை அழிக்கும் ஆயுதமாக தொழிற்படும் இந்த போதைபொருள், புகைத்தல் பொருட்களை எமது கிராமத்தில் குறைக்கவேண்டும் எனவும், எமது சங்கம் இந்த 4 ம் ஆண்டில் இந்த போதை பொருளுக்கு எதிராக செயற்படும் என இந்த சந்தர்பத்தில் உறுதி அளிக்கின்றேன்!

எனவே எமது கிராமத்தை சேர்ந்த வர்த்தகர்களே தாங்களும் தங்கள் வியாபர நிலையங்களில் புகைத்தல் பொருட்கள் விற்பனையை முற்றாக நிறுத்துமாறு அல்லது குறைக்குமாறு தாழ்மையுடன் வேண்டிநிற்கிறோம்! இது தொடர்பான விழிப்புணர்வுடன் கூடிய போதை அற்ற முன்மாதிரியான கிராமமாக இளவாலை மிளிரவேண்டும் என கிராமத்தவர்களிடம் வேண்டுகோள் வைக்கிறோம் !

## நிறைவாக நன்றிகள் ..

இத்தகையதொரு உன்னத செயற்பாடுகளுடன் நாங்கள் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்றால் நிச்சயமாக இது எமது கிராம மக்களாகிய நீங்கள் வழங்கிய ஊக்குவிப்புக்களும், ஒத்துளைப்புமன்றி வேறு இருக்க முடியாது, அந்தவகையில் இன்றைய ஆண்டு விழாவுக்கு வருகைதந்து தொடர்ச்சியாக எம்மை ஆதரித்து ஊக்குவிக்கும் எமது பெற்றோருக்கு நிகரான கிராம மக்களுக்கு எமது முதல் நன்றிகள்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ண வண்ண பூக்கள்


வண்ண வண்ண பூக்களாம்
கண்ணைக் கவரும் பூக்களாம்
இறைவன் படைத்த இவ்வுலகை
இனிய வைக்கும் பூக்களாம்

வண்டை நாட வைக்குமாம்
மனதை நெருங்கி மணக்குமாம்
இயற்கை அழகைக் கூட்டுமாம்
இறைவன் புகழைக் காட்டுமாம்

காலையிலே கண்விழித்தால் களிப்புறவைக்குமாம்
கடவுள் காலடியில் அர்ப்பண மலர் மாலையாம்
மண் மேடை தனில் மங்கள மலர் மாலையாம்
பிண மேடை தனில் மலர் அஞ்சலியாம்

வண்ண வண்ண பூக்களாம்
வடிவான பூக்களாம்
வாழவைக்கும் பூக்களாம்
மகிழ வைக்கும் பூக்களாம்

அ.அஸ்விதா
தரம் 05
யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய மருத்துவத்தில் சூரிய நமஸ்காரத்தின் மகிமை

பாரம்பரிய மருத்துவத்தில் சூரிய நமஸ்காரம் எவ்வாறு உருவாகியதுவென புராணங்கள் கூறுகின்றன. அகத்திய முனிவர், இராவணணை வெல்ல இராமபிரானுக்கு அருளிச்செய்யப்பட்டதாக இராமாயணக்கதையில் கூறப்பட்டுள்ளது.

சூரிய நமஸ்காரம் உடலுக்கும் மனதிற்கும் விரைவாக சோர்வை தகர்த்து புத்துணர்வையும், ஆரோக்கியத்தையும் தரவல்லது. இதில் எமது உடலையும், உள்ளத்தையும் ஆன்மாவையும் ஒன்றுபடுத்தி ஆரோக்கியவாழ்வை மேம்படுத்தும் ஒருவகை யோகாசனம் ஆகும்.

சூரிய நமஸ்காரம் எனும்போது சூரியனை ஆதாரப்படுத்தி செய்யப்படும் ஒருவகை ஆசனம் ஆகும். சூரிய பகவானைப் பற்றி எமது மருத்துவத்தின் ஜோதிடப் பகுதியில் கூறப்பட்டதாவது, சூரியபகவானுக்கு பலம், கம்பீரம், ஆளுமை, மற்றவர்களைக் கட்டுப்படுத்தும் தன்மை போன்றன உள்ளன. எனவே சூரிய பலம் குறைந்தவர்கள் இதனை மேற்கொள்ளுகையில் இவை கிடைக்குமென ஜோதிடத்தில் கூறப்பட்டள்ளது.

சூரிய நமஸ்காரம் பன்னிரண்டு படிமுறைகளை உள்ளடக்கியுள்ளது. இதனை நாம் காலையில் தினமும் செய்வோமாயின் உடலிலும் உள்ளத்திலும் புத்துணர்வு ஏற்பட்டு அன்றைய நாள் நன்நாளாக அமைவதை உணரலாம். சூரிய நாமஸ்காரத்தை செய்யமுன் கவனிக்க வேண்டியவை

1. இடம்
2. நேரம் / காலம்
3. செய்யக் கூடியவர்கள்
4. செய்யக்கூடாதவர்கள்
5. செய்யும் முறை

இங்கு பொதுவாக எல்லா வயதினரும் எல்லா மதத்தவரும் இவ்வாசனத்தை செய்யலாம். பொதுவாகக் கூறின் எல்லாமதத்தவரும் தத்தமது இறைநாமத்தை ஆரம்பித்தல் உச்சரிக்க வேண்டும் (உதாரணம் - ஓம் நமசிவாய.....)

இடம் :- நல்ல காற்றோட்டம் உள்ளதாகவும், சூரிய ஒளி கிடைக்கக்கூடியவாறும் இருத்தல் நன்று. வெறும் வயிற்றில் செய்யவேண்டும்.

நேரம் :- காலையில் சூரியோதய நேரம் மிகவும் சிறந்தது. ஏனெனில் சூரியனிலிருந்து எமது உடல் விற்றமீன் D யை இலவசமாகப் பெற்றுக்கொள்கிறது.

நாம் அணியும் ஆடை மிகவும் தளர்வாக இருக்கவேண்டும். எமது உடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரடியாக தரையுடன் தொடுகையுறாது விரிப்பு ஒன்றிலமர்ந்து மேற்கொள்வது மிகவும் சிறந்தது. பொதுவாக எல்லோரும் இவ் நமஸ்காரத்தைச் செய்யலாம். செய்யக்கூடாதவர்கள் பற்றிக் கவனிப்பின்

01. இருதய நோய் உள்ளவர்கள் (Heart disease)
02. உயர் இரத்த அழுத்தம் (Hyper tension)
03. பெண்களின் மாதவிடாய்க்காலம் (Mensfruration)
04. கர்ப்பகாலம் (prgnancy)
05. சத்திரசிகிச்சைசெய்துள்ளவேளை

மேலே கூறப்பட்ட நிலைமைகளில் செய்யக்கூடாது என்று கூறப்படினும் வைத்தியரின் ஆலோசனைப்படி செய்யலாம்.


**சூரியநமஸ்காரத்தின் நன்மைகள் பல அவற்றுள் சில,**

01. மனநிறைவு
02. மகிழ்ச்சி
03. உற்சாகம்
04. ஒரு விடயத்தில் தெளிவான முடிவெடுத்தல்
05. நெகிழும் தன்மை
06. தசை, என்பு பலம்பெறல்
07. இரத்தோட்டம் சீராகல் என்பனவாகும்.

சித்தர்களால் இவ்யோகாச முறைகள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சூரிய நமஸ்காரம், யோகாசனம் பற்றி அழகாக அருளப்பட்டு உள்ளது. எமது கலாச்சாரவளர்ச்சியினது மாறுபாட்டால் தான் அருகிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்துடன் மனம், உள்ளம் / உளம் எனப்பல இடங்களில் கூறப்படுவது எமது இதயம் அல்ல. மூளைதான் இதில் தான் பல மாற்றங்களை சூரியநமஸ்காரம் மூலம் கொண்டுவர முடியும்.

**செய்யும் முறை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய நமஸ்காரம் செய்ய முன்பு வஜ்ராசனம், பத்மாசனத்தில் அமரவோம். வஜ்ரோசனம் எனும் போது குருவணக்கத்தை குறிக்கிறது. குருவணக்கத்திலிருந்து மூச்சை இயல்பாக உள்ளிழுத்து வெளிவிடவேண்டும்.


அதன் பின்பு இறை நாமத்தை உச்சரிக்கவேண்டும். (ஓம் நமசிவாய) இதன்பின்பு மேற்குறிப்பிட்ட படத்தின் மூலம் பன்னிரண்டு படிமுறைகளையும் செய்யவேண்டும். ஒவ்வொரு படிமுறையிலும் ஒரு சில நொடிகள் நிற்கவேண்டும். ஆரம்பத்தில் பொறுமையுடன் செய்யவேண்டும். பின்பு ஒருமுழுச் சுற்றுக்கு ஐந்து நிமிடங்கள் போதுமானதாகும்.

மேற்குறிப்பிட்ட சூரிய நமஸ்காரத்தில் ஒரு சில யோகாசனமும் அடங்குகிறது. என்பது குறிப்பிடத்தக்கது.

1ம் படிமுறை :- பிறையாசனம் (முள்ளந்தண்டு பலம் பெறும்)
2ம் படிமுறை :- பாதகஸ்டாசனம் (நாரிநோவு குறையும்)
4ம் படிமுறை :- மரளாயி
5ம் படிமுறை :- சசாங்காசனம் (நீரிழிவு, இரத்த அழுத்தம் குறையும்)
6ம் படிமுறை :- அட்டாங்க நமஸ்காரம்
7ம் படிமுறை :- புயங்காசனம் (சுவாசப்பை பலமடையும்)
8ம் படிமுறை :- பர்வதாசனம், மேரு (தொப்பைகுறையும்
9ம் படிமுறை :- சசாங்காசனம்

சூரிய நமஸ்காரத்தின் இறுதியில் சாந்தியாசனம் (Relaxation) செய்தல் நன்று.

DR(mrs)K.Kirupaharan
Ayurvedicmedical officer
Dept.of Indigenousmedicine
jaffna.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை



நூற்றைம்பது ஆண்டுகளின் வரலாற்றுத் தடத்தினை பதிக்கவுள்ள பெருமைகளும் சிறப்புக்களும் கொண் பாடசாலையாக யா/மாரீசன் கூடல் றோ.க.த.க பாடசாலை திகழ்கின்ற தென்றால் அது மிகையாகாது. 1880 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாரீசன் பதியிலமைந்துள்ள புனித கயித்தார் தேவாலயத்தின் வளாகத்தினுள் ஓலைக்குடிலமைக்கப்பட்டு கல்விச்சாலை தோற்றம்பெற்றது. 1901 ஆம் ஆண்டிலேயே அரசு உதவி நன்கொடை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாடசாலையாக மாற்றம் பெற்றது. அரசு உதவி பாடசாலையாக பதிவு செய்யப்படும் வரை பாடசாலை நிர்வாகம், அக்காலப்பகுதியில் பங்குக்குருவாக இருந்த அருட்பணி ஜேம்ஸ் அடிகளாரின் வழிகாட்டலில் இயங்கியமை குறிப்பிடத்தக்க விடயமாகும். அடிகளாரின் பணி வாழ்வின் பின்னர் கட்டைச் சட்டம்பியன் என்று செல்லமாக அழைக்கப்பட்ட திரு.அ.சூசைப்பிள்ளை (1901 - 1920) தலைமைச் சட்டம்பியர் பதவியினை வகித்தார். அவர் பணியின் பின் திரு.S.ஞானப்பிரகாசம் (1921 - 1955) அதிபராக கடமையாற்றினார். 1961 ஆம் ஆண்டு அரசவுடமை பாடசாலையாக்கல் காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த திரு M.R அல்பிரட் அவர்கள் (1956 - 1968) பாடசாலையின் வளர்ச்சிப்பாதையில் பங்கேற்ற பெருமையைத் தமதாக்கிக் கொண்டார். அவர் காலத்தில் 70 அடி x 20 அடி அளவிலான முதல் கட்டடம் அமைக்கப்பட்ட பெருமை அவரையே சாரும். அதன் பின்னர் திரு.T.செபஸ்தியாம்பிள்ளை (1968 - 1971), திரு.A.J.அல்போன்ஸ் (1971 - 1975) திருமதி.B.செபஸ்தியாம்பிள்ளை (பழைய மாணவர்) (1975), திரு.ஆ.சவரிப்பிள்ளை (1975 - 1979) (பழைய மாணவன்) ஆகிய அதிபர்களின் அர்ப்பணிப்பு மிக்க சேவையால் பாடசாலை வளர்ச்சிப் பாதையில் முன்னேறியது எனலாம்.

1977 இல் திரு.ஆ சவரிப்பிள்ளை காலப்பகுதியில் இரண்டாவது புதிய கட்டடம் (40 அடி x 20 அடி) ரூ 22000/= செலவில் அமைக்கப்பட்டது. இவர் காலப்பகுதியிலேயே கல்வி, கலை, கலாசார ரீதியாக மாணவர்கள் மேம்பாடடைந்ததோடு மட்டுமன்றி, ஞானம்ஸ், ஜேம்ஸ் எனும் இரு இல்லங்களையும் தோற்றுவித்து மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. தமிழ்த்தின, சமய சமூக விழாக்களை அரங்கேற்றிய பெருமையையும் பெற்று நிற்கின்றார். இவரது இடமாற்றத்தினைத் தொடர்ந்து திரு.M.X பெனாண்டோ அதிபரின் சேவைகள் வரிசையிலே தண்ணீர் தொட்டி அமைத்து, யன்னல்களை வலைக்கம்பியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைத்து, நூல்நிலையை அலுமாரிகள் கொள்வனவு செய்து மாணவர்களுக்கான பல்வேறு வசதிகளை கற்றலுக்காக ஏற்படுத்திக் கொடுத்தார்.

தற்போதைய யாழ்மறைமாவட்ட ஆயரும், அப்போதைய பங்குத்தந்தையுமான வண.ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாரின் உதவியுடன் பாடசாலைக்கான குழாய் நீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அப்போதைய காலப்பகுதியிலிருந்து 2016 ஆம் ஐப்பசி மாதம் வரை புனித கயித்தார் தேவாலய நிர்வாகத்தினரே பாடசாலைக்குரிய குடிநீரைப் பெறவழி ஏற்படுத்திக் கொடுத்ததுடன் அதற்குரிய மின்சாரக் கட்டணத்தினையும் செலுத்திவந்தனர். தற்போது புதிய நிர்வாக வருகையால் தனியாக குழாய் நீர் வசதியை பாடசாலை பெற்றுக்கொண்டது.

1984 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராக பதவியேற்ற திரு.B.அந்தோனிப்பிள்ளை அவர்களால், பாடசாலைச் சின்னம் வடிவமைக்கப்பட்டது. பாலர் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு கல்வியில் முன்னேற வழியேற்றப்பட்டது.

1992.08.20 இல் இடம்பெயர்ந்த இப்பாடசாலை முதலில் யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலையுடனும், யா/உயரப்புலம் குணபாலன் வித்தியாலயத்துடனும், யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயத்தில் மாலை நேரப் பாடசாலையாக நடைபெற்ற யா/பெரியவிளான் றோ.க.த.க பாடசாலையுடன் சேர்ந்து இயங்கியது. 1995 இன் பின்னர் மானிப்பாய் சோதிவேம்படி வீதியில் உள்ள காணி ஒன்றில் தனியாக இயங்கியது. 1995.10.30 இல் ஏற்பட்ட யாழ் குடாநாட்டு இடம்பெயர்வின் பின்னர் தென்மராட்சியிலுள்ள யா/கச்சாய் அ.த.க பாடசாலையுடன் சேர்ந்தியங்கி மீண்டும் யாழ்ப் பாணத்திற்குள் மீளக்குடியமர்வில் 1996 சித்திரை மாதத்தில் யா/இளவாலை றோ.க.த.க பாடசாலையுடன் சேர்ந்து இயங்கியது.



1988 இல் ஆசிரியர் முதல் நியமனம் பெற்று இப்பாடசாலையில் கடமையாற்றி 1991 இல் ஆசிரியர் பயிற்சிக்காக வெளியேறி 1993 இல் மீண்டும் இப்பாடசாலையில் கடமையாற்றி 1993.07.21 இல் இடமாற்றம் பெற்று வெவ்வேறு பாடசாலைகளில் கடமையாற்றி மீண்டும் 1996.04.26 இப்பாடசாலையில் பதில் அதிபர் கடமையைப் பொறுப்பேற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சூ.நோபேட் உதயகுமார் அவர்கள் 2013 இல் யா/சங்கானை சிவப்பிரகாச ம.வி இல் அதிபர் பணியாற்றி 23.09.2015 இலிருந்து சங்கானைக் கோட்டக்கல்விப்பணியாளராகக் கடமையாற்றி வருகிறார்.

இவருடைய காலத்தில் 19.05.1996 இல் தற்போதைய யாழ்மறைமாவட்ட ஆயரும் அப்போதைய யா/இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி அதிபரும் இளவாலை மறைக்கோட்ட முதல் வருமாக இருந்த பேரருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களின் ஆசீர்வாதத்துடன் இப்பாடசாலை தனது சொந்த இடத்தில் நிரந்தரமாக இயங்கத் தொடங்கியது. இந்த அதிபரின் அர்ப்பணிப்பால் முற்றாகச் சேதமடைந்த கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு கிழக்குப்பக்கமாக இருந்த பாடசாலை மேற்குப்பக்கமாக திருப்பப்பட்டு பற்றைக்காடுகள் அழிக்கப்பட்டு புத்துயிர் பெற்றது. 2000த்தில் அதிபர் தரம் 3 இலும் 2005 இல் அதிபர் 2 இலும் பணியாற்றி 2011 இல் தரம் I இற்கு பதவி உயர்வு பெற்று 2013 இல் மகிழ்ச்சியான கற்றல் சூழல் உள்ள இடமாக மாற்றம்பெற்றது. சுற்றுமதில், சமையலறை, மலசலகூடம், சிறுவர் விளையாட்டு முற்றம், நீர்த்தாங்கி, வடக்குப்பக்க வலை வேலை, இரும்பிலான வெளிக்கதவு, உள்ளகமேடை என்பன புதிதாக அமைக்கப்பட்டன. கணனி வசதிகள், பல்லூடக எறியி சாதனங்கள் என்பன பெற்றுக்கொடுக்கப்பட்டன. வெள்ளம் தேங்கி நிற்கும் மேற்கு முன்பக்கத்தில் மண் இடப்பட்டு நிரப்பப்பட்டது.

நிர்வாகச் செயற்பாடுகளிலும் கற்றல் செயற்பாடுகளிலும் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அயல் கிராமங்களின் பெற்றோர்கள் இப்பாடசாலையை நோக்கித் திரும்பிய பொற்காலமே இவ் அதிபர்காலமாகும் இப் பாடசாலை 1880 இல் ஆரம்பிக்கப்பட்ட போதும் 124 ஆண்டுகள் கழித்து முதன்முதலாக தரம் 5 புலமைப்பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளிற்கு மேல் பெற்ற சாதனையும், வடக்கு மாகாணத்தடகளப்போட்டிகளில் 11 வயது ஆண்கள் பிரிவில் கிடைத்த சாதனையும் இக்காலப்பகுதியில் தான் என்றால் அது மிகையாகாது. இப்பாடசாலைச் சமூகத்தை ஒன்றுகூட்டி இப்பாடசாலைக்கு இலவசமாக 2 பரப்புக்காணியைப் பெற்றுக்கொடுத்ததுடன் பாடசாலைச் சின்னத்தையும் பாடசாலைக் கொடியையும் அழகுற வடிவமைத்த பெருமையும் இவரைச்சாரும்

2013 தற்கால அதிபராக பொறுப்பேற்ற ஆசிரியர் திருமதி கொலஸ்ரிக்கா மாலினி டான்சன்பயஸ் அவர்களின் காலப்பகுதியில் அதிபர் அலுவலகம் நவீனமையப்படுத்தப்பட்டது. குழாய்க்கிணறு அடிக்கப்பட்டு தண்ணீர்தாங்கியும் அமைக்கப்பட்டது. தொடர்ந்து 21.06.2013 அதிபராகக் கடமையேற்ற திரு.ம.மகேந்திரன் அவர்கள் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காணிக்கான சுற்றுமதில் அமைப்பு நடவடிக்கைகள் திருப்திகரமாக நிறைவேற்றினார். அத்துடன் மின் இணைப்பு புனரமைப்பு, புதிய வீதி இடல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேலைத்தேய வாத்தியம் கொள்வனவு செய்யப்பட்டு அதற்குரிய சீருடை புதிதாக வடிவமைக்கப்பட்டது. அத்துடன் Reading Stand புதிதாக உருவாக்கப்பட்டமை அத்துடன் ஆரம்பக்கல்வி மாணவர்களின் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டிக்குரிய விளையாட்டு உபகரணங்களும் மாணவர்களுக்குரிய சீருடையும் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அத்துடன் இவ்விளையாட்டில் குடும்பமட்டம் கோட்ட மட்டம் ஆகிய இடங்களில் சாதனை படைத்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் இவர் சேவையாற்றிய காலத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் அதிக மாணவர்களை சித்திபெற வைத்தமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தொடர்ந்து 2016இல் அதிபர் தர உயர்வு பெற்ற இப்பாடசாலையைப் புதிய பாதையில் அடி எடுத்து வைப்பதற்காகப் பல்வேறு நவீன சிந்தனைகளுடன் பாடசாலையைப் 05.10.2016 திரு.ல.அமலானந்குமார் ஆகிய நான் பொறுப்பேற்றுள்ளேன். இப்பாடசாலையானது தற்போது 1961 ஆண்டு கட்டப்பட்ட (70'x 20') கட்டடம் ஒன்றினையும் 1977 ஆம் ஆண்டு கட்டப்பட்ட (40'x 20') கட்டடம் ஒன்றினையும் இணைத்து ஒரு கட்டடமாக காட்சியளிக்கிறது. 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கொண்டுள்ள இப்பாடசாலைக்கு பௌதீக ரீதியான வளப்பற்றாக்குறை பல பூர்த்தி செய்யாமல் காணப்படுகின்றது. இவ்வாண்டில் ஒளிவிழா மற்றும் பரிசளிப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினரான திருவாளர் மாவை S.சேனாதிராஜா அவர்களிடம் தேவை முன்வைக்கப்பட்ட போது 2017 ஆம் ஆண்டின் தனது பாதீட்டின் நிதி ஒதுக்கீட்டில் 110'x 25' மேல்மாடி கட்டடம் ஒன்றினை பாடசாலைக்கு வழங்குவதாக கூறியுள்ளார். இதுவோர் பாடசாலைக்கும் மாரீசன்கூடல் கிராமத்திற்கும் கிடைத்த பிரகாசம் மிக்க செய்தியாகும்.

எமது பாடசாலை தேவைகள் வரிசையில்

01. புனரமைக்கப்பட வேண்டிய உள்ள மைதானம்
02. கட்டடங்களுக்குரிய செல்வதற்கான நடைபாதைகள்
03. பாடசாலையின் முன் காட்சி தரவேண்டிய பாடசாலையின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர்ப்பலகை
04. நுழைவாயிலுக்கமைய மதில் பகுதிகளில் பொருத்தமான கருத்தோவியங்கள்
05. பாடசாலைக்கிடைப்படம்
06. வகுப்பறைகளுக்கான பொருத்தமான அலுமாரிகள்
07. மாதிரியான வகுப்பின் மூலைகளுக்குரிய அடிப்படை வசதிகள்
08. கொடிக்கம்பம் ஏற்றப்படுவதற்கான தளப்பகுதி
09. சிறுவர் நூலகத்திற்கான தளபாடங்களும் பொருத்தமான நூல்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மா


என்னைப் பெற்றவர் - அம்மாவே
அம்மாவின் அன்பிற்கு எல்லையே இல்லை
ஈர் ஐந்து மாதங்கள் எம்மை
கருவறையில் சுமந்து
பாலூட்டி சீராட்டி வளர்ப்பவளும் - அம்மா
அம்மாவின் அன்பிற்கு நிகரே இல்லை
அம்மா அம்மா அம்மா



# தாய்

ஆயிரம் உறவுகள்
அகிலத்தில் உண்டு
அத்தனையும் அன்னை
போல் வருமா?
ஓர் ஆயிரம் உயிர்கள்
இவ் வையகத்தில் உண்டு
இத்தனையும் அன்னை
இன்றி தோன்றியதா?
ஒவ்வொரு உயிரின் உயிர்ப்பிற்கும்
இவளே மூலம்
இவள் அன்பின்
ஆழத்திற்கு ஆழம்
உண்டோ அகிலத்தில்
கண்ணை இமைகாப்பது
போல் காலமெல்லாம்
கஷ்டம் நேர்ந்த போதிலும்
காத்திடுவாள் எம்மை!

ஆ.ஜென்சிமெதிஸ்கா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாபூசுஷணம், சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்களுடன் நேர்காணல்



(திருமதி.சுகந்தா கிருபானந்தராசா)

01. வணக்கம் ஐயா, எங்கள் ஊர் இளவாலையில் பலராலும் மதிக்கப்படும் ஒருவராக விளங்கும் தங்களைப்பற்றி அறியவிரும்புகின்றோம். உங்கள் பிள்ளைப்பருவம் பற்றி அறிய விரும்புகின்றோம். உங்கள் பிள்ளைப்பருவம் பற்றிச் சொல்வீர்களா?
வணக்கம் நான் இளவாலை பத்தாவத்தையில் ஒரு சாதாரணதர கமக்காரக் குடும்பத்தில் சுப்பிரமணியம் பத்தினிப்பிள்ளை தம் பதியரின் மகனாக 1938.03.28இல் பிறந்தேன்.

02. பாடசாலைக்கல்வி எப்படி அமைந்தது
இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் (அதன் அப்போதைய பெயர் :- தெல் வடமேற்கு மெய்கண்டான்) நிறுவனர் ஏவூர் இராசரத்தினம் அவர்களால் ஏடுதொடக்கப் பெற்று 1954இல் எஸ்.எஸ்ஸி பரீட்சையில் முதலாம் தரத்தில் சித்திபெற்றேன். (கல்லூரியில் கற்கவேண்டும் என்ற ஆவல் பொருளாதாரம் இன்மையால் கை கூடவில்லை)

03. உயர் கல்வியை எங்கு கற்றீர்கள்
பலாலி ஆசிரிய கலாசாலையில் (1957 - 1958) பொதுப்பயிற்சி பெற்றேன்.
மீதிக்கல்வி எல்லாம் நானாகக் கற்றுக்கொண்டவை தான்
நீங்கள் பார்த்த தொழில்கள்
வாழ்நாள் முழுவதும் கமத்தொழிலில் ஈடுபட்டேன்.
1955 - 1956 வீரகேசரி பத்திரிகையில் வேலைசெய்தேன்
1959 இல்மாளிகாவத்தை Denham english school ஆசிரியர்
1960 - 1968 மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி ஆசிரியர்
1969 - 1970 கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்
1971 மகாஜனக் கல்லூரி ஆசிரியர்
அதிபராக பதவி உயர்வுபெற்று
1972 - 1975 மாங்குளம் அ.த.க வித்தியாலய அதிபர்
1975 - 1998 இளவாலை மெய்கண்டான் ம.வி

04. உங்கள் கல்விப் பணிபற்றிச் சொல்வீர்களா?
மாணவர்களை என்பிள்ளைகள் போலவும், ஆசிரியர்களை எனது சகோதரர்களாகவும், அன்பு பாராட்டி வழிநடத்தினேன். அது தான் எல்லாவற்றிற்குக் காரணம் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

05. தங்கள் வாழ்க்கைத் துணைவி பற்றிச் சொல்வீர்களா?
1967இல் எனக்கு வாழ்க்கைத் துணையாக இணுவில் கிழக்கு சிவகாம சுந்தரியைத் தேடித்தந்தார்கள். என் குடும்பபற்று, கமச்செய்கை, ஆசிரியைப்பணி, அதிபர்சேவை, கலைப்பணி, சமூக சமயப்பணி, அத்தனைக்கும் என் இணைபிரியாத் துணையாய் இருந்ததை உலகம் அறியும்.

06. தங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம் ஏதும் உண்டா?
ஆம் 2010.07.03 மதிய நேரம் (கொழும்பில் வாழும் காலத்தில்) இருவரும் வெள்ளவத்தையில் அறுதலாக உலாவி விட்டுவந்து துணைவி வீட்டுக்குள் சென்றவள் 15 நிமிடத்தில் பேருறக்கத்தில் மறைந்தார். என் வாழ்வின் ஒவ்வொரு கணமும் மறக்க முடியாத சம்பவம் இது.

07. நீங்கள் இலக்கிய உலகிற்குள் எப்படி நுழைந்தீங்கள்
மெய்கண்டானில் படிக்கும் காலத்தில் அதிபர் ச.சுப்பையன் அவர்கள் என்னைப் புலவர் என்றே அழைத்து இலக்கிய ஈடுபாட்டை ஊட்டினார். ஆசிரியர் கலாசாலையில் கற்கண்டுப்பண்டிதர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் வளப்படுத்திவிட்டார். பின்னர் நான்வாழ்ந்த சூழ்நிலைகளால் பல்கலைகளிலும் ஈடுபடும் வாய்ப்பு ஏற்பட்டது.

08. இதுவரை நீங்கள் 25க்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளீர்கள். இது பற்றிய அனுபவம் எவ்வாறு அமைந்தது.
"வாழும் சூழ்நிலைதான் மனிதனை உருவாக்குகிறது" என்ற பொன்மொழி என் வாழ்வில் உண்மையாகவே அமைந்தது. என்ற நூல் ஆக்கங்களில், வானொலிப்பேச்சுக்கள், இலக்கிய நாடகங்கள், வில்லுப்பாட்டுக்கள், இசைநாட்டிய நாடகங்கள், சமய நூல்கள் முதலாகப் பலதரப்பட்டவை.
தெல்லிப்பழைக்கலை இலக்கியக்கணம் 2015இல் வெளியிட்ட "சைவப்புலவர் சு.செல்லத்துரையின் கலையும் வாழ்வும்;" எனும் நூலில் என் முழுமையைக் காணலாம்.

09. நீங்கள் பெற்ற வெற்றி விருதுகள் பற்றி?
1965 இலங்கைக் கலைக்கழகத்தின் முதற்பரிசு நான் மட்டக்களப்பு நகரசபையில் மேடையேற்றி "ஆதவனே மன்னிப்பாய்" நாடகத்துக்குக் கிடைத்தது. அதன்மேல் எண்ணில்லாத பரிசுகள் பெற்றேன். பட்டங்கள் பல பெற்றேன். அவற்றுள் இந்து கலாசாரத்தினைக் களம் வழங்கிய "கலைஞானகேசரி" இலங்கைக் கலாசார அமைச்சு வழங்கிய "கலாபூஷணம்" ஈழத்துச் சிதம்பரம் வழங்கிய "சித்தாந்தச் செல்வர்" குறிப்பிடக் கூடியன

10. தங்களின் தற்போதைய இலக்கிய சமயப்பணிகள் பற்றி
கொழும்புத்தமிழ்ச்சங்கத் தமிழ்ப்பட்டறைக் கற்கை நெறிவிரிவுரையாளர், திருவாடுதுறை ஆதினச் சைவசித்தாந்த திருமுறை விரவுரையாளர் இந்து கலாசாரத் திணைக்கள வளவாளர் என்பன குறிப்பிடத்தக்கன

11. நீங்கள் சேவை செய்யும் நிறுவனங்கள் பற்றி
கொழும்புத் தமிழ்ச் சங்க உபபோஷகர்
தெல்லிப்பழைக் கலை இலக்கணத் தலைவர்
கொழும்பு சுகவாழ்க்கைப் பேரவைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தூது மரிய சேவியர்அடிகளார்

இல்லையென்று வருவோருக்கு இல்லை என்று சொல்லாது இன்முகத்துடன் கொடுக்கும் இளவாலை ஊர் தனிலே 1939 ஆம் ஆண்டு டிசம்பர் 3ஆம் திகதி இளவாலையில் பிறந்தார். தமது ஆரம்பக்கல்வியை இளவாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையிலும், அதன் பின்னர் புனித ஹென்றியரசர் கல்லூரியிலும் கல்வி கற்றார். அதை தொடர்ந்து 1952 ஆம் ஆண்டு குருத்துவப்பணியில் தன்னை இணைத்துக் கொள்ள யாழ் புனித மாட்டினார் குரு மடத்தில் சேர்ந்து அதே ஆண்டில் பத்திரிசியார் கல்லூரியிலும் தமது கல்வியைத் தொடர்ந்தார். மாணவர்கள் மத்தியில் உருவெடுத்த நீ.மரியசேவியர் செயல்வீரனாய் 1962 ஆம் ஆண்டு யூலை மாதம் 01ஆம் திகதி ரோம் நகரில் தனது 22 ஆவது வயதில் திருச்சபைச் சட்டத்தின்படி வயதுக்குறைவால் பரிசுத்த தந்தை 23ஆம் அருளப்பரின் சிறப்பு அனுமதி பெற்று குருவாக திருநிலைப்படுத்தப்பட்டு பங்குத்தளங்களில் பணிக்கென புகுந்தார். கலையை தன் கருவியாகக் கொண்டு மனிதத்துவத்தை தன் முகமாய் அணிந்து முழு மூச்சாய் பணி தொடர்ந்தவர். சீர்திருத்த வாதியாய், சிந்தனையாளனாய், ஆத்மீக நேர்மையில் நின்று பணி தொடர்ந்தவர். அவரது பணி கண்டும் பேராண்மை கண்டும் செயல் வீரம் கண்டும் அணி அணியாய் சேர்ந்தனர் இளையோர். இளைஞர்கள் பலர் திருமறையின் கருவறையில் கலைவழி இறைபணி என்ற விருது வாக்கைக்கொண்டு பாடுகளின் நாடகம் என்ற அரங்கக்கலை இயக்கத்தில் இணைந்தோர் ஒரு இயக்கமாகவே மாறினர். திருமறைக்கலாமன்றம் அதன் நாமமாகியது.

மன்னார், உரும்பிராய், நாரந்தனை, குருநகர், அச்சுவேலி, கிளிநொச்சி என நகர்ந்த நீ.மரியசேவியர் அடிகளின் பங்குத்தளங்களோடு அவரது பணிகளும் நகர்ந்தன. இணைந்த இளைஞரும் நகர்ந்தனர். நிதிவளம்மில்லை அன்று அர்ப்பணமும் தியாகமும், நிறைந்த மனித வளம் இருந்தது. அந்த வளத்தில் திருமறையின் பொதுமைக்குள் பல சாதனைகள் நிறைவேற்றினார். "கல்வாரியில் கடவுள்" "கோவில் கண்ட கொலை" "மூவேந்தர்" "அருளும் இருளும்" என பல ஆற்றுகைகள் அரங்கேறின அந்த நகர்விற்கு சிகரம் வைத்த நிகழ்வாக கோட்டை பெரும் மதில் பிண்னனியில் "அன்பில் மலர்ந்த அமர காவியம்" என்ற பெரும் படைப்பு ஒன்றினை அரங்கேற்றி சாதனை படைத்தார். அது மட்டுமன்றி ஈழத்திலிருந்து இந்தியா சென்ற முதல் கலைக்குழுவாக திருச்சித்தேவர் மண்டபத்தில் "களங்கம்" நாடகம் நிகழ்த்தி சாதனை படைத்தார்.

ஐரோப்பிய நாடகங்களில் பட்டமேற்படிப்புக்களில் தொடர்ந்து சைவ சித்தாந்தம், தமிழ் இலக்கியத்திலும் கலாநிதி படிப்புக்களையும் முடித்து கல்வி அழகோடு நீ.மரியசேவியர் அடிகள் உருவாக்கம் பெற்ற காலத்தில் கலை இயக்கமும் விடாது தொடரப்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலும் "பலிக்களம்" நாடகம் மேடையேறியது. ஈழத்தின் முதல் திரைப்படமாக "பலிக்களம்" பதிவாகியது. "காட்டிக்கொடுத்தவன்" "சாவைவென்றசத்தியன்" – என பல கலைப்படைப்புக்கள் அரங்கேற்றி சாதனைகள் படைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் தமிழும், தமிழ் கலாச்சாரம் என்ற பொதுமைக்குள் இவர் காலடி எடுத்து வைத்து. யாழ் மண்ணில் நிரந்தரமான இல்லிடத்தை தேடிக்கொண்டு தன் செயல்களத்தை அதிகரித்து வந்தார். கவின்கலைகள் பயிலகம், நடனப்பயிலகம், சிறுவர்கலைக்கூடம் என்ற பயிலகங்களை உருவாக்கியதுடன் நாட்டுக்கூத்து, இசைநாடகம், இலக்கியம், நவீனநாடகம், என்றெல்லாம் 34 பிரிவுகள் அமைத்து தீவிர செல் இயக்கமாய் பணிகளை விரிவாக்கினார். 25 ற்கு மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றி யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி, கொழும்பு, திருகோணமலை, வவுனியா, என பணித்தளங்களை விரிவாக்கினார். போரிலும், இடறிலும் கலைப்பணியால் சமூகத்தின் துயர்துடைக்கும் நிறுவனமாய் திருமறைக்கலாமன்றத்தை தலைநிமிர்ந்து நிற்க செய்தார்.

இதே காலப்பகுதியில் தான் இளவாலை ஒரு பல கலைஞர்களைக் கொண்ட கலைப்பூமியாக காணப்பட்டதைக் கண்டு கொண்ட ஏ.ஆர்.விஜயகுமார் அருட்தந்தையிடம் கோரிக்கையினை முன் வைக்க அவரும் அதற்கான அனுமதியினை அளித்து 1999 ஆம் ஆண்டு ஏ.ஆர். விஜயகுமார் ஆசிரியரை இணைப்பாளராகக் கொண்டு மன்றத்தை இளவாலையில் ஸ்தாபித்து கலைக்குள் உறங்கிக் கிடந்த இளவாலையின் கலைகளை துயில் எழச் செய்தார் இதற்காகவே சிறுவர்கலைக்கூடம், மகளிர்அவை, இளைஞர்அவை, என நிர்வாக கட்டமைப்புக்கள் செய்து சிறப்பான முறையில் இன்றும் கலையினை கைவிடாது கட்டிக்காத்து வருகின்றார். இதன் விளைவாக இன்று இளவாலையில் மன்றத்திற்கென தனியாக ஒரு இடமும் காணப்படுகின்றது. ஆசிரியர்.ஏ.ஆர்.விஜயகுமாரைத் தொடர்ந்து இணைப்பாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஆசிரியரும்,சமாதான நிதவானுமாகிய பிற்றர்பியன்வெனு அவர்கள் அருட்தந்தைக்கு ரோமில் கிடைக்கப் பெற்ற "கலைத்தூது பட்டத்தின் பெயரிலே பாரிய கலைக்களரி ஒன்றினையும் அமைத்திருக்கிறார்கள்.

இன மத மொழி பிரதேசம் என்ற எல்லையைக் கடந்து செயல்புரியும் அரச சார்பற்ற செயல் இயக்கமாக மன்றத்தை மாற்றி. ஆழ வேறுன்றி அகல கால் பதித்து வடக்கு கிழக்கு தெற்கு என 16 மாவட்டங்களில் 20 செயற்களங்களில் இன மத மொழி வேறுபாடு அற்று செயற்படும் அரச சார்பற்ற அமைப்பாக மாற்றி. நாடு கடந்து 12 கலைப்பயணங்களை பிற நாடுகளில் மேற்கொண்டார். பல அரங்க ஆற்றுகைகள் வெளியீடுகள் களப்பயிற்சி கலைப்பயணங்கள் என்று இடைவிடாது இயங்கிக் கொண்டிருக்கும் இயக்கமாக மாற்றி நிற்பதுடன் பல நூறு இதயங்களை அங்கத்தவர்களாக கொண்டு முழுமைப்பட்டு திருமறைக்கலாமன்றத்தை செயற்பட வைக்கின்றார்.

இளவாலையில் பிறந்த இவர் இளமைக்காலம் முழுவதையும் சேவைக்கே அர்ப்பணித்து வளர்ச்சிப்படிகளில் தன்னை தவமாக்கி, வாழ்வைக்கரைத்துக் கொண்ட நீ.மரியசேவியர் அடிகளின் பெரும் உழைப்புடன் பல நாறு கலைஞர்களின் அர்ப்பணம் மிக்க சேவையின் வியர்வைத்துளிகளும் கலந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் ஈட்டிய சாதனைகளுக்கும் சேவைகளுக்கும் அனேக விருதுகள் கிடைத்திருக்கின்றன அதில் நான் அறிந்த மட்டில் இவர் அற்றிய சேவையின் சிகரமாக அமைந்த சேவையாக வடபகுதியையும், தென்பகுதியையும் நல்லெண்னத்துடன் இணைத்துகலைப்பாலங்களை அமைத்ததன் ஊடாக நல்லெண்னத்தையும், இன ஒற்றுமையினையும் ஏற்படுத்தியமையின் பயனாக தற்போதைய ஜனாதிபதி மௌரவ மைத்திரிசிறிசேனா அவர்களினால் "சமூக ஒருமைப்பாட்டிற்கான செயற்திறன் விருது" ஜனாதிபதி விருதாக வழங்கப்பட்டது. இவரது எழுத்துலக சேவையை உறுதிப்படுத்தி கத்தோலிக்க ஊடக விருது வழங்கப்பட்டது. 1997ம் ஆண்டு ஜேர்மனி கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தில் அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார் இவருக்கு பொன்னாடை அணிவித்து "கலைத்தூது" என்ற பட்டத்தை வழங்கி கௌரவித்தார். மேலும் இவரின் ஆர்வத்தை அர்ப்பணிப்பையும் பாராட்டி இவருக்கு ஆளுநர் விருதும், யாழ் பல்கலைக்கழகத்தின் கௌரவ கலாநிதி பட்டமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார். இத்துடன் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் உருவும்,திருவும், அறிவும், ஆற்றலும், அன்பும், பண்பும், நிறைந்த ஒரு பெருமகன். இவர் சிறந்த ஒரு கத்தோலிக்க குருவாக இருந்தும் ஏனைய சமயத்தலைவர்களை மதிக்கும் பெருங்குணம் படைத்தவர்.

மேலும் பேசப்பழக இனியவர். ஆயிரம் பேருடன் பழகினாலும் அவர் முன்னாடி போய் நின்றால் பெயர் செல்லி அழைத்து எம்மை பெருமிதப்படுத்தும் பெருவள்ளல், தன்னலம் விரும்பாத பொதுநலவாதியே நான் கண்ட பேராசிரியர் அருட்தந்தை நீ.மரியசேவியர் அடிகளார் ஆவார். இவர் 2016 ஆம் ஆண்டு 12ம் மாதம் 11ம் திகதி இளவாலையில் திருமறைக்கலாமன்றததில் நடைபெற்ற புதிய அரங்கு திறப்பு விழாவில் மன்றத்தை ஆரம்பித்து நிர்வகித்து வந்த அணைப்பாளர் ஏ,ஆர்.விஜயகுமாருக்கு பொன்னாடை அணிவித்து கௌரவித்ததுடன் தொடர்ச்சியாக அப்பணியினை நிர்வகித்துவரும் இணைப்பாளர். பிற்றர் பியன்வெனு அவர்களுக்கு 2016 ஆண்டிற்கான இயக்குநர் விருது வழங்கி இளவாலையின் திருமறைக்கலாமன்றத்தை பெருமைப்படுத்தியமையிட்டும் அவரது குருத்துவப்பணியில் 54 ஆண்டுகளை நிறைவு செய்திட்ட இப் பெருமகனை நான் மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

தேவராசா லக்ஸ்மன்

உதவி நிகழ்ச்சித்திட்ட ஒழுங்கமைப்பாளர்,

இளவாலைதிருமறைக்கலாமன்றம்.

உசாத்துணை நூல்கள்


கலைமுகம் கலாதரம் சுவடுகள் அமுதமலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம்

வி.கு.வி.ஞானதயாளன்




நீண்டகாலமாக இழுபறி நிலையில் இருந்த தகவலறியும் உரிமைச் சட்டமானது, இலங்கைப் பாராளுமன்றத்தினால் 2016 மார்ச் மாதத்தில் இயற்றப்பட்டுள்ளது. இலங்கை ஜனநாயக வரலாற்றில் இது ஓர் முக்கிய மைல்கல்லாக நோக்கப்படுகின்றது.

தகவலறியும் சட்டமென்றால் என்ன?

இலங்கையில் அதன் வரலாறு மற்றும் குறித்த சட்டத்தில் இடம்பெற்றுள்ள விடயங்கள் என்ன? இச் சட்டத்தால் இலங்கை பிரஜைகள் பெறப்போகின்ற நன்மைகள் என்ன? என்பவை தொடர்பில் இக்கட்டுரையில் விரிவாக ஆராயப்படுகின்றது.

**தகவலறியும் உரிமைச் சட்டமும் அதன் நோக்கமும்**

தகவல் அறியும் உரிமையானது மக்களுக்கான அடிப்படை உரிமையாக பல்வேறு நாடுகளிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலும், 19 ஆம் திருத்தச் சட்டத்திற்கு பின்னர், அரசியலமைப்பின் உறுப்புரை 14(அ) இன் மூலம் தவலை பெறுவதற்கான உரிமையானது ஓர் அடிப்படை உரிமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தகவலறியும் உரிமைச் சட்டமும் இலங்கைப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்டுள்ளது.

ஏதோ ஒருவகையில் ஒவ்வவொருவரும் வரி செலுத்துபவர்கள் என்ற முறையில், அவர்கள் செலுத்தும் பணத்திற்கு என்ன நடக்கின்றது என்பதை அறிவதற்கு உரிமை இருக்கின்றது.

அதனால் தகவல் அறியும் உரிமையானது நாட்டில் பணத்திற்கு என்ன நடக்கின்றது, அல்லது அப்பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது, பிரதிபலன் எவ்வாறு அமைகின்றது போன்ற விடயங்கள் தொடர்பாக, அந் நாட்டின் பிரஜைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களை அறிந்து கொள்வதற்கான வாய்ப்பினை வழங்குகின்றது. தகவலறியும் உரிமையை உறுதிப்படுத்தப்படுத்துவதன் மூலம் பின்வரும் நோக்கங்களை அடையக்கூடியதாய் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

1. பகிரங்க அதிகாரசபைகளின் வெளிப்படைத்தன்மையை பேணலாம்
2. பகிரங்க அதிகாரசபைகளின் பொறுப்புக்கூறும் பண்பாட்டைப் பேணி வளர்க்கலாம்
3. மக்கள் ஊழலை எதிர்த்து நிற்கும் பொறிமுறையை தாபிக்கலாம்
4. பொறுப்புக்கூறும் தன்மை மற்றும் நல்லாட்சியை மேம்படுத்துதல் ஊடாக மக்கள் முழுமையாகப் பங்கேற்கக் கூடிய ஜனநாயகத்தை ஏற்படுத்த முடியும்.

**சர்வதேச நாடுகளில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வளர்ச்சி**

தகவலறியும் உரிமைச் சட்டமானது இலங்கைக்கு புதிய ஒன்றாக இருந்தாலும், 250 வருடங்களுக்கு முன்னர் முதன் முதலில் சுவீடன் நாட்டின் பிரஜைகள் தகவலறியும் உரிமையை அனுபவிக்க வழி ஏற்படுத்தப்பட்டது. அந்நாடு 1766 ஆம் ஆண்டில் பத்திரிகைச் சுதந்திரச் சட்டத்தை நிறைவேற்றி 'தகவலறியும் உரிமையானது மக்களின் அடிப்படை உரிமை' என உலகிற்கு எடுத்துக் கூறியது.

தொடர்ந்து 1966 ஆம் ஆண்டு ஐக்கிய அமெரிக்கா தகவலறியும் உரிமையை சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்தியது.

பின்னர் 1976 ஆம் ஆண்டில் மெக்ஸிகோ நாட்டில் நடைபெற்ற 'தகவல் பரிமாற்றம்' தொடர்பான மாநாட்டில், 'தகவலறியும் உரிமையானது பிரஜைகளின் சமூக உரிமை' எனச் சுட்டிக்காட்டப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடுகளும் தகவலறியும் உரிமையை தங்களது சட்டவாக்கங்களில் சேர்த்துக்கொள்ள ஆரம்பித்தன. இலங்கை தவிர, சார்க் பிராந்தியத்திலுள்ள இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேசம், மாலைதீவு, நேபாளம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் தகவலறியும் சட்டத்தினை கடைப்பிடிகின்றன.

இந்தியாவில் 2005 ஆம் ஆண்டு இந்திய அரசியல் அமைப்பின் 22 ஆவது பிரிவுக்கு திருத்தம் கொண்டுவரப்பட்டதன் மூலம் தகவல் அறியும் உரிமை அந்நாட்டு மக்களுக்கான அடிப்படை உரிமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SRIRAM HARDWARE & CONSTRUCTION

Nakuleswaram road,karukampanai,
keerimalai
T.P:- 0777279205 , 0777807373

SRIRAM TRADE CENTER

Ampanai junction,pannalai,
telllippalai.
T.P:- 0772226241 , 0212059702

குமார் பந்தல் சேவை

மேசைகள்,கதிரைகள், மங்கள நிகழ்வுகளுக்கான
அலங்கரிக்கப்பட்ட பந்தல்கள்,
மேடைகளுடனான மணவறைகள்,
சமயல் பாத்திர வகைகள்


என்பவற்றை உங்கள் தேவைகளுக்கேற்ப
வாடகை முறையில்
பெற்றுக்கொள்ளலாம்

கல்லூரி வீதி இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜங்கரன் ஐஸ் கிறீம்





ஐஸ் பழம்
ஐஸ் சொக்
ஐஸ் கப்
ஐஸ் கோண்
ஸ்பெசல் ஐஸ் கிறீம்



**உங்கள் தேவைகளுக்கேற்ப மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்**

தொ.இல:- 0779352707-0779362404



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RAJAN
contact

SITHIRAMEZHY ILAVALAI.

RAJAN SOUNDS

+94776183125

RAJAN SOUNDS

உங்கள் வீடுகள் ஆலயங்களில் இடம்பெறும்
மங்களகரமான நிகழ்வுகளுக்கான
பூரணமான இசை அமைப்புக்களை வழங்க
நாடவேண்டிய ஒரே இடம்

T.P:-0776183125 | 0755565110 | 0773534626

**அம்பிகை திருமண சேவை**

ஆண் பெண் இருவர்
சாதகம் பொருத்தம் பாரத்து
கொடுக்கப்படும் அத்துடன்
சாதகம் எழுதிக்கொடுக்கப்படும்



T.P:-0774103597
0774475071

கீரிமலை வீதி, வடலியடைப்பு
பண்டத்தரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ண பகவான் சைவ உணவகம்

சுத்தமானதாகவும் சுகாதார முறையிலும்
தயார் செய்யப்பட்ட சைவ உணவு வகைகள்





பிட்டு – இடியப்பம் – இட்லி
ரோட்டிஸ் வகைகள்
மதிய உணவு

நகுலேஸ்வரம் ஆலயம் முன்பாக
கீரிமலை



# ஈஸ்வரா கூல் ஸ்பொட்

யாழ் மண்ணின் முன்னணி
நிறுவனங்களால் தயாரிக்கப்பட்ட




**தீன்சுவைப் பொருட்கள்**
**தட்டு வடை**
**முறுக்கு**
**மிக்சர்**
**பகோடா**
**குளிர்பான வகைகள்**




*போன்றவற்றை ஒரே கூரையின் கீழ்*
*பெற்றுக்கொள்ள நாடுங்கள்*

நகுலேஸ்வரம் ஆலயம் முன்பாக
கீரிமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவகம்

Photo copy
Printing
Laminating
Binding
Typing

Stationaries
Browsing
Mobile reloads and cards
DVD/CD



மற்றும் பாடசாலை உபகரணங்களையும் பெற்றுகொள்ள முடியும்.

கல்லூரி வீதி
இளவாலை

தொடர்பு இல:0772487673

# நிரோ வெதுப்பகம்

வீட்டு தேவைகளுக்கும்
மற்றும் விற்பனைக்குமான
பாண் , பணிஸ் வகைகள்
போன்றவற்றை மொத்தமாகவும்
சில்லறையாகவும் தரமானதாக
பெற்றுக்கொள்ளலாம்



கல்லூரி வீதி
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோகுலன் அரைக்கும் ஆலையும்
# பல்பொருள் வாணிபமும்



அனைத்து விதமான
பலசரக்கு பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளவும்
அரிசி தீட்டுதல் அரிசி தூள் அரைத்துக்கொள்ளவும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
-பிரதான வீதி இளவாலை-



# ஜெயா
# வரத்தக நிலையம்



PHOTOCPY
RELOAD
**பலசரக்குப் பொருட்கள்**
**பாடசாலை உபகரணங்கள்**

இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்று முடிக்க
நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்.

தொடர்புகளுக்கு-0778553694 **பிரதான வீதி இளவாலை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DTH Best Recharge

உங்கள் அபிமான தொலைக்காட்சி அலைவரிசைகளை இல்லங்கள் தோறும் இரசித்திட இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

**மேலும் புது இணைப்புக்கள் திருத்த வேலைகள் என்பன இலாபகரமாக செய்து கொடுக்கப்படும்.**

TATA Sky
SUN DIRECT
airtel digital TV
dishtv
BIGTV
VIDEOCON d2h





தொடர்பு.இல:-0755268535-0770560413

# NEW MATHS ACADEMY

**1.தரம் 1 முதல் 11 வரையான வகுப்புக்கள் நடை பெறுகின்றன.**

**2.பிரபல ஆசிரியர்களால் தரம் 4,5 ற்கான புலமைப்பிசில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.**

**3.தரம் 9,10,11 வகுப்பிற்கான கடந்தகால பரீட்சை வினாத்தாள் மீட்டல் வகுப்புக்கள்.**



## அனுமதிக்கு முந்துங்கள்

**வைத்தியசாலை முன்பாக இளவாலை**

**தொ.இல:- 0778081120**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கம் ஸ்ரோர்ஸ்



அனைத்து விதமான
பலசரக்கு பொருட்களையும்
ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
பிரதான வீதி இளவாலை



# புதிய
# காந்தி கல்வி நிலையம்

தரம் 3 முதல் 11 வரையான
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.



அனுபவம் மிக்க ஆசிரியர் குழுவினால்
16 ஆண்டுகளையும் தாண்டிய
சிறப்பான ஓர் கல்விச் சேவை
பிரதான வீதி இளவாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையில் தகவலறியும் உரிமைச் சட்டத்தின் வரலாறு

இவ்வாறான சட்டத்தின் அவசியம் 1994 ஆம் ஆண்டில் இலங்கையில் உணரப்பட்டது. இதனடிப்படையில் சு.மு.று. குணசேகர தலைமையில் அமைக்கப்பட்ட குழு தகவலறியும் சட்டத்திற்கான சிபாரிசுகளை முன்வைத்தது. இனைத் தொடர்ந்து 1996 ஆம் ஆண்டில் தகவலறியும் சுதந்திர சட்டமூல வரைபினை இலங்கை சட்ட ஆணைக்குழு சமர்ப்பித்தது. இந்த வரைபானது பரவலாக விநியோகிக்கப்பட்டிருந்தாலும், பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவேயில்லை. தொடர்ந்து 1997 இலும், 2002 இலும் சந்திரிக்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முண்ணனி அரசாங்கம் முன்வைத்த அரசியல் தீர்வுத் திட்ட வரைபுகளிலும் தகவலறியும் உரிமையானது, அடிப்படை உரிமையாக உள்ளடக்கப்பட்டிருந்தது. அரசியல் காரணங்களுக்காக அவ்வரைபுகள் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்படவில்லை.

2002 ஆம் ஆண்டில், தகவலறியும் சுதந்திர சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்கு இரு கட்சிகள் சார்ந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மேலும், ஊடகங்களும், சிவில் சமூக நிறுவனங்களும் அரசாங்கத்துடன் இணைந்து சட்டமூல வரைபுக்கும், வடிவமைக்கும் உதவின. இந்த செயற்பாடு தகவலறியும் சட்டமூல வரைபுநகலிற்கு வழிகோலியதுடன், 2004 பெப்ரவரியில் அப்போதைய பிரதமர் ரணில் விகரமசிங்க அவர்களால் தகவல் அறியும் சட்டமூல வரைவு அமைச்சரவையில் சமர்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டது. இருப்பினும் பாராளுமன்றத்திற்கு சமர்பிப்பதற்கு முன் 2004 மார்ச் மாதம் பாரளுமன்றம் கலைந்தது. இதன் காரணமாக இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

010ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய அவர்கள் 2003 ஆம் ஆண்டின் தகவலறியும் சட்டமூல வரைபினை தனிநபர் பிரேரணையாக, பாராளுமன்றில் சமர்ப்பித்தார். ஆறு மாதங்களுக்குள், தகவலறியும் சட்டமூலமொன்றை அரசாங்கம் சமர்ப்பிக்கவிருப்பதாக அப்போது ஆளும் கட்சிக் கொறடாவாக இருந்த தினேஃ குணவர்தன தெரிவித்ததையடுத்து, கரு ஜயசூரிய, தமது சட்டமூலத்தை வாபஸ் பெற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் இது சார்ந்த சட்ட முயற்சிகள் எதுவும் முன்வைக்கப்படாமையால், 2011 ஆம் ஆண்டு யூன் மாதத்தில் கரு ஜயசூரிய பாராளுமன்றத்தில் மீண்டும் சட்டமூலத்தை முன்வைத்தார். எவ்வாறாயினும், அது அரசினால் தோற்கடிக்கப்பட்டது. 97 உறுப்பினர்கள் சட்டமூலத்திற்கு எதிராகவும், 34 உறுப்பினர்கள் ஆதரவாகவும் வாக்களித்தனர்.

இறுதியாக தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் தனது 100 நாள் வேலைத்திட்ட வாக்குறுதிகளில் ஒன்றாக தகவலறியும் சட்டத்தை இயற்றலைக் குறிப்பிட்டிருந்தார். இதன் பின்னணியில் 2015 ஏப்ரல் 28 ஆம் திகதி, 19 வது திருத்தச் சட்டம் இயற்றப்பட்டது. இதில் அரசியலமைப்பின் உறுப்புரை 14(அ) இல் தகவலறியும் உரிமையானது பிரஜைகளுக்கான அடிப்படை உரிமை ஒன்றாகச் சேர்க்கப்பட்டுள்ளது.

உறுப்புரை 14(அ) இன் கீழ், சட்டத்தினால் அளிக்கப்பட்டவாறே இந்த உரிமை அமுலாக்கப்படக் கூடியதாகும். எனவே, தகவலறியும் உரிமை சட்டம் இல்லாத நிலையில், தகவலறியும் உரிமை தொடர்பான அரசியலமைப்பு ஏற்பாடு பயனற்றதாகவே இருந்தது. எனவே தான் 2016 மார்ச் 4 இல், பாராளுமன்றத்தினால் தகவலறியும் உரிமைச் சட்டம் இயற்றப்பட்டதுடன், 2016 ஆகஸ்ட் 4 ஆம் திகதி சபாநாயகர் ஒப்பமிட்டதன் மூலம் அது சட்டமாக மாறியது.

**2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவலறியும் உரிமைச் சட்டம்**

இனி தகவலறியும் உரிமைச் சட்டத்தின் கூறப்பட்டுள்ள விடயங்கள் என்ன என்பதை நோக்குவோம்.

இச்சட்டத்தின் பிரிவு – 2 இன் படி, தகவலறியும் சட்டத்தினை அமுல்படுத்தும் பொறுப்பு - வெகுசன ஊடக அமைச்சிற்கு உரியதாகும்.

இச்சட்டத்தின் பிரிவு – 3 இன் படி, பிரசை ஒவ்வொருவரும், ஒரு பகிரங்க அதிகாரசபையின் (அரச நிறுவனம்) உடைமையில், கட்டுக்காப்பில் அல்லது கட்டுபாட்டில் இருக்கின்ற தகவலைப்பெற அணுகுதலுக்கான உரிமையொன்றைக் கொண்டிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல் பெறும் உரிமை மறுக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள்**

தகவலறியும் சட்டத்தினை பயன்படுத்தி அரச நிறுவனம் ஒன்றிடமிருந்து அனைத்து தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம் என ஒருவர் எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக சட்டத்தின் பிரிவு – 5 இன் படி, பின்வரும் சூழ்நிலைகளில் தகவலை அணுகுதலுக்கான கோரிக்கை மறுக்கப்படலாம்.

- எந்தவொரு பொதுமக்களுக்கும் அக்கறையற்ற தனிப்பட்ட தகவல்கள் தொடர்பான தகவல்,
- அரசின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட விடயங்கள்,
- சர்வதேச உடன்படிக்கைகள் தொடர்பான இரகசிய தகவல்கள்,
- இலங்கையின் பொருளாதாரத்தை பாதிக்கக்கூடிய தகவல்கள்,
- வியாபார இரகசியம்,
- மருத்துவப் பதிவேடுகள்,
- எவரேனும் அலுவலருக்கும் பகிரங்க அலுவலரொருவருக்கும் இடையிலான வெளிப்படுத்த அனுமதிக்கப்படாத ஏதேனும் தொடர்பாடல்,
- ஏதேனும் குற்றச்செயலை கண்டறிதலில் இடையூறு விளைவிக்கும் தகவல்,
- தகவலின் வெளிவிடுகையானது நீதிமன்ற அவமதிப்பாக இருத்தல்,
- தகவலின் வெளிவிடுகையானது பாராளுமன்ற சிறப்புரிமைகளின் மீறலாக உள்ளவிடத்து,
- தகவலின் வெளிவிடுகையானது திணைக்களத்தால் நடாத்தப்படுவதாகவுள்ள பரீட்சையொன்றின் சீரியநிலைக்கு தீங்காக இருத்தல்.

**தகவலறியும் சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்**

இச் சட்டத்தினை வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்த பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

சட்டத்தின் பிரிவு – 7 இன் படி, அமைச்சுகள், திணைக்களங்கள், பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், உள் மன்றங்கள், அரசாங்கத்தினால் பொருளளவில் நிதியளிக்கப்படுகின்ற அரச சார்பற்ற ஒழுங்கமைப்புகள், உயர்கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்கள், நியாயசபைகள் மற்றும் ஏனையவை தகவல் அணுகலை வழங்கக்கூடியதாகவும் பதிவேடுகளை பராமரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அவர்கள் அனைத்து பதிவேடுகளையும் மின்னணு வடிவத்தில் (e-filing) பாதுகாக்க முயல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பிரிவு – 8 ஆனது, ஒரு விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் ஒருவர், ஒவ்வோர் ஆண்டும் முறையே யூன் 30 ஆந் திகதிக்கும் டிசெம்பர் 30 ஆந் திகதிக்கும் முன்னராக, ஆண்டுக்கு இரு தடவைகள் தமது அமைச்சுப்பற்றிய தகவல்களை மக்களுக்கு வெளிப்படுத்தும் வண்ணம் அறிக்கை வெளியிட வேண்டும் என தேவைப்படுத்துகின்றது.

பிரிவு - 9 இன் படி, அரசானது ஏதேனும் செயற்றிட்டங்களை தொடங்குவதற்கு 3 மாதங்களுக்கு முன்னர் அது பற்றி பொது மக்களிற்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் குறித்த செயற்றிட்டம் தனிநபர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாக இருப்பின் அவர்களுக்கும் அது பற்றி தெரியப்படுத்துதல் வேண்டும்.

பிரிவு - 11 ஆனது, தகவலுக்கான உரிமை ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படல் வேண்டும் எனவும் ஆணைக்குழுவானது, அரசியலமைப்புப் பேரவையின் விதப்புரைமீது சனாதிபதியினால் நியமிக்கப்படும் ஐந்து (05) ஆட்களைக் கொண்டமைதல் வேண்டும். பின்வரும் நிறுவனங்களின் பிரதிநிதிகள் இதில் இடம்பெற்றிருப்பர்.

1. இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்,
2. வெளியீட்டாளர்கள்
3. பதிப்பாசிரியர்கள் மற்றும்
4. ஊடக ஆட்களின் ஒழுங்கமைப்புக்கள்
5. வேறு சிவில் சமூக ஒழுங்கமைப்புக்கள்

இதன்படி 30.09.2016 ஆம் திகதி ஜனாதிபதியால் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுக்கு பின்வரும் உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டனர்.

1. மஹிந்த கம்மன்பில (தலைவர்)
2. சட்டத்தரணி கிஷாலி ஜயவர்த்தன,
3. சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிஹேவா,
4. முன்னாள் நீதிபதி சலீம் மர்சூக்,
5. தியாகநாதன் செல்வகுமாரன்

இவ்வாணைக்குழுவானது தகவலறியும் உரிமைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்துவதுடன், பகிரங்க அதிகாரசபைகள் மற்றும் தகவல் அலுவலர்கள் ஆகியோரின் செயல்திறன்களை கண்காணித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு - 23 இன் படி, அனைத்து பகிரங்க அதிகாரசபைகளும் தகவல் அலுவல்களை நியமித்தல் வேண்டும். அவர்களே தகவலுக்கான கோரிக்கையைக் கையாளுதல் வேண்டும்.

**தகவலைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிமுறை ஐபிரிவு (24 - 29)ஸ**

அரச நிறுவனம் ஒன்றிலிருந்து தகவல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கை முறை பற்றி இனி கவனம் செலுத்துவோம்.

- ஏதேனும் தகவலைப் பெற விரும்பும் எவரேனும் பிரசை தோதான தகவல் அலுவலருக்கு, தேவைப்படும் தகவல் பற்றிய விபரங்களை எழுத்திலே கோருதல் வேண்டுமே.
- தகவல் அலுவலர் இயன்றளவு விரைவாகவும், 14 வேலை நாட்களுக்கு மேற்படாமலும், கோரப்பட்ட தகவலை வழங்க அல்லது கோரிக்கையை நிராகரிக்க முடிவு செய்ய வேண்டும்.
- கோரிக்கையானது நிராகரிக்க முடிவு செய்தால், கோரிக்கை நிராகரிக்கப்பட்டதற்கான காரணத்தை தகவல் அலுவலர் கோரிக்கையை விடுத்த பிரசைக்கு அறிவிக்க வேண்டும்.
- தகவலை வழங்க முடிவு செய்தால், அத்தகைய முடிபு எடுக்கப்பட்டதிலிருந்து 14 நாடகளினுள் குறித்த தகவல் பிரஜைக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.
- தகவலுக்கான கோரிக்கையானது, ஒரு பிரசையின் உயிர் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்துடன் சம்மந்தப்படுகின்றவிடத்து, அதற்கான பதிலளிப்பு கோரிக்கை கிடைக்கப்பெற்றதிலிருந்து நாற்பத்தெட்டு மணித்தியாலங்களுக்குள் செய்யப்படுதல் வேண்டும்.
- பிரஜை ஒருவர் கோரும் தகவலானது மூன்றாம் நபருடன் தொடர்புடையதாக இருப்பின், தகவலை வழங்குவதா? வேண்டாமா? என்பது பற்றி 7 நாட்களுக்கு அறிவிக்கும் படி, தகவல் அலுவலர் மூன்றாம் நபரை கோருதல் வேண்டும். மூன்றாம் நபர் தகவலை வழங்க சம்மதியாதுவிடின் தகவலை வழங்கக்கூடாது. மாறாக மூன்றாம் நபர் சம்மதித்தாலோ அல்லது பதில் தராவிட்டாலோ அத்தகவலை வழங்க வேண்டும். (பிரிவு – 29)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேன்முறையீடுகள்**

- தகவல் அலுவலரினால் தரப்பட்ட காரணங்களுடன் திருப்திப்படாத பிரசையொருவர், தகவல் அறிவிக்கப்பட்டு இரண்டு மாதங்களுக்குள் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடு ஒன்றை முன்வைக்கலாம்.
- அதே போல் ஆணைக்குழுவின் முடிவினால் பாதிக்கப்பட்ட பிரசையொருவர், மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு அதன் முடிபுக்கெதிராக மேன்முறையீடு செய்யலாம்.

**தகவலறியும் உரிமைச் சட்டத்தின் பிரயோகம்**

இக்கட்டுரையின் கீழ் வரும் இப்பகுதி இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரசுரம் ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டது.

எவ்வாறான சந்தர்ப்பங்களில் தகவலறியும் சட்டத்தினை பிரஜை ஒருவர் பிரயோகிக்க முடியும் என்பது பற்றி உதாரணங்கள் மூலம் பார்ப்போம்.

**உதாரணம் - 01**

பிரஜை ஒருவரின் முச்சக்கர வண்டி பாதையில் உள்ள குழிகளில் விழுந்து உடைந்து பழுதடையும் போது, அவரது நகரத்தில் உள்ள பாதைகளை செப்பனிட்டு திருத்துவதற்காக ஒதுக்கப்பட்ட பணத்திற்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக கேள்வி எழுப்புவதறகான உரிமை அவருக்கு இருக்கின்றது.

- பாதை திருத்தப் பணிகளுக்காக எவ்வளவு பணம் செலவு செய்யப்பட்டது?
- இந்த திருத்தப் பணிகளுக்காக வெளிநாட்டு உதவியாக பணம் வழங்கப்பட்டிருந்தால் அதில் இருந்து எவ்வளவு தொகை செலவிடப்பட்டது?
- பாதையை செப்பனிடுவதற்காக பணியாற்றிய தொழிலாளர்களுக்கு எவ்வளவு ஊதியம் வழங்கப்பட்டது?
- திருத்த வேலைகளுக்கான மூலப் பொருட்களுக்கான செலவினம் என்ன?

போன்ற கேள்விகளை எல்லாம் கேட்கும் உரிமை பிரஜைக்கு உண்டு. அப்போதே பாதை திருத்த வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியான முறையில் செலவிடப்பட்டதா அல்லது ஒப்பந்தக்காரர்களின் சட்டைப் பைகளுக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருட்டினில் நீதி கிடக்கட்டுமே......

எமது சமூகத்தில் மிக உயர்ந்த நம்பிக்கையை பெற்றிருப்பது நீதிமன்றம். பொது நல வழக்கு மற்றும் அரசியல் சார்ந்த வழக்குகளில் நீதி மன்றத்தின் நம்பிக்கை கேள்விக்குட்படுத்தப்பட்ட போதும். சிவில் வழக்குகளில் நீதிமன்றத்தை நாம் பெருமளவில் விமர்சிப்பதில்லை. எது எவ்வாறாயினும் நாம் ஏற்றுக் கொண்ட அல்லது வாழகின்ற சமூகு அமைப்பில் நீதியை தருவதற்கு உள்ள ஒரே இடம் நீதி மன்றமே.

ஆயினும் நீதிமன்றம் செல்லாமல் இருப்பதே ஒரு கௌரவமான வாழ்க்கை என்ற எண்ணங்கள் ஊறிப்போன சமூகமாக எம் சமூகம் இருந்து வருகின்றது.'கோர்ட்டும், ஆஸ்பத்திரியும் கால்வைக்கக் கூடாத இடங்களாகவே' பெரியவர்களால் சொல்லப்பட்டு வருகிறது. நீதி மன்றம் என்பது குற்றங்களை கண்டுபிடித்து, குற்றவாளிகளை தண்டிக்கும் இடமாக மட்டுமே பொது மக்களின் புத்தியில் பதிந்துள்ளதே ஒழிய, நீதியை நிலைநிறுத்துகின்ற இடமாக பொதுப்புத்தியில் பதியவில்லை.

இதனாலேயே பலர் நீதிமன்றம் சென்றதில்லை. சென்றவர்களும் பொதுப்புத்தியில் பதிந்த கருத்தை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். ஏனெனில் நீதி மன்றத்தின் நடைமுறைகள் அவ்வாறுதான் இருக்கின்றன. ஏனைய நீதி மன்றங்கள் பற்றித் தெரியாது ஆனால் வடக்கு கிழக்கு நீதி மன்றங்களில் இதிலிருந்த பெருமளவு வேறுபடாது.

இங்கு நான் நீதிமன்ற நடைமுறை என்பதன் மூலம் கட்டமைப்பு பற்றியோ அதன் நீதிவழங்கும் தன்மை அதனது நியாயப்பாடுகள், பொருத்தப்பாடுகள் பற்றியோ சொல்வதற்கு வரவில்லை. நீதி மன்றத்திற்கு சென்று ஒருவர் தன்னுடைய வழக்கை கொண்டு செல்வதில் உள்ள நடைமுறைகளைப் பற்றியே குறிப்பிடுகிறேன்.

ஏனெனில் நீதிமன்றத்தினுள் செல்வதற்கு ஒருவர் விரும்பாமைக்க பிரதான காரணங்களில் இதுவும் ஒன்றாகஇருக்கின்றது. சமீபத்தில் நீதி மன்றத்திற்கு சென்ற போத எனக்கேற்பட்ட அனுபவம் இந்த கருத்தை உறுதிசெய்வதாகவே படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலும் நீதிமன்றத்திற்கு செல்லும் பொதுமக்கள் குற்றம் சாட்டப்பட்டவர்களாக இருப்பதில்லை. ஏனெனில் குற்றம் சாட்டப்பட்டவரை பொலிசாரே அழைத்து வருவர். இவர்கள் ஒன்று நண்பர்கள்.'.உறவினர்களுக்கு பிணைகட்டுவதற்கு அல்லது நண்பர்கள் / உறவினர்களின் வழக்கின் நிலமைபற்றி தெரிந்து கொள்வதற்கு அல்லது பலசமயம் வாதிகளாக, பாதிக்கபட்டவராகவே இருப்பர்.

நீதி மன்றத்திற்குள் நுழையும் போது வாசலில் உள்ள பொலிசார் அவர்களை வழிமறித்து அவர்களது செல்போன், குடை, ஹெல்மட் போன்றவற்றை வெளியில் வைத்துவிட்டு வரச் சொல்லுவார்கள். இவற்றை வைப்பதற்கான பாதுகாப்பிடத்தை நீதி மன்றமோ அரசோ ஏற்படுத்தியிருக்காது. நீதி மன்ற வளாகத்திற்கு வெளியில் தனியார் ஒருவர் வைத்திருக்கும் சிறிய பாதுகாப்பு கடையினுள் (பாதனிக்கு டோக்கன் பெறுவது போல் பெற்றுக்கொண்டு) வைத்துவிட்டு வருவேண்டும். அவற்றின் பாதுகாப்பிற்கு நீதிமன்றத்தினதோ அரசினதோ உத்தரவாதமில்லை.

வாசல் தாண்டி உள் நுழையும் போதே உள் கடமையில் ஈடுபட்டிருக்கும் நீதி மன்ற பொலிசாரால் சத்தம் போடாதே என சைகையாலும், மெல்லிய குரலிலும் எச்சரிக்கப்படுவதுடன் பொதுவரவேற்பறையின் ஓராமாகப் போடப்பட்டிருக்கும் கதிரைகளில் உட்கார்ந்திருக்கமாறும் எச்சரிக்கை செய்யப்படுவார். உள்ளே வந்தவர் மறுப்பேதும் சொல்லாமல் கதிரைகள் இருக்கும் ஓரங்களுக்கு உடனடியாகச் செல்லவேண்டும். நீதி மன்றத்திற்கு அவர் புதிதாக வந்திருந்தாலே அல்லது தமது உறவினரதோ.'.நண்பர்களோ அல்லது வழக்கு எங்கே நடைபெறுகிறது என்ற தகவல் தெரியாமல் அவ்விடத்தல் 2நிமிடங்கள் நின்று சுற்றுமுற்றும் தேடிப்பார்தாலோ உடனடியாக காவலில் உள்ள பொலிசார் அவரிடத்தில் நெருங்கி வந்து ஓரத்திற்கு செல்லுமாறு அதட்டுவார். சிலவேளை கையால் தள்ளுவதும் உண்டு.

நீதி மன்றத்தின் பொது வரவேற்பறையில் வரவேற்பு உதவியாளரோ.'. தகவல் உதவியாளரோ இருக்க மாட்டார். பொலிசின் கட்டளைப்படி அங்கே அவரைப்போலவே பலர் ஓரமாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கதிரைகளில் எங்கே போவது என்று தெரியாமல் பாடசாலைப் பிள்ளைகள் போல அமைதியாக அமர்ந்திருப்பார்கள். கதிரைகள் கிடைக்காதவர்கள் நின்றபடி இருந்தார்கள். ஒரு சிலர் அருகிலிருந்தவர்களிடம் கதைப்பதற்கு வாயைத் திறந்தவுடன் கதைக்காதே என்ற அதட்டலுடன் பொலிசார் அவர்களை நோக்கி கடுமையான ஒரு பார்வையை வீசி அடக்குவார். பாடசாலையில் பழக்கப்படும் பழக்கம் இதற்கு நன்றாக ஒத்துழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸார் கவனிக்காத நேர இடைவெளிகளில் தான் இரகசியமாக தகவல்களை பாதி சாடையிலும் உதட்டசைவிலும் கேட்டுக் கொள்ளவேண்டும். அல்லது அவ்வழியில் செல்லும் வக்கீல் ஒருவர் உங்களிடம் என்ன விடயம என்று கேட்கும் வரைக்கும் காத்துக்கிடக்க வேண்டும்.

நீதி மன்றம் பற்றிய பயத்தோடு புதிதாக ஒருவர் நீதி மன்றுக்கு வருவாராக இருந்தால் அவர்நிலமை என்ன. ஓரமாக நின்று கொண்டிருக்க வேண்டியதாகவே இருக்கும்.

அரைநிலப்பிரபுத்துவ அடிமை முறை மிக அப்பட்டமாக வெளித்தெரிவதும் நடைமுறைப்படுத்தப்படுவதும் நீதிமன்றத்தில் தான் என்பதை மிக தெளிவாகவே அறிய முடியும். நீதி மன்றம் என்பது நீதியைச் சொல்லுகின்ற இடம் என்ற எண்ணம் நீதி மன்றத்தின் வரவேற்புக் கூடத்திலோ அல்லது நீதி மன்றத்திலோ காத்திருக்கும் ஒருவருக்கு ஏற்படவாய்பே இல்லை.

தனக்கு நீதி மறுக்கப்பட்டுள்ளது, அநீதி இழைக்கப்பட்டள்ளது, நீதி எனக்குத் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நீதி மன்றத்திற்கு வருபவர், அங்கே காவலர்களையும் நீதவானையும் பயத்துடனே பார்த்து மௌனமாக அவர் சொல்லுவதை ஏற்பதுபோலவே நீதிமன்ற நடைமுறைகள் உள்ளன.

அமைதியாக்குதல் என்பது அடக்குமுறையின் அடையாளம் தானே. நீதி மன்றிலேயே அடக்குமுறை சட்டரீதியாக அனுமதிக்கப் பட்டமாதிரித் தான் பொலிசாரின் நடவடிக்கைகள் அமைந்திருக்கும். நீதி சொல்கின்ற நீதவான் மேல் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, நீதி சொல்கின்றவரிடம் பயமும் மரியாதையும் ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டதாகவே இந்நடைமுறைகள் உள்ளன. இதன்படிக்கு நீதிமன்றத்தில் வழங்கப்படும் நீதியை பயத்தாலும், அடிமைமுறையான மரியாதையாலும் மட்டுமே ஒருவர் ஏற்றுக் கொள்ளும் படி தயார் படுத்துப்படுகிறார்.

குறைந்த பட்சம் நீதியைச் சொல்பவர் மேல் நம்பிக்கையை ஏற்படுத்தி தனக்கு நீதி கிடைத்தது என்ற நம்பிக்கையை உருவாக்குதற்கான தயார்படுத்துவதற்கான நடவடிக்கைகள் அமைந்திருந்தாலும் பரவாயில்லை. அடிமைத்தனப் பயத்தையும் அதனால் ஏற்படுகினற் மரியாதையும் பய்னபடுத்தித்தான் நீதிகள் வழங்கப்படுகிற நீதி என்ன நீதியாக இருக்க முடியும். இந்த 'நீதி' யைத்தான் நாம் போற்றுகின்றோம். இந்த நீதி கிடைக்கவில்லை என்றுதான் நாம் போராடுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரினவாத அரசின் சட்டங்களும் செயல்ப்பாடுகளும் நீதிமன்றம் நீதி செய்யும் என்ற நம்பிக்கையை எமது நாட்டின் சிறுபான்மையினர் மத்தியில் ஏற்படுத்தவில்லை. ஆனால பயங்கரவாதச் தடைச் சட்டமும், அவசரகாலச் சட்டமும் நீதி, நீதி மன்றம் என்ற அக்கறையற்று கிடந்த கணக்கற்றவரை நீதி மன்றத்தின் வாயிலும் வக்கீலின் வீடுகளிலும் தவம்கிடக்கும் படி செய்துள்ளது.

தன் கணவனோ, சகோதரனோ, பிள்ளையோ கைது செய்யப்பட்டு நீதி மன்றத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள் கேள்விப்பட்டு நீதி மன்றத்திற்கு வரும் கிராமத்து மிகவறிய ஏழை பெண்களின் நிலையை யோசித்துப் பாருங்கள். முதன் முதலாக நீதி மன்றத்திற்கு வரும் அவர்களை பொலிசார் சோதனை செய்து உள்ளே அனுப்பி, ஏன் வந்திருக்கிறார் என்றுகூட அறிந்து கொள்ள முயற்சி செய்யாமல் 'ஓராமாகப் போய் நில்' என்று சொன்னால் அவர் என்ன செய்வார். ஏற்கனவே செய்யப்பட்ட கொடுரங்களை பார்த்து பொலிசார் என்றாலே பயங்கொண்டிருக்கும் அவர்களை, நீதிமன்றில் வைத்து பொலிசார் 'ஓரமாய்ப் போய் நில்' என்றால் மூச்சுக்கூட விடாமல் ஓரமாக போய் நின்றுகொண்டேதானே இருப்பார்கள்.

சரி அவருக்கு அருகில் நிற்பவர்களாவது அவர் ஏன் வந்திருக்கிறார் என்று கேட்டு அவருக்குத தேவையான உதவிகள் செய்ய முடியுமா? என்று பார்த்தால் அதுகூட சாத்தியமில்லை. தெரிந்தவர்களையாவது தேடித் திரிந்து உதவி கேட்பதென்றால் அதற்கும் வழியில்லை. எந்த நீதி மன்றம் என்று தெரியாமல் முழித்தபடி நிற்க வேண்டியது தான். தடுத்துவைக்கபட்ட கைது செய்யப்பட்ட தன் மகனோ, கணவனோ, உறவினனோ வந்திருக்கிறாரா என்ற குற்றம் சாட்டப்பட்டவர்கள் அடைக்கப்பட்ட கூண்டுக்குள் பார்பதற்கும் அனுமதிக்க மாட்டார்கள். யாராவது வக்கீல் இரக்கப்பட்டு வந்து உதவி செய்தால் மட்டுமே அவர் நீதி கிடைக்கு மிடத்துக்குச் செல்லமுடியும்.

இவ்வாறான சந்தர்ப்பங்கள் எமது நாட்டில் எவ்வளவு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது பற்றி நாம் சிந்திக்காமல் இருந்தது ஏன்? இந்த கேள்வி நியாயமான பதில்களை நாம் ஒவ்வொருவரும் தேடுவதை மறப்போமானால் நாம் நீதி பற்றியும், உரிமைகள் பற்றியம் எவ்வளவு கதைத்தாலும் அர்த்தமற்றதாகவே அமையும்.

நீதி கிடைப்பது கிடைக்காதது ஒருபுறம் இருக்கட்டும். அடக்குமுறைகளைத் தாங்கி அமைதியாக இருந்து அதிஸ்டத்தின் படிதான் நீதி கிடைக்கு மிடத்திற்கே போகலாம் என்றால் அந்த நீதி இருட்டிலேயே கிடக்கட்டுமே.....

- எஸ்.சத்யதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. பண்டைய மனிதன் கண்டுபிடித்த அடிப்படை மூலகங்கள் எவை?
இரும்பு, செம்பு, ஈயம், ஆசனிக்

02. எபோலோ வைரஸ் முதன் முதலில் எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?
ஆபிரிக்க நாடான கொங்கோவில்

03. இதயதுடிப்பை குறைக்கும் இரசாயனப் பொருள் எது?
அசற்றைல் கொலின்

04. மிகவும் கனமான உலோகம் எது?
ஆஸ்மியம்

05. பூகம்பத்தை அளக்க பயன்படும் கருவி எது?
செய்ஸ்மோகிராஃப் (Seismograph)

06. லேசர் யாரால் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?
ஜுச.சார்ல்ஸ்.செ.டவுண்ஸ் 1852 இத்தாலி

07. அஸ்டிக் மாட்டிசம் நோயினால் பாதிக்கப்பட்ட உறுப்பு யாது?
கண்

08. தோற்கலத்தின் வாழ்க்கைக் காலம் எவ்வளவு?
19 - 34 நாட்கள்

09. உலகில் முதன் முதல் தோன்றிய தாவரம் எது?
நீலப்பாசி தாவரம்

10. கூடிய மோப்ப சக்தி உள்ள பறவை எது?
கழுகு

11. மிக வேகமாக செல்லும் பாம்பினம் எது?
பிளாகமாம்பா

12. மூளை இல்லாத மீன் இனம் எது?
நட்சத்திரமீன்

13. பிளிஸ்ர் பிளையிற் எனத் தெரிந்து கொள்ளப்பட்ட நோய் இலங்கையில் பாதிக்கப்பட்ட பயிர் எது?
கோப்பி

14. உலகளாவிய ரீதியில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் நகரம் யாது?
கால்கரி (கனடா)


15. விண்ணில் கண்டறியப்பட்ட முதலாவது கோள் யாது?
சொரஸ்

கு.குகதீசன்


## கணித புதிர்

இதில் எத்தனை முக்கோணிகள் உள்ளன?

**01.**



**02.**




உதவி பக்கம் 77 பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "எழுக தமிழ்"
# தமிழ் இன எழுச்சியின் தேவை!



- ஓர் அரசியல் பார்வை

ஜனவரி 8, 2015இல் "நல்லாட்சி" என்ற பெயருடன் ஆட்சிக்கு வந்த மைத்திரி அரசும் சர்வதேசத்துக்கு தன்னை நல்ல பிள்ளையாக காட்ட முயற்சிக்கிறதே அன்றி, தமிழர்களின் ஏக்கத்தையோ, உணர்வுகளையே மதித்து ஓர் உண்மையான நல்லாட்சியை ஏற்படுத்த விரும்புவதாக தெரியவில்லை.

சீனாவின் எழுச்சியால் பூகோளா அரசியல் போட்டியில் தன்னை காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் அமெரிக்க ஏகாபத்தியம், சீனாவின் குழந்தையாக இருந்த மகிந்த அரசை கவிழ்த்து தன்சார்பான மைத்திரி, ரணில் அரசை நிறுவியதே ஒழிய சர்வதேசமோ, அமெரிக்காவோ தமிழினத்தின் நலனை பற்றி சிந்திக்கவில்லை. தன் சார்பான ஆட்சி இலங்கை தீவில் ஏற்பட்டதனால் இனி சிந்திக்க போவதும் இல்லை.

விடுதலைபுலிகளின் 30 ஆண்டுகால போரினால் சர்வதேச அரங்குவரை கொண்டு செல்லப்பட்ட ஈழத்தமிழர் விவகாரம் இந்த "நல்லாட்சி" என்ற அமெரிக்க இந்திய குழந்தையினூடாக திட்டமிட்டு வலுவிழக்கச் செய்யப்பட்டுவருகிறது.

ஈழத்தில் நடந்துமுடிந்த இன படுகொலைக்கு சர்வதேச விசாரனை என்று சொல்லிவந்த ஐ.நா சபையும், இந்த மைத்திரி அரசின் வருகைக்கு பிறகு "உள்ளக விசாரனை" என குத்துக்கரணம் அடித்ததே இதற்கான தகுந்த சான்றாக கொள்ளமுடியும்.

காணிவிடுவிப்பு, காணாமல் போனோர் தொடர்பான பொறுப்பு கூறல் இனப்பிரச்சினைக்கான தீர்வு, யுத்த குற்றம் தொடர்பான நீதியான விசாரணை என்று கூறி தன்னை இன்னமும் நல்ல பிள்ளையாக காட்டிக்கொண்டிருக்கும் நல்லாட்சி உண்மையிலே செய்வது என்ன? வலிவடக்கில் ஒரு பரப்பு காணி விடுவித்தால் முல்லைத்தீவில் 2 பரப்புகாணியை இராணுவம் அபகரிக்கிறது. பௌத்த சிங்களத்திற்கே முன்னுரிமை எனவும், இலங்கை பௌத்த நாடு எனவும், தமிழர்கள் உரிமை கேட்க தகுதியற்றவர்கள் என்றும் கூறிகொள்ளும் இந்த அரசு இரட்டைவேடம் தரிக்கிறது. சர்வதேசத்திற்கு நல்ல பிள்ளை முகம்காட்டியும், தமிழர்களுக்கு கோரமுகம் காட்டியும் நிற்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த அரசு நோக, நோக தமிழரை அழித்தது என்றால் மைத்திரி அரசு நோவு ·தெரியாமல் விறைப்பூசி ஏற்றி அழிக்கிறது. எல்லாம் அழிந்து எதுவுமே இல்லை என்று வந்ததன் பின்னர்தான் தமிழினம் விறைப்பில் இருந்து விடுபடும். அந்த தருணத்தில் இருப்பவற்றையும் இழந்து நீதிகோர திராணியற்ற இனமாக மட்டுமே அது இருக்கும். ஆயினும் தம்மை தமிழரின் ஏக பிரதிநிதிக்கொள் கூறிக்கொள்ளும் கூட்டமைப்பினரின் போக்கும் தமிழினத்தை அழிவுபாதையிலேயே இட்டு சென்று ஓர் தற்காப்பு அரசயலிலேயே இருக்கிறது. அல்லது மக்களின் நலனுக்கு அப்பாற்பட்டு மேலதிக்கம் ஒன்றின் நிகழ்சி நிரலில் இயக்குவதாகவே இருக்கிறது.

எனவே ஆயுதப் போராட்டத்தின் தோல்விகளிலிருந்தும் அதற்குப் பின்னராக ஏழாண்டு கால தேக்கத்திலிருந்தும் தமிழ் மக்கள் கற்றுக் கொள்ளவில்லை என்றால் இந்த அடக்குமுறை அரசியலிலிருந்து வெளிவர முடியாது.

பாரம்பரிய மிதவாத அணுகு முறைகளுக்கு ஊடாகவோ அல்லது நாடாளுமன்ற அரசியலுக்கு ஊடாகவோ மட்டும் இப் பொறியை உடைத்துக் கொண்டு வர முடியாது. தமிழ் மக்கள் எதையாவது புதிதாக செய்ய வேண்டியிருக்கிறது. அது நவீனமானதுதாகவும் படைப்புத் திறன் மிக்கதாகவும் இருக்க வேண்டியுள்ளது. அதற்கு தமிழ் மக்கள் புதிதாக சிந்திக்க வேண்டியுள்ளது. அதாவது ஒரு புதிய கருத்து வெடிப்பு நிகழ வேண்டியுள்ளது. முற்றிலும் புதிய ஒரு சிந்தனை மறுமலர்ச்சி தேவைப்படுகிறது. அதற்கு வேண்டிய ஆராய்ச்சி மையங்களையும், சிந்தனைக் குழாம்களையும் உருவாக்க வேண்டியுள்ளது.

இவ்வாறான தேவைகளின் மத்தியில் தான் கடந்த ஆண்டு செப்டேம்பெரில் யாழ்ப்பாணத்தில் 'எழுக தமிழ்' எனப்படும் ஒரு பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன விளக்கத்தின் பின்னணியில் வைத்துப் பார்த்தால் இவ்வாறான மக்கள் மயச் செயற்பாடுகள் முக்கியமானவை, அவசியமானவை.

ஒரு வெகுசன மையச் செயற்பாடு எனப்படுவது பிரதானமாக இரண்டு விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். முதலாவது போராடும் மக்களின் போராட்ட நெருப்பை அணைய விடாமற் பேணி மேலும் மிளாசி எரியச் செய்ய வேண்டும். இரண்டாவது எதிர்த்தரப்பையும், வெளித்தரப்புக்களையும் அது திரும்பிப் பார்க்க வைக்க வேண்டும். அவர்களின் நிலையான நலன்களில் அது தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். 'எழுக தமிழ்' இவ்வாறான விளைவுகளை உண்டாக்கியது என்று தான் சொல்ல வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுக தமிழிற்கு எதிராக தென்னிலங்கையில் தோன்றிய எதிர்ப்பு எழுக தமிழின் முக்கியத்துவத்தை அதிகப்படுத்தியுள்ளது. 'எழுக தமிழ்' தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்திருக்கக் கூடிய விளைவுகளை விடவும் அதிகரித்த விளைவை அது தென்னிலங்கையில் ஏற்படுத்தியிருக்கிறது என்று கூடச் சொல்லலாம். இத்தனைக்கும் எழுக தமிழ் ஒரு போர்ப்பிரகடனம் அல்ல. அது யாருக்கும் எதிரானது அல்லவென்று தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் தனது தலைமை உரையின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டிருந்தார். அவர் தனது (தலைமை) உரையில் பாவித்த வார்த்தைகளிலும் சரி கருத்துக்களைத் தெரிவித்த விதத்திலும் சரி ஆகக் கூடிய பட்சம் அந்த உரையை ஒரு நல்லெண்ணச் சமிக்ஞையாகக் காட்டவே முற்பட்டார்.

அது மட்டுமல்ல எழுக தமிழ் பிரகடனமும் இச்சிறிய தீவைப் பிரிக்கச் சொல்லிக் கேட்கவில்லை. அது சமஷ்டியைத் தான் கேட்கிறது. அது கூட நாட்டை ஐக்கியப்படுத்துவதற்கான ஒரு சமஷ்டிதான். அப்பிரகடனத்தை வாசித்தவர் ஒரு மருத்துவ நிபுணர். அவர் ஒரு முழுநேர அரசியல் செயற்பாட்டாளர் அல்ல. அவர் ஓர் அரச ஊழியர். ஒரு மருத்துவ நிபுணர் இவ்வாறாக ஒரு



பிரகடனத்தை வாசிப்பது என்பது ஈழத்தமிழ் அரசியற் பரப்பில் மிக அரிதான ஒரு நிகழ்வுதான். மருத்துவர்கள் அரசியல்வாதிகளாக மாறியதுண்டு. ஆனால் மருத்துவர்கள் சமூக அரசியற் செயற்பாட்டாளர்களாக இவ்வாறு மேலெழுவது என்பது ஈழத்தமிழ் அரசியற் பரப்பில் மிகவும் அரிதானது. மருத்துவ நிபுணர்கள் தொடர்பில் சாதாரன ஈழத்தமிழ் மனம் உருவாக்கி வைத்திருக்கும் படிமங்களுக்கு அது முரணானது. 2009 மேற்குப் பின்னரான ஈழத்தமிழ் அரசியற் பரப்பில் உருவாகி வரும் புதிய தோற்றப்பாடுகளில் இதுவும் ஒன்று.

ஓர் இருதய மருத்துவ நிபுணரால் வாசிக்கப்பட்ட எழுக தமிழ்ப் பிரகடனமானது சிங்களமயமாக்கலுக்கும், பௌத்த மயமாக்கலுக்கும் எதிராகவே காணப்படுகிறது. இச்சிறிய தீவில் ஒரு இனமும் ஒரு மதமும் ஏனைய இனங்கள், மதங்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் ஒரு போக்கைத்தான் அது எதிர்த்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போக்கானது பல்லினத் தன்மைக்கு எதிரானது. எனவே எழுக தமிழ் பிரகடனத்தில் எதிர்க்கப்பட்டது ஒற்றைப் படையாக்கம் அல்லது ஓரினத் தன்மையாக்கம் போன்ற போக்குகள் தான். அப்பிரகடனம் முன்வைக்கும் தீர்வெனப்படுவது பல்லினச் சூழல் ஒன்றையே கேட்கின்றது. பல்லினச் சூழல், பல மதச் சூழல் எனப்படுவது அடிப்படையில் ஒரு ஜனநாயகச் சூழல் தான். உலகின் வளர்ச்சியடைந்த எல்லா ஜனநாயகங்களினதும் பொதுப் பண்பு அதுவே. எனவே முடிவாகக் கூறின் எழுக தமிழ் பிரகடனம் எனப்படுவது உயர்ந்த பட்ச ஜனநாயகச் சூழல் ஒன்றையே கோரி நிற்கின்றது.

இப்படிப்பட்ட ஒரு பிரகடனத்தையும், பேரணியையும் தென்னிலங்கையில் இருக்கும் ஒரு பகுதியினர் ஏன் எதிர்க்கிறார்கள்? ஒன்றில் அவர்கள் அந்தப் பிரகடனத்தையும், முதலமைச்சரின் உரையையும் முழுமையாக வாசிக்கவில்லை. அல்லது இப்படியொரு எழுச்சியைக் கண்டு அவர்கள் அஞ்சுகிறார்கள் என்று பொருள். எழுக தமிழோ, பொங்கு தமிழோ எந்தத் தமிழாக இருந்தாலும் தமிழ் மக்கள் மத்தியிலிருந்து ஒரு சிறு நிமிர்வு ஏற்பட்டாலும் அதை அவர்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. தமிழ் மக்கள் தோல்வியுற்ற ஒரு தரப்பாகவே தொடர்ந்தும் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள். இதை ஒரு சில பிக்குக்கள் மட்டும் தான் செய்கிறார்கள் என்று கருதத் தேவையில்லை. தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட பொதுபலசேனா மட்டும் தான் எழுக தமிழை எதிர்க்கிறது என்பதல்ல. அரசாங்கத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அதற்கு எதிர்ப்புக் காணப்படுகின்றது. அது மட்டுமல்ல தாராண்மை வாத ஜனநாயக வாதிகளாகத் தோன்றும் படித்த நடுத்தர வர்க்கத்தினர் மத்தியிலும் கூட அதற்கு எதிர்ப்பு தோன்றியுள்ளது. அதை வெறுமனே பொதுபல சேனா காட்டும் எதிர்ப்பாக சிறுப்பித்துக் காட்ட முடியாது. மாறாக சிங்கள பொது உளவியலின் தவிர்க்கப்படவியலாத ஒரு பகுதி அது.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி கொழும்பில் நடந்த பாதுகாப்புத்துறை மாநாட்டில் உரையாற்றிய அரசத்தலைவர் சிறிசேனா இலங்கைத் தீவிற்கு இப்பொழுது எதிரிகள் இல்லை என்று கூறியிருக்கிறார். ஆனால் எழுக தமிழிற்கு எதிராக உருவாகி இப்பொழுது வரை நிலவி வரும் உணர்வலைகள் யாருக்கு எதிரானவை

முன்னைய காலங்களில் கடும்போக்குடைய சிங்கள இயக்கங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னங்களையும், கொடிகளையும் முச்சக்கர வண்டிகளிலும், வறிய அடிமட்ட மக்கள் மத்தியிலும்தான் அதிகம் காண முடியும் என்றும் ஆனால் இப்பொழுது 'சிங்க லே' தேசிய முன்னணியின் சின்னங்களை ஹைபிறிற் வாகனங்களின் பின்பக்கக் கண்ணாடிகளில் ஒட்டப்பட்டிருப்பதைக் காண முடியும் என்று ஒரு தொழிற்சங்க வாதி அண்மையில் சுட்டிக்காட்டினார். அதாவது சிங்கள பௌத்த கடும்போக்குவாதம் எனப்படுவது படித்த நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் செல்வாக்கோடிருப்பதை இது காட்டுகிறது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதிகம் போவானேன். கடந்த மாதம் ஜெனீவாவில் ஐ.நா மன்றில் உரையாற்றிய பொழுது அரசுத் தலைவர் சிறிசேனா என்ன சொன்னார்? ஸ்ரீலங்கா ஒரு சிங்கள, பௌத்த நாடு என்றுதானே சொன்னார்? அவர் பதவிக்கு வந்து 22 மாதங்கள் ஆகின்றன. இக்காலப் பகுதிக்குள் அரசியலமைப்பில் பௌத்தத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் முதன்மையை நீக்கப்போவதாக எங்கையாவது எப்பொழுதாவது அவர் கூறியிருக்கிறாரா? அல்லது ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறாரா? இதுதான் மெய்நிலை. இலங்கைத் தீவின் சிங்கள பௌத்த மேலாண்மை வாதம் எனப்படுவது நன்கு நிறுவனமயப்பட்டுள்ளது. சிறிசேனா அதன் ஒரு முனையில் காணப்படுகின்றார். பொதுபலசேனா அதன் இன்னுமொரு முனையில் காணப்படுகிறது. அது மிருக முகத்துடன் காணப்படுகின்றது. ஆனால் ரணில், மைத்திரி அரசாங்கமோ மனித முகமூடியுடன் காணப்படுகின்றது.

ஆனால் அவர்கள் கூறுகிறார்கள். விக்னேஸ்வரன் தமிழ் இனவாதத்திற்கு தலைமை தாங்குவதால் அது தென்னிலங்கையில் சிங்கள இனவாதத்தைத் தூண்டி வருகிறது என்று. விக்னேஸ்வரன், அவ்வாறு இனவாதத்தைத் தூண்டவில்லை என்று சம்பந்தர் நாடாளுமன்றத்தில் உறுதியாக கூறிய பின்னரும் அவர்கள் விக்னேஸ்வரனை தொடர்ந்து தாக்கி வருகிறார்கள். இக் கட்டுரையில் முன்பு குறிப்பிடப்பட்ட பாதுகாப்புத்துறைக் கருத்தரங்கில் உரை நிகழ்த்தும் பொழுது சிறிசேன மற்றொரு விடயத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார். 'தமிழ் மக்கள் மத்தியிலிருந்த கடும் போக்காளர்களான புலிகள் இயக்கத்தையும் தோற்கடித்து விட்டோம் சிங்கள மக்கள் மத்தியில் உள்ள கடும் போக்குடைய ராஜபக்'வையும் தோற்கடித்து விட்டோம்' என்று தொனிப்பட. இதன் பொருள் என்ன


அதாவது இப்பொழுது கடும் போக்கு வாதிகள் இரு தரப்பிலும் தோற்கடிக்கப்பட்டு விட்டார்கள். எனவே மிதப் போக்குடையவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களுக்கிடையில் ஏதோ ஒரு இணக்கத்திற்கு வந்து ஒரு தீர்வைக் கண்டு பிடிக்கலாம் என்று அவர்கள் வெளியுலகத்திற்கு காட்ட முனைகிறார்கள். இவ்வாறு இரு தரப்பிலும் உள்ள மிதப்போக்குடைய சக்திகள் தங்களுக்கிடையே ஓர் இணக்கத்தைக் கட்டியெழுப்பி வரும் ஒரு பின்னணியில் தமிழ் மக்கள் பேரவை மறுபடியும் நிலைமைகளைக் குழப்புகிறது என்ற ஒரு குற்றச் சாட்டை சிங்களமக்கள் மத்தியிலும் காண முடிகிறது. தமிழ் மக்கள் மத்தியிலும் காண முடிகிறது.

ஆனால் தமிழ் மக்கள் பேரவையோ அல்லது எழுக தமிழோ முன் வைக்கும் கோரிக்கைகள் இச் சிறிய தீவின் பல்லினச் சூழலையும், பல்மதச் சூழலையும் கட்டியெழுப்பும் நோக்கிலானவைதான். அவற்றைத் தீவிரவாதம் என்று சொன்னால் எது மித வாதம்? இத்தனைக்கும் விக்னேஸ்வரன் தமிழ் அரசியலின் ஒரு புதிய அணிக்கு தலைமை தாங்கப் போவதாக இன்றுவரையிலும் வெளிக்காட்டவில்லை என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும். தமிழரசுக் கட்சிக்கு எதிரான அழுத்தக்குழுவொன்றின் ஜனவசியமிக்க ஒரு குறியீடாகவே அவர் தோன்றுகிறார்.



இவ்வாறு எதிர்த்தரப்புக்களை அச்சுறுத்தும் அளவிற்கு இன்னமும் முழு அளவு நிறுவனமயப்பட்டிராத அரசியற் செயற்பாடுகளைக் கண்டு தென்னிலங்கையில் இருப்பவர்கள் ஏன் அச்சமடைய வேண்டும்? ஒரு எழுக தமிழிற்கே இவ்வளவு ஆர்ப்பாட்டமாக எதிர்ப்பு காட்டப்படும் என்றால் அது போன்ற தொடர்ச்சியான மக்கள் மையச் செயற்பாடுகளுக்கு எதிர்வினை எப்படியிருக்கும்? எழுக தமிழிற்கு தென்னிலங்கையிலும், தமிழ் மக்கள் மத்தியில் ஒரு பகுதியினரிடமிருந்தும் காட்டப்படும் எதிர்ப்புக்களிலிருந்து தமிழ் மக்கள் பேரவையும், அதன் ஆதரவாளர்களும் ஒரு புதிய உத்வேகத்தைப் பெறவேண்டியிருக்கிறது. எழுக தமிழிற்கு அடுத்தது என்ன? என்று அவர்கள் சிந்திக்கவும், திட்டமிடவும் வேண்டி இருக்கிறது.

இலங்கைத் தீவிற்கு இப்பொழுது எதிரிகளே இல்லையென்று கூறிக் கொண்டு இருதரப்பு மிதவாதிகளும் ஒரு இணக்கத்திற்கு வந்து ஒரு தீர்வை அதாவது ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய யாப்பை தமிழ் மக்களின் முன் வைக்கவிருக்கும் ஒரு பின்னணியில் எழுக தமிழிற்குப் பின்னரான அரசியற் செயற்பாடுகளுக்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக யாப்புருவாக்கச் சூழலில் யாப்பைக் குறித்து தமிழ் மக்களை விழிப்பூட்ட வேண்டிய ஒரு பொறுப்பு தமிழ் மக்கள் பேரவைக்கும், தமிழ் கட்சிகளுக்கும், புத்திஜீவிகளுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும். ஊடகவியலாளர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் உண்டு. அதிலும் குறிப்பாக தமிழ் மக்கள் பேரவையானது ஏற்கெனவே ஒரு முன்மொழிவை வைத்திருக்கிறது. அம் முன்மொழிவை இலகு தமிழில் எழுதி மக்கள் மத்தியில் கொண்டு போக வேண்டும். லட்சக் கணக்கில் அதன் பிரதிகளை தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக்க வேண்டும். தான் முன் வைத்த ஒரு முன்யோசனையை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு தமிழ் மக்கள் பேரவைக்கு உண்டு என்பதை இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

யாப்புருவாக்கத்தைக் குறித்தும் தமிழ் மக்களின் கோரிக்கைகளைக் குறித்தும் தமிழ் மக்கள் மத்தியில் தெளிவில்லாத ஒரு நிலையே காணப்படுகின்றது. எனவே தமிழ் மக்கள் பேரவையும் தமிழ் கட்சிகளும் இது தொடர்பில் உடனடியாக அடுத்த கட்டத்தைக் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. எழுக தமிழிற்கு எதிராக தென்னிலங்கையில் ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பானது தமிழ் மக்களை எந்தளவிற்கு ஐக்கியப்படுத்தியுள்ளது? விக்னேஸ்வரனை எதிர்ப்பதில் சிங்கள கட்சிகள், புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் மத்தியில் எவ்வறானதோர் ஐக்கியம் ஏற்பட்டிருக்கிறது என்பதை தமிழ் மக்கள் உற்றுக் கவனிக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முதலாவது பொங்கு தமிழ் ஒழுங்கு செய்யப்பட்ட பொழுது அதில் பங்கேற்ற யாழ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஒரு புத்திஜீவி பின்வருமாறு சொன்னார். 'முதலில் அதில் பங்கேற்பதில்லை என்றுதான் தீர்மானித்திருந்தேன். ஆனால் பொங்கு தமிழிற்கு முதல் நாள் பல்கலைக் கழகச் சூழலில் ராங்கிகளும், கவச வாகனங்களும் செறிவாக நடமாடத் தொடங்கின. பார்க்கும் இடங்களில் எல்லாம் படையினர் ஏதோ ஒன்றை தடுக்கப் போவது போல தயார் நிலையில் காணப்பட்டார்கள். இவர்கள் ஏன் பொங்கு தமிழை தடுக்க வேண்டும்?இவர்கள் யார் அதைத் தடுப்பதற்கு? எனவே நான் எனது எதிர்ப்பை பதிவு செய்வது என்று தீர்மானித்தேன். அதனால் பொங்கு தமிழில் பங்கெடுத்தேன்' என்று. ஆயினும் முன்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவசவாகனங்களும், ராங்கிகளுமாக இராணுவம் தடுத்த ஓர் மக்கள் எழுச்சியை, இன்று 'கிழக்கிலும் வடக்கிலும் தமிழ்மக்களின் பிரதிநிதிகளே எதிரிகின்றன என்பது தான் வேதனைக்குரியதும் ஆரயப்படவேண்டியதும் எழுக தமிழிற்கு எதிராக தென்னிலங்கையில் தோன்றியிருக்கும் உணர்வலைகளை தொகுத்துப் பார்க்கும் ஒரு சராசரித் தமிழ் மனம் எப்படிப்பட்ட முடிவை எடுக்கும்?


தொகுப்பு:

N.சுகந்தன்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சி.சுமணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளும் யாழ்ப்பாணமும்

தற்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் முக்கிய பிரச்சினையாக போதைப்பொருள் விளங்குகின்றது. இவ் வகையில் இன்று மக்களை சீரழிவிற்கு உட்படுத்தும் ஓர் பொருளாக போதைப்பொருள் விளங்குகின்றது.

போதைப்பொருள் என்றால் என்பது தொடர்பாக பல்வேறு அறிஞர்கள் வரைவிலக்கணங்களை முன்வைத்துள்ளனர். அவற்றுள்,Oodam என்பவர் "போதைப்பொருள் என்பது இரசாயன பதார்த்தங்களை உள்ளடக்கிய கலவை" என்றார் "ஒருவரது மனநிலை, உணர்வாற்றல், சுயநினைவு ஆகியவற்றில் மாற்றத்தை ஏற்படுத்தவென முறை தவறி பாவிக்கப்படும் இரசாயன பதார்த்தங்களே போதைப்பொருள் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இன்று உலகளாவிய ரீதியில் பல்வேறு வகையான போதைப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன அவையாவன, கஞ்சா, அபின்வகை, மாவா, ஹெரோயின், கொக்கேயின் மெஸ்கலீன், சிகரெட், புகையிலை மதுபான வகைகள் என்பனவாகும்.

இத்தகைய பொருட்களானது இன்று யாழ்ப்பாண மக்களிடையே அதிகரித்த பாவனையில் உள்ளதாக ஆய்வுகள் மூலம் தெரிகின்றது. மேலும் இப் போதைப் பொருட்களை பயன்படுத்துவோர் தொகையும் இன்றைய காலகட்டத்தில் அதிகமாக காணப்படுகின்றது. வெளிநாடுகளில் இருந்து கடல்வழியாக இவ்வாறான போதைப்பொருட்கள் கடத்தப்படுகின்றன. அதன் முக்கிய கேந்திர நிலையமாக யாழ்ப்பாண கரையோறப் பகுதிகள் விளங்குகின்றன. இவ்வாறு கடத்தப்படும் பொருட்கள் சனநெருக்கடி நடமாட்டம் குறைந்த இடங்களில் பதுக்கி கைக்கப்பட்டு பின்னர் சமூகத்திற்கு விற்கப்படுகின்றன.

இன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தினை பொறுத்தவரையில் அதிகளவில் பாடசாலை மாணவர்களை வைத்தே இப்போதைப்பொருள் தீயாக பரவி வருவதனை எமது கண்களுடாக காணக்கூடியதாக உள்ளது. இன்றை இளைஞர்கள் தமது வளரிளம் பருவத்திலே ஏற்படும் உடல், உள மாற்றங்கள் அவர்களை அத்தகைய நிலைக்கு இட்டுச்செல்வதற்கு இலகுவாக வழிவகுக்கின்றது. மேலும் இன்று இளைஞர்கள் மிக வேகமாக அடிமையாக ஓர் காரணியாக தொலைக்காட்சி நாடகங்கள், சினிமா படங்கள் என்பன முக்கியமாக அமைகின்றது. மாணவர்கள் அதை பார்த்து விட்டு தமது வாழ்விலும் அதனை பிரயோகிக்கின்றனர். இவ்வாறு தான் இன்றைய சமூகத்தில் போதைப்பொருள் ஆனது மிக வேகமாக பரவிவருகின்றது. அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் போதைப்பொருள் பாவனை அதிகரித்தளவில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று போதைப்பொருள் பாவனை இலங்கையில் யாழ்ப்பாண மாவட்டமே 1வது இடத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. இதற்கு காரணம் அதிகரித்த பணப்புழக்கமும், திரைப்படங்களில் வரும் காட்சிகள், வெளிநாட்டு தொடர்புகள் அதிகரித்தல் போன்றனவாகும். இவ்வாறு இன்று இளைஞர்கள் மத்தியில் பணப்புழக்கம் அதிகரித்தமையே போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கி இருப்பதை அறிய முடிகின்றது. மேலும் இன்றைய சமூக சீரழிவுகள், வன்முறைகள், குற்றச் செயல்கள் என்பவற்றிற்கும் இப்போதைப்பொருள் பாவனையே காணப்படுகிறது.

போதைப்பொருள் பாவனையால் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அவை உடலையும் உள்ளத்தினையும் பாதிப்பதாக அமைகின்றது. உடல் ரீதியான பாதிப்புக்கள் எனும் நரம்பு மண்டலபாதிப்பு, மாரடைப்பு, இதயநோய்கள், பாலியல் ரீதியான பிரச்சினைகள், கருத்தரிக்கும் ஆற்றல் குறைவு, இரத்த குழாய் சுருக்கம், குரல் வளை வருத்தம், கண்பார்வை மங்குதல் புற்றுநோய் (வாய், மூக்கு, நுரையீரல், சிறுநீர்ப்பை, கர்ப்பப்பை கழுத்து, இரத்தம்) பசியின்மை, தசையிறுக்கம், ஈரல் பாதிப்பு, தோல் சம்பந்தமான நோய்கள் சுவாசம் சம்பந்தமான நோய்கள் போன்ற பல்வேறு பாதிப்புக்கள் உடல் ரீதியான விளைவுகளை ஏற்படுத்தும்.

உளரீதியாகவும் பாதிப்புக்களை ஏற்படுத்த கூடிய பதட்டம் பதகளிப்பு, சந்தேகம், விரக்தி, பயம், கோபம், தனிமை உணர்வு, அமைதியின்மை குற்ற உணர்வு தடுமாற்றம், தாழ்வுமனப்பான்மை, எரிச்சல் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்துவர்.

போதைப்பொருள் பாவனையால் பல்வேறு சமூகபாதிப்புகள் ஏற்படுகின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் பல்வேறு சமூக பாதிப்புக்கள் ஏற்பட காரணம் போதைப்பொருள் ஆகும். இன்று யாழ்ப்பாண சமூகத்தில் ஏற்படும் பாதிப்புக்களான வாள்வெட்டு, கோஷ்டி மோதல்கள், பொய் கொலை, களவு, பாலியல் துஷ்பிரயோகம், வன்புணர்வு நடத்தைகள் என்பவற்றிற்கு போதைப்பொருள் பாவனையே காரணமாகும்.

இன்றைய காலத்தில் யாழ்ப்பாண கலாச்சார வரலாற்றில் என்றுமில்லாதவாறு வாள்வெட்டு, கொலை, கொள்கை, துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரங்கள், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் என்பன இடம்பெற்றுக்கொண்ட தான் இருக்கின்றது. இவை அனைத்திற்கும் அடிப்படை காரணமாக விளங்குவது போதைப் பொருள் பாவனையே ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**போதையற்ற சமூகத்திலிருந்து விடுபட சிலவழிகள்...........**

- போதையில் இருந்து விடுபட முடியும் என நம்புங்கள்
- மனதை ஒருமுகப்படுத்தி எமது உடலிற்கு தீங்கானது என்ற நம்பிக்கையை மனதில் வளர்த்தல்
- போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் பாதிப்புக்கள் பற்றி சிந்தித்தல்
- எதிர்காலம் பற்றி ஒரு நிமிடம் சிந்தித்து பார்த்தல்
- எமது சமூக கலாச்சாரத்தை வளர்க்க முற்பட ஒவ்வொருவரும் எண்ணுதல்

போதைப்பொருள் பாவனைக்கு உட்பட்டவர்களுக்கு அதிலிருந்து விடுபடுவதற்கு வழங்கும் சிகிச்சைகளாக பின்வருவனவற்றை நோக்கலாம்.


நச்சு நீக்கல் சிகிச்சை இன்றைய யாழ் சமூகத்தில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அதாவது போதைப்பொருளிலிருந்து விடுபட அதனை கட்டப்படுத்த கூடிய மாத்திரை மூலமோ, ஊசி மருந்து மூலமோ உடலில் செலுத்தி வெறுப்புணர்வை பெறல். இச் சிகிச்சையானது யாழ்ப்பாணத்தில் சாவகச்சேரியில் குருந்தகம் எனும் இடத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும் உளத்தினை அமைதிப்படுத்தும் செயல்களான யோகப்பயிற்சி, தியானம், ஆன்மிக இறை நிகழ்வுகளில் அதிகமாக ஈடுபடுவதன் மூலமும் விடுபட கூடியதாக இருக்கும்.

சிலர் மன உளைச்சல், விரக்தி, கவலை என்பன காரணமாக போதைப்பொருளிற்கு அடிமையாகின்ற நிலை காணப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு ஆற்றுப்படுத்தல் (Counselling) வழங்குவதன் மூலம் அவர்கள் இதிலிருந்து விடுபட வழிவகுக்கும்.

எனவே இன்றைய இளம் சமூகம் இத்தகைய போதைப்பொருளினை பாவிப்பதால் அவர்களின் எதிர்காலம் பற்றி சிந்தித்து அதிலிருந்து விடுபட்டு ஆரோக்கியமான போதையற்ற ஓர் சமூகத்தை உருவாக்க அனைவரும் ஒத்துழைப்போமாக.

ரா.தனுசா






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள்

சின்னஞ்சிறு பாலர்களாகிய நாம் பல்வேறு ஆற்றல்கள் திறமைகளோடு இந்தப் பூமியிலே அவதரிக்கின்றோம். இன்றைய சிறுவர்கள் தான் நாளைய தலைவர்கள் என்பார்கள். அந்தத் தலைவர்களை உருவாக்க வேண்டியவர்கள் பெரியவர்கள் தான். சிறுவர்களாகிய எமது உலகமோ மிகவும் மிகவும் அழகியது. அந்த அழகிய உலகத்தை அசிங்கப்படுத்துபவர்கள் பெரியவர்கள் தான். வித்தியாவின் முடிவுகள் கூட இன்றும் தொடர்கதையாக இருப்பதற்கு காரணம் யாது? சிந்திக்க வேண்டும் நாம் அல்ல மாறாகப் பெரியவர்களே தான் 1929 என்ற எண் எம் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டாலும் அதனோடு தொடர்பு கொள்ள பலமணி நேரம் செல்கின்றதே "ஓடி விளையாடு பாப்பா" என்ற பாரதியின் பாடலை பாடினால் மட்டும் போதுமா? எம்மை ஓடி விளையாட விடாது எம் உரிமைகளையெல்லாம் பறித்தெடுப்பவர்கள் பெரியவர்கள் தான். சிறியவர்களாகிய நாம் எதிர்கால தலைவர்களாக மாறவேண்டுமெனில் பின்வருவனவற்றை கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோருக்கும் ஆசிரியருக்கும் கீழ்ப்படிந்து அவர்களது வழிநடத்தல் மற்றும் பாதுகாப்பைப் பெற்றுக்கொள்வோம். கல்விக்கு முதலிடத்தைக் கொடுத்து கல்வி கற்கும் உரிமையை பெற்றுக்கொள்வோம். மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பளித்து எங்களது உரிமைகளை பெற்றுக்கொள்வோம். மற்றவர்களின் கருத்திற்கு மதிப்பளித்து எங்களது கருத்து தெரிவிக்கும் உரிமையை அனுபவிப்போம். நாம் பாகுபாட்டிற்கு உட்படாமல் இருப்பதோடு பிறரையும் எமக்கு சமமானவர்கள் என நினைப்பதன் மூலம் பிறரையும் பாகுபாட்டிற்கு உட்படாமல் பாதுகாப்போம்.

அ.அஸ்விதா
தரம் 05
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை

# சிறுவர் உலகம்

சின்னஞ் சிறு பாலகர் நாம்
சேர்ந்தே ஆடிப் பாடுவோம்
வண்ண வண்ண சிட்டுக்களாய்
வட்டமிட்டேய் ஓடுவோம்

கள்ளம் கபடம் இல்லாது
கல கலப்பாய் வாழுவோம்
சண்டை சச்சரவுஇன்றி
சரித்திரம் படைத்திடுவோம்

பார் போற்றும் பலவான்களாய்
பாடிப் படித்து பழகிடுவோம்
நாளைய உலகை உருவாக்கும் தலைவர்களாய்
தலை நிமிர்தே வாழ்ந்திடுவோம்

அ.கயிற்றோ
தரம் 01
யா/மாரிசன்கூடல் றோ.க.த.க.பாடசாலை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய சிறுவர் உலகம்

பி.ஹபீஷன்
யா/மாரீசன்கூடல் றோ.க.த.க பாடசாலை

குழந்தை எனும் பருவத்தை கடந்து
குதூகலித்துப் பள்ளி சென்று
அன்னையின் அன்பு அதனை
அப்படியே பள்ளியில் கண்டோம்.
சின்னஞ்சிறு பாலகர் நாம்
சின்னச் சின்ன பிழைகள் செய்து
ஒன்று பட்டு ஒற்றுமையாய் எங்கும்
ஓடியாடித் திரிந்து இருந்தோம்
மகிழ்வுடன் இருந்த எம் வாழ்வு
மதி மயக்கம் செய்வது என்ன?
சிறுவர்களாய்ச் சிறகடித்துத் திரியும் எங்கள்
சிறகுகளை உடைக்க முயல்வது ஏன்?
சுதந்திரமாய் சுற்றி வந்தோம்
சுற்றும் முற்றும் அலைந்தோடி
சுமையின்றி பறந்து சென்றோம் - எமக்கே
சுமை தனை ஆள வந்தோம்,
பூமியாள வந்த எம்மை
பூமிக்குள் புதைப்பது ஏன்?
இன்னைய சிறுவர்கள்
நாளைய தலைவர்கள்



# பெண்ணின் பெருமை

பெண்ணே கொஞ்சம் நில் நான் சொல்வதைக்கேள்
உன் மனமோ திடமானது ஏன் வீணாக அலைகிறாய்
பெண்களே நம் தேசத்தின் கண்கள்
அவர்கள் நமது தேசத்தின் சொத்துக்கள்
அவர்களைப் பேணிகாப்பது
நம்தேசத்தின் கடமையாகும்!
பெண்மையில்லையேல் மானிடமில்லை
மானிடமில்லையேல் நாடில்லை
நாடில்லையேல் இவ்வுலகமில்லை
அது தெரியாமல் ஏன் அலைகிறாய்
வண்ணத் தேசத்திற்கு வரம்புப் பெண்ணே
உண்மைத் தெளிவுரைப்பவள் பெண்ணே
கண்மணியே கலை மானே
பெண்ணின் அர்த்தத்தை புரிந்துகொள்
தேசம் பெற்றெடுத்த பெண்மையே
எல்லோராலும் விரும்பப்படுபவளே
பெண்ணின் பெருமையை உணர்ந்திடுவாய்
பெருமிதமாய் வாழ்ந்திடுவாய்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A History of the Months

The original Raman year had 10 named months Martius "March", Aprilis "April", Maius May", Junius "June", Quintilis "July", Sextilis "Augest", September, "September" October "October", November "November', December "Decem ber", and probably two unnamed months in the dead of winter when not much happened in agriculture. The year began with Martius "March" Numa pompilius, the Second king of Rome circa 700 BC, added the two months Januarius "January" and Februarius "February" He also moved begining of the year From Marius to Januarius and Change the Number of days in several months to be odd, a lucky number After Februarius there was occasionally an additional month on intercalar is "Intercalendar" This is the origin of the Leap - Year day being in February In 46 BC, Julius (aesar reformed the Roman Calendar Chence the Julian calendar) Charging the number of days in many months and removing Intercalar is

**By : K.Thushani**
**Grade - 7**

# Golden words

01. I have nothing new to teach the world Truth and non - violence are as old as the hills - M.K Gandhi

02. No Man loves labour for itself Samuel Johnson

03. Let Your Life Lightly Dance on the edges of time like dew on the tip of the leaf - Ravindranath Tagore

04. We often read with as much talent as we write - Ralph Waldo Emerson

05. The roots of education are bitter, but the fruit is sweet - Ariststle

06. Opporfunity is missed by most people because it is dressed in overalls and looks like work - Thomas A.dison

**K.kobisha**
**Grade - 06**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A farm crossword puzzle

**=Across**


01. Jield of a planeted field
04. A kind of tree like oak
05. This machine digs up fields
08. A place where animals and crops are raised
09. Opposite of stand
10. Sock to carry feed in
12. An animal to ride on
14. A long - necked which honks



**Down**

01. A baby horse
02. A baby dogs
03. An animal that give milk
06. A baby Sheep
07. Animals That Chase Mice
08. A kind of evergreen tree
09. Word that rhymes with go
11. Animal with horns
12. Another word for pig
13. What we see with

**Answer- 75page**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jokes

| | | | |
|---|---|---|---|
| 01. | ஆசிரியர் | :- | நீ எதுவரைக்கும் படிக்க ஆசைப்படுகிறாய் |
| | மாணவன் | :- | ஸ்கூல் பெல் அடிக்கிற வரைக்கும் சார் |
| 02. | ஆசிரியர் | :- | "கும்பகர்ணன் மாதக்கணக்கில் தூங்கினான்" இது என்ன காலம் |
| | மாணவன் | :- | நுளம்பே இல்லாத காலம் சார் |
| 03. | ஆசிரியர் | :- | பறக்கும் தட்டை எங்கே பார்க்கலாம்? |
| | மாணவன் | :- | எங்க அப்பா அம்மா சண்டை போடும் போது பாக்கலாம் |
| 04. | ஆசிரியர் | :- | உலகிற்கு முக்கியம் சூரியனா? சந்திரனா? |
| | மாணவன் | :- | சந்திரன் சார்! |
| | ஆசிரியர் | :- | எப்படி |
| | மாணவன் | :- | பகலில் வெளிச்சம் இருக்கும் போது தான் சூரியன் ஒளி தருது ஆனால் சந்திரன் இரவில் வெளிச்சம் இல்லாத போது ஒளி தருது |
| 05. | ஆசிரியர் | :- | டேய் 1000 கிலோகிராம் 1 டன் அப்ப 3000 கிலோகிராம் எத்தனை டன் |
| | மாணவன் | :- | டன் டன் டன் |
| 06. | மனைவி | :- | எதுக்குங்க ஸ்பூனை பாதியா உடைச்சீங்க....? |
| | கணவன் | :- | டாக்டர் தான் அரை ஸ்பூன் மருந்து சாப்பிடச் சொன்னாரு |
| 07. | மனைவி | :- | ஏங்க இன்றைக்கு சாம்பார் வைக்கட்டுமா, இல்ல இரசம் வைக்கட்டுமா? |
| | கணவன் | :- | முதல்ல ஏதாவது செய்மா...... அப்புறம் அதுக்கு "பேரு" வைக்கலாம். |
| 08. | மனைவி | :- | என்ன பொண்ணு பார்க்க வந்த அன்றைக்கு என்ன நினைச்சீங்க? |
| | கணவன் | :- | வம்பை நாமளே விலை கொடுத்து வாங்குறோமேன்று நினைச்சன் |
| 09. | கணவன் | :- | குழந்தை ஏன் அழுறான் டாக்டர் ஊசி போட்டாரா? |
| | மனைவி | :- | இல்ல, அவன் சாப்பிட்டுக்கிட்டிருந்த பிஸ்கட்ட டாக்டர் பறிச்சு சாப்பிட்டாரு |
| 10. | மனைவி | :- | "ஒரு நாள் வேலைக்காரி இல்லைன்னா கூட வீடே சரியில்ல பாருங்க" |
| | கணவன் | :- | இது பறவாயில்லை, "எனக்கு மனசே சரியில்லாம போயிடுது பாரு" |

11. இரத்த வங்கிக்குப் போனால் இரத்தம் வாங்கலாம்... ஆனா.... இலங்கை வங்கிக்குப் போனால் இலங்கை வாங்க முடியுமா?

12. ஆடினா தான் மயிலு
பாடினாதான் குயிலு
ஓடினா தான் ரெயிலு
எஸ்.எம்.எஸ் அனுப்பினா தான் மொபைலு

13. அப்பா அடிச்சா வலிக்கும்
அம்மா அடிச்சா வலிக்கும்
ஆனா... சைட் அடிச்சா வலிக்காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. மன்னா! நீங்க அப்பா ஆகிவிட்டீர்கள்! பலே! பலே! எந்த பெண் அம்மா அகியிருக்காள்?
15. சொந்தஊர் எது?.... அந்த அளவுக்கு வசதி இல்லைங்க...... சொந்த வீடுதான் இருக்கு
16. அந்த பேஷண்ட் ரஜினி ரசிகன்னு நினைக்கிறன் எப்படி சொல்றே?
நான்ஊசி போட்டதும் என்வலி தனி வலின்னு சொல்றாரு
17. டாக்டர் நூறு வயசு வரைக்கும் வாழுறத்துக்கு என்ன பண்ணனும்...?
இத நீங்க என்கிட்ட வர்றதுக்கு முன்னாடி யோசிச்சு இருக்கணும்....!
18. ராத்திரியில சூரியன் எங்கே போகுது?
எங்கேயும் போகல இருட்டா இருக்கிறதால நம்மால அத பாக்க முடியல
19. காதலிக்கிறவனுக்கு, காதலி தான் அழகு
காதலிக்காதவனுக்கு அழகானவை எல்லாம் காதலி
20. இன்று மழை வரும்னு செய்தில சொன்னாங்க....
நீங்க கேட்டீங்களா?.... நான் கேக்கல. அவங்களாதான் சொன்னாங்க
21. "ஏன் இந்தக் கோழியைப் பிடிக்க இப்படிப் பயப்பிடுறீங்க...?" "அது நெருப்புக் கோழியாச்சே...."
22. "பில்கேட்சோட பையான இருந்தாலும், கழித்தல் கணக்கு போடும் போது, கடன் வாங்கித்தான் அகணும்
காதல் என்பது கரண்ட் போன நேரத்துல வர கொசு மாதிரி....
தூங்கவும் முடியாது.....
துரத்தவும் முடியாது.......
23. "அடிமைக்கும், கொத்தடிமைக்கும் என்ன வித்தியாசம்?"
"ஒரு பெண்ணைக் காதலிக்கும் போது நீங்க அடிமை.... அதுவே அந்த பெண்ணையே கல்யாணம் பண்ணிட்டீங்கன்னா நீங்க கொத்தடிமை..."
24. "பொதுக்கூட்ட மேடையில் ஏன் தீப்படிச்சது"
"தலைவர் அனல் பறக்கப் பேசினாராம்"
25. "உங்க நாய்க்கு ஏன் மூக்குக்கண்ணாடி போட்டு விட்டிருக்கீங்க?"
"பார்சை மங்கிட்டதால ஒரு வாட்டி என்னையே கடிச்சிருச்சு"
26. "ஆப்ரேசன் பண்ணினா பிழைக்க முடியுமா டாக்டர்?"
"நான் பிழைக்கிறதே ஆப்ரேஷன் பண்ணித்தான்"
27. "என்ன சார் இது, நீங்க எழுதின கதை கொஞ்சம் கூட உப்புசப்பில்லாம இருக்கு!"
"கதைய படிக்காம உங்கள யார் சார் நக்கிப் பார்க்கச் சொன்னது"
28. "கல்யாணத்திற்காக வாங்கிய கடன் எப்படி விவசாய கடனாது?"
"கல்யாணம் என்கிறது ஆயிரம் காலத்து பயிர் தானே சார்!"
29. "நேற்றைய விட இன்றைக்கு பரவாயில்லயா?"
"இல்லை டாக்டர்! நேற்று வந்த நர்ஸ்தான் சூப்பர்!"
30. "எனக்காக தாஜ்மகால் கட்டப்போறதா சொல்றீங்களே உண்மையா?"
"இடமெல்லாம் பார்த்துட்டன் நீ செத்ததும் கட்டிட வேண்டியதான்"
31. "ஊசி தான் போட்டாச்சே டாக்டர், மறுபடியும் ஏன் இன்னொரு ஊசி போட சொல்றீங்க?
"நீங்க கொடுத்த நூறு ரூபாய்க்கு சில்லறை இல்ல அதுதான்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. "நான் செத்துட்ட என் ஞாபகமா ஏதாவது கட்டுவீங்களா டார்லீங்?"
கண்டிப்பா, உன் தங்கச்சியை கட்டுவேன் செல்லம்!"

33. "நூறு விலங்குகளின் பெயரைச்சொல்லு"
"ஐம்பது யானை, ஐம்பது சிங்கம் டீச்சர்!"

34. "உலக வரைபடத்தில் இலங்கை எங்கே இருக்குன்னு தெரியலயா! ஏறடா பெஞ்ச் மேலே!"
"பெஞ்ச் மேலே ஏறி நின்னுப் பார்த்தா தெரியுமா சார்?"

35. "காதலுக்கும், 7 : 29 இற்கும் என்ன ஏற்றுமை?
"இது ரெண்டுக்கும் பிறகு தான் ஏழரை ஸ்டார்ட் ஆகும்!"

36. "இருபத்து நான்கு மணி நேர நியூஸ் சானல் வரப்போகுதாம்......"
"அதுக்காக என்ன வேலையை விட்டு தூக்கீடாதைங்க"

37. "தம்பி, இந்த டிரஸ் தீபாவளிக்கு எடுத்ததா......?
"இல்ல, எனக்கு எடுத்தது"

38. "தலைவா! உங்க பேரில் விசாரணைக்குக் கமிஷன் வச்சிருக்காங்க"
"கமிஷனா!... வெரிகுட்! எவ்வளவு கிடைக்குமா?"

39. "அவர் ஏன் காரை ரிவர்ஸ்லயே ஓட்டிட்டு போறார்?"
"காரை விக்கும் போது கி.மீ குறைவா காண்பிக்கணுமாம்."

40. "காசு இல்லாட்டி நாம எதையும் வாங்கமுடியாதுடா...."
"ஏன் கடன் வாங்கலாமே...."

41. "நேற்று உன் மனைவிக்கும், உன் அம்மாவுக்கும் நடந்து சண்டைல, யாருக்கு பின்னாடி நீ நின்ன?"
"போடா நான் பத்திரமா பீரோ பின்னாடி போய் நின்னுகிட்டேன;"

42. "தம்பி தம்பி! இங்க வாவேன். இந்த தெருவில பஞ்சர் எங்க ஓட்டுவாங்க தெரியுமா?"
"ட்யூப்ல் எங்க ஓட்டை இருக்கோ அங்கதான் ஒட்டுவாங்க"

43. "கடவுளுக்கு நம்மை பிடிக்கலேன்னா டாக்டர்கிட்டே அனுப்புறாரு!
டாக்டருக்கு நம்மை பிடிக்கலேன்னா கடவுள்கிட்டே அனுப்புறாரு!

44. "சோப் டப்பால ஏன் சின்ன சின்ன ஓட்டையா போட்டியிருக்காங்க?"
"ஏன்னா பெரிய ஓட்டை போட்டா சோப் கீழ விழுந்துவிடும்"

45. "உங்க ஏரியாவில தங்க வீடு கிடைக்குமா?"
"ஓட்டு வீடு, அபார்ட்மெண்ட் இப்படித்தான் கிடைக்கும்.... தங்க வீடு கிடையாது





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தித்து செயற்படுவோம்" நாடகம் பற்றி

தற்காலத்தில் இளம் சமுதாயம் மது, புகை மற்றும் போதைப் பொருட்களிற்கு அடிமையாகி வருவது சர்வசாதாரன நிகழ்வாக மாறி இருக்கின்றது.

யுத்தத்தின் பின்னர் எமது இளம் சமுதாயம் கல்வி, கலாச்சாரம் மற்றும் விழுமியங்கள் தொடர்பாக சிந்திக்காது இருப்பதற்காக இவைகள் இளசுகள் மீது தாரளமாக அள்ளி வீசப்பட்டுள்ளதென்றே சொல்ல வேண்டும். இதனால் வளர்ந்துவரும் எமது இளம்சமுதாயத்தினர் இவைகளைத் தாரளமாக அனுபவித்து தம் எதிர்காலத்தைச் சீரழித்து வருகின்றார்கள்.

இவ்வாறான போதைப் பொருட்கள் பாவனைகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் என்பவற்றின் அதிகரித்த ஆதிக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை எடுத்து விளக்குவதாகவும் இவற்றில் இருந்து விடுபடுவதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இந்த நாடகம் அமைந்துள்ளது.

குடி மற்றும் போதைப்பொருள் பாவனையால் ஒரு மனிதனின் உள் அங்கங்களில் எவ்வாறான பாதிப்புக்கள் ஏற்படுகின்றது என்றும், இளம் வயதிலேயே கொடிய நோய்களிற்கு உள்ளாகுவதுடன் வாழ்வதற்காய் இறைவன் தந்த வாழ்கை பாதியிலேயே பாழாகிப் போகின்றது என்றும், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொலைக்காட்சி தொடர் நாடகங்கள் என்பன படிக்க வேண்டிய எம் மாணவர்களின் பொண்ணான நேரங்களை எவ்வாறு விழுங்கி அவர்களது எதிர்காலத்தை வீனாக்குகின்றது என்றும் இந்த நாடகம் எடுத்து விளக்குகின்றது.

தற்போது இவற்றிற்கு அடிமையாகிச் செல்லும் எம் இளம் சமுதாயத்தையும் இவர்களைப் பார்த்து வளரவுள்ள எம் சிறார்களது எதிர்காலத்தையும் பற்றி சிந்தித்த பொழுது இப்படியான ஒரு நாடகத்தை எழுதி நெறியாழ்கை செய்து விழிப்புனர்வு அடைய வைப்போம் என்ற சிந்தனை என்னுள் எழுந்தது. அந்தச் சிந்தனைக்கான எழுத்து வடிவமே இந்த நாடகம். ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான விழுப்புனர்வை ஏற்படுத்தும் முயற்சியில் எனது இந்த சிறு எழுத்தும் ஒரு அத்திபாரக் கல்லாக இருக்கும் என்று என்னுகின்றேன்.

இந்த நாடகம் 31.10.2016 அன்று இளவாலை புனித யூதாததேயு ஆலயத்தில் நடைபெற்ற கலை மாலை நிகழ்வில் இந்நாடகம் என்னால் மேடையேற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சிந்தித்து செயற்படுவோம்"

காட்சி 1

உரைஞர் : பித்தலாட்டம் தான்தோன்றித்தனம் எல்லாம் மெத்திப்போய் மெத்தனம் பிடித்து வீதியெங்கும் நர்த்தனம் ஆடுது. இளசுகளிற்கு, பொண்ணான நேரங்கள் காலங்கள் பற்றி எந்தக் கவலையும் இல்லை, கடவுள் பயம், பக்தி என்டதெல்லாம் துண்டறிய இல்லை. இந்தக்காலப் பிள்ளையளைக் கட்டுப்படுத்துறதென்பது கட்டுக்கடங்காத காரியமாய்ப் போச்சு, கட்டுப்பாடாய்இரு கட்டவிழ்ந்து விட்டால் கெட்டுவிடும் இலட்சியம், நினைவிற்கொள்

(பெரிய மதுப் போத்தலை சுமந்தபடி ஒருவர் (இளைஞன் / மாணவன் மேடைக்கு வருதல்)

பாட்டு : பானம் மது பானம்
ஏத்திக் கிட்டா தானே வரும் கானம்
பானம் மது பானம்
அடிச்சிக்கிட்டா தலைக்கேறும் ஞானம்
தூண்டும் எனக்குத் தூண்டும்
புதிய புதிய சிந்தணையைத் தூண்டும்
தோன்றும் எனக்கு தோன்றும்
மேலும் மேலும் ஊத்திக்கவே தோன்றும்

இளைஞன் : பெரியாட்கள் எல்லாரும் குடிக்கினம் நான் குடிச்சா என்னவாம் அவையள் செத்த வீடென்டா குடிக்கினம், கலியாண வீடென்டா குடிக்கினம் நாங்கள் எங்கட நண்பர்கள் பாட்டிவைச்சா குடிக்கக்கூடாதோ, இந்த இன்பங்களை எல்லாம் நாங்கள் அனுபவிச்சுவிடக்கூடாதென்டு, அவர்களிற்கு பொறாமை, இப்ப யாலி பண்ணாட்டி வேற எப்ப யாலி பண்ணுறது

(இதயம், ஈரல், கிட்னி, நுரையீரல் ஆடிக்கொண்டு மேடைக்கு வருதல்)

தாளக்கட்டு : தொம் தகிட தொம்
தொம் தகிட தொம்
தொம் தகிட தகிட தகிட
தொம் தகிட தொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயம்,ஈரல் : தம்பி எங்களை யாரேண்டு தெரிகின்றதா

இளைஞன் : தெரியல

கிட்னி,நுரையீரல் : எங்களை உங்கட் கண்களுக்கு தெரியுதா

இளைஞன் : கொஞ்சம் மப்பா இருக்கு தெரியல

கிட்னி : நாங்கள் எல்லாரும் உங்களுக்குள்ள இருக்கிற உறுப்புக்கள்

இதயம் : எங்களை உங்கட கண்களுக்கு தெரியாது

நுரையீரல் : நாங்கள் எல்லாரும் நீங்கள் சிறப்பாக செயற்படுவதற்கு உங்களிற்குள்ளே இருந்து தொழிற்படும் உறுப்புக்கள்.

இளைஞன் : ஆ......ஓ..... சொல்லுங்கோ என்ன விசயம்

ஈரல் : நீங்கள் சாராயம், புகை, கஞ்சா எல்லாம் குடிக்கிறதால நாங்கள் கஸ்ரப்படுகிறோம்

கிட்னி : அவைகள் எங்கட செயற்பாட்டை பலவீனப்படுத்துது

இளைஞன் : டேய் டேய் நான் நல்ல ஆரோக்கியமானவன் இங்க பா நான் நடக்கிறன், ஓடுறன் ஆடுறன், குடிக்கிறன்

இதயம் : தம்பி Please குடிக்காத என்னால் இரத்த ஓட்டத்தை சீராக மேற்கொள்லேலாம கிடக்கு

நுரையீரல் : தம்பி குடிக்காத என்னால் மூச்சு இழுத்து காற்றை நிரப்பி சிறப்பாக செயற்படமுடியாமல் கிடக்கு

கிட்னி : தம்பி நீ தொடர்ச்சியா குடிக்கிறதால நான் நலிவடைஞ்சு போறன்

ஈரல் : தம்பி இதுகள் உன்னை மகிழ்விப்பதாக நினைச்சு நீ மகிழ்கின்றாய், நான் இதுகலால, கரைஞ்சு கரைஞ்சு அழிஞ்சு கொண்டு போறன்

இளைஞன் : என்ர காசு, என்ர உழைப்பு, நான் குடிப்பன் ...மகிழ்ச்சியா இருப்பன்...நான் நெருப்படா...குடிப்பன் (சிரித்தல்) மகிழ்ச்சி......

உறுப்புக்கள் : Please Please குடிக்க வேண்டாம் குடிக்க வேண்டாம் (எல்லா உறுப்புக்களும் இளைஞனை நோக்கி கெஞ்சுதல், அவருடன் ஒட்டி இருத்தல்)

இளைஞன் : டேய் போங்கடா எல்லாரும் . நான் எவ்வளவு நிதானமாப் போறன் எனக்கு Advice செய்யினம் (ஆடிஆடி வெளியேறுதல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி:- 2

(ஒருபையன் படிக்க வந்து இருத்தல்) (புத்தகத்தை திறந்து படித்தல்) (தாய் **T.V** பார்த்துக் கொண்டு இருத்தல்)

மகன் :- அம்மா எனக்கு இந்த கணக்கு சொல்லித் தாங்கோ

தாய் :- கொஞ்சம் பொறு தம்பி வாறன்

(பல **T.V Channel** களுடன் ஒருவர் நாடகங்களின் பெயர்களை சுமந்த படி செல்லுதல் தாய் பார்த்துக் கொண்டு செல்லுதல்)

மகன் :- அம்மா வாங்கோவன்

தாய் :- வாறன் வாறன் நல்லகட்டம் போகுது படி தம்பி வாறன் (வேறுநாடகம் பார்த்தல்)

மகன் :- அம்மா சாப்பாடு தாங்கோ

தாய் :- கிச்சினுக்க இருக்கு தம்பி போட்டு சாப்பிடுங்கோ (நாடகம் பார்த்தல்)

மகன் :- சீ..சீ.. எனக்கு ஒன்டும் சொல்லித் தருகினமில்லை சாப்பாடு போட்டும் தருகினமில்லை படிக்கிறதும் ஏறாதாம்

(நான்கு **Symbol** களுடன் நான்கு பேர் வருதல் **Face book, Whats App, Viber, I.M.O)**

தாளக்கட்டு : தான தந்தன தந்தன தந்தோம்
தின திந்தின திந்தன திந்தோம்

Face book : தம்பி நிறைய friends, Request பண்ணி இருக்கினம் ஓடிவந்து Accept பண்ணு தம்பி

Whats App : தம்பி செம ஜோக் Vedio ஒன்று உலாவுது ஓடிவந்து பார் தம்பி

Viber : தம்பி நிறைய friends Massage பண்ணியிருக்கினம் வந்து பாரேண்டா பதில போடேன்டா

I.M.O : தம்பி நீ எதில ஊயடட எடுத்தாலும் Clear இருக்காது என்னில் எடுத்த நல்ல Clear ஆயும் இருக்கும் செலவு கம்மியாவும் இருக்கும்.

மகன் : (படிப்பதை நிறுத்திவிட்டு Phone குள் மூழ்கிப் போதல்)
அம்மாடி 12 மணியாப் போச்சுது இனி என்னத்தப் படிச்சு படுப்போம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Across**

01. Crop
04. 'elm
05. plow
08. farm
09. sit
10. bag
14. goose
12. horse

**Down**

01. Colt
02. Pup
03. Cow
06. lamb
07. Cats
08. Fir
09. So
11. goat
12. hog
13. eye







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணித புதிர்கள்


**01.**

| | | | |
|---|---|---|---|
| 12 | 36 | 6 | 2 |
| 8 | 72 | 9 | 1 |
| 18 | 3 | 4 | — |


**02.**




**03.**





**04.**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05**




**06**




**கணித விடைகள்**

பக்க எண் - *51*

*01.* *13*
*02.* *36*

பக்க எண் - *76* - *77*

*01.* *24*
*02.* *21*
*03.* *48*
*04.* *05*
*05.* *03*
*06.* *48*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலையூர் வாலிபரின்...

# நேத்திரம்




## சித்திரமேழி ஞானவைரவர் ஆலயம்-இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org